www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 77

வள்ளுவர் ஆண்டு 2043 தை 27 சனிக்கிழமை (11/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# ராணுவத்தின் ஆட்சியை வட - கிழக்கில் ஒழிக்குக

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து; ஆணைக்குழு அறிக்கையின் தவறுகளையும் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்ரவரி 11

வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து அங்கு சிவில் நிர்வாகத்தைப் பலப்படுத்தப்படவேண்டும் என்று இலங்கை அரசிடம் வலியுறுத்தி இருக்கிறது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி. இராணுவத்தின் துணை ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஆள் கடத்தல்கள், காணாமல்போகச் செய்யப்படுதல் என்பவற்றைத் தடுக்க புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் நேற்று விடுத்த அறிக்கையில் அழுத்தம் கொடுத்துள்ளது.

இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின்

» 23

# ஈழத் தமிழர்கள் ஆள தனிப் பிராந்தியம் தேவை

## ஐரோப்பிய நாடாளுமன்றில் வைகோ பிரேரணை

பிரசல்ஸ், பெப்.11

ஈழத் தமிழர்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய தனிப் பிராந்தியத்தை வழங்கவேண்டும். இதற்காகப் புலம்பெயர் தமிழர்களின் உதவியுடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தி ஐரோப்பிய நாடாளுமன்றில் பிரேரணையொன்றை கொண்டுவருமாறு கோரிக்கை விடுத்துள்ளார் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், தமிழ்நாட்டின் மூத்த அரசியல்வாதியுமான வைகோ.

ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஐரோப்பிய நாடாளுமன்ற நீதிமன்றம் ஆகியவற்றின் கீழாக இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடபகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை உடன் வாபஸ் பெறவேண்டும் என இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க அந்தப் பிரேரணையில் வலியுறுத்தப்பட வேண்டுமெனவும் வைகோ தெரிவித்துள்ளார்.

பிரசல்ஸ் நகரில் நடைபெற்றுவரும் ஐரோப்பிய நாடாளுமன்ற மனித உரிமை

» 4

### இலங்கை விவகாரம் ஜேர்மனியில் ஆராய்வு

இலங்கையில் அமைதி, சட்டம் மற்றும் மனித உரிமை நிலவரம் என்ன எனும் தொனிப்பொருளில், ஜேர்மன் நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் கருத்துப் பகிர்வொன்று இடம்பெற்றுள்ளது. கட்சிப் பிரதிநிதிகள், கல்வியாளர்கள் , மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என பலரும் பங்கெடுத்தனர். "போர்குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதோடு, நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை குறித்தும் பேசப்பட்டது" என்றார் நிகழ்வில் பங்கேற்ற வாசுகி தனராஜா.

### புத்தாண்டுக்கு முன் பொன்சேகா விடுதலை

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் இலங்கை முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகாவை விடுவித்துக்கொள்ள முடியும் என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். சரத் பொன்சேகாவை விடுதலை செய்வது தொடர்பான பேச்சுகள் தொடர்கின்றன என்றும், அவரின் விடுதலையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பேச்சுகளில் எதுவித பாதகத் தன்மையையும் ஏற்படுத்தாது என்றும் அவர் தெரிவித்தார்.

### கொழும்பில் ஆர்ப்பாட்டம்

மாலைதீவு ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பிலுள்ள மாலைதீவு தூதரகத்திற்கு முன்னபாக நேற்று பலடசின்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். மாலைதீவு நாட்டவர்களும் இலங்கையர்களும இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தினர். ஜனநாயகத்தை எங்களிடம் கையளி என்று அவர்கள் குரல் எழுப்பினர்.

### இம்ரான் கான் கூட்டத்தில் குண்டு வெடிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், பாகிஸ்தான் தெஹ்ரீக் ஈ இன்ஸாவ் (பி.ரி.ஐ.) கட்சியின் தலைவருமான இம்ரான் கானின் பரப்புரைக் கூட்டமொன்றுக்கு அருகில் நேற்று இரவு 7 மணியளவில் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார், 11 பேர்காயமடைந்தனர். இம்ரான் கானுக்குக் காயம் எதுவும் இல்லை.

### ஜனாதிபதி மஹிந்த தொலைபேசியில் தொடர்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மாலைத்தீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட்டை தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு அவரது பாதுகாப்பு மற்றும் நலம் குறித்து கேட்டறிந்துள்ளார். இன்று பிற்பகல் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் உரையாடியதாக ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

## பெற்றோல் ரூ.20 டீசல் ரூ.13 ம.எண். ரூ.13

### விலை உயர்கிறது

கொழும்பு, பெப்.11

எரிபொருள்களின் விலைகள் மிக விரைவில் மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளன. இதன்படி, பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவாலும், ஒரு லீற்றர் டீசலின் விலை 13 ரூபாவாலும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 13 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளன.

எண்ணெய் ஏற்றுமதியில் உலகில் இரண்டாவது இடத்தை வகிக்கும் ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைவிதித்துள்ளதன் காரணமாகவே எரிபொருள்களின் விலைகளை உயர்த்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஈரான் மீதான பொருளாதாரத் தடையால் உலகச் சந்தையிலும் எரிபொருள்களின் விலைகள் உயரக்கூடிய சாத்தியம் உள்ளது என பொருளாதார

» 4


இரண்டு நாள் உத்தியோபூர்வ பயணத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்தவுக்கு பாகிஸ்தான் டிக் லாலா விமான நிலையத்தில் வைத்து வரவேற்பளிக்கப்பட்டது.

# ஓட்டோவில் வந்தவர்களால் 16 வயது மாணவி கடத்தல்

யாழ்ப்பாணம், பெப்.11

தென்மராட்சி, கெற்பேலிப் பகுதியில் 16 வயதுப் பாடசாலை மாணவி ஒருவர் ஓட்டோவில் வந்த இனந்தெரியாதோரால் நேற்றுக் கடத்திச் செல்லப்பட்டார் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை அடுத்து தென்மராட்சியில் பதற்றம் நிலவியது.

கச்சாய் பாடசாலை ஒன்றில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவரே கடத்தப்பட்டார் என்று கூறப்படுகின்றது. நேற்றைய தினம் பாடசாலையில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் கெற்பேலிப் பகுதியில் ஆள் நடமாட்டம் குறைந்த வீதியில் வைத்து ஓட்டோவில் வந்த கும்பல் ஒன்று இவரைக் கடத்திச் சென்றது என்று முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

தான் கடத்தப்

» 4

# பிளேக் குழுவினர் மீது அரசு கடும் அதிருப்தி

## முதலில் கூட்டமைப்பைச் சந்திப்பதால் விசனம்

கொழும்பு, பெப்.11

நாளை கொழும்பு வரவுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் துணைச்செயலர் மரியா ஒட்டேரோ மற்றும் உதவி இராஜாங்கச் செயலர் ரொபேட் ஓ பிளேக் ஆகியோர் முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே சந்திப்பதற்குத் தீர்மானித்துள்ளனர். இது அரசுக்குப் பெரும் அதிருப்தியைத் தந்துள்ளதாக ஆளும்கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

முன்னதாக, இராஜாங்கத் திணைக்கள பூகோளக் குற்றவியல் நீதி விசாரணைக்கான தூதுவர் ஸ்ரீபன் ராப்பும் கொழும்பு வந்த கையோடு முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே சந்தித்திருந்தார்.

"ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறையாண்மையுள்ள ஒரு நாட்டிற்கு உயர்மட்ட இராஜதந்திரிகள் வரும்போது அவர்கள்

» 4

# மனிதஉரிமைகள் மேம்பாட்டை கண்காணிக்க அமைச்சர்கள்

கொழும்பு, பெப். 11

இலங்கையின் மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டம் விரைவாக நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்கென அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட உள்ளதாக அரசு நேற்று அறிவித்துள்ளது.

அரசின் இந்தத் திட்டம் குறித்து அரசின் உத்தியோகபூர்வ செய்தி இணையத்தளத்தில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, பஸில் ராஜபக்ஷ, ஜி.எல்.பீரிஸ், மஹிந்த சமரசிங்க, அனுர பிரியதர்சன யாப்பா, டிலான் பெரேரா ஆகியோர் இந்த உபகுழுவில் அங்கம் வகிக்கவுள்ளனர்.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க தொடர்ந்தும், மனித உரிமைகள்

» 4

# பொலிஸ் அதிகாரம் இல்லாவிட்டால் அதிகாரப் பகிர்வில் அர்த்தமில்லை

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,பெப் 11

மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவேண்டியது அவசியம். பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாவிடின் அதிகாரப் பகிர்வின் அர்த்தம் என்ன? அதன் நோக்கமே நிறைவேறாமல் போய் விடும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. பொலிஸ் அதிகாரம் இன் றிச் சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத அதிகாரமற்ற சபைகளாக மாகாண சபைகள் இருப்பது அதிகாரம் எதுவுமே வழங்கப்படாத செயற்பாட்டைவிட மோசமான தாகும். பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வது தற்போதைய அரசியலமைப்பின் ஓர் அங்கம் என்பதாலும் கடந்த கால அரசியலமைப்பு மறுசீரமைப்பு யோசனைகளில் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்

» 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நிம்மதியாக, சுதந்திரமாக வாழக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வே எமது தேவை

## அமெரிக்கத் தூதுவரிடம் கிளிநொச்சி மக்கள் வலியுறுத்து

கிளிநொச்சி, பெப். 11

நிம்மதியாக - சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வு எமக்குத் தேவை அவ்வாறான ஒரு தீர்வையே தமிழ் மக்களாகிய நாம் எதிர்பார்க்கிறோம். எனினும் ஆட்சிக்கு வரும் அரச தலைவர்கள் தமிழ் மக்களுக்குரிய தீர்வைப் பின்தள்ளி விட்டுத் தமது சுயலாப அரசியலிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர். எனவே எமக்கு நிரந்திரத் தீர்வு ஒன்று கிடைக்கச் சர்வதேச சமூகம் அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

> ‘வன்னியில் இராணுவ அடக்குமுறை இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பாதுகாப்பு இல்லை. குறிப்பாக இளம் பெண்களின் பாதுகாப்பு கேள்விக் குறியான நிலையிலேயே உள்ளது. வன்னியில் பரவலாக இந்தப் பிரச்சினை உள்ளது.’

இவ்வாறு நேற்றுக் கிளிநொச்சிக்குப் பயணம் செய்த அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பூகோளக் குற்றவியல் நீதி விசாரணைகளுக்கான சிறப்புத் தூதுவர் ஸ்ரீபன் ராப்பிடம் கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந் துள்ள மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுக்குச் சென்ற விசேட தூதுவர் ராப் நேற்றுக் காலை கிளிநொச்சியில் இரு இடங்களில் மீளக்குடியமர்ந்த மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்தார்.

இதன்போதே தூதுவரிடம் மீளக்குடியமர்ந்த மக்கள் இவ்வாறு வலியுறுத்தினார்கள். தூதுவருடனான சந்திப்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியில் இராணுவ அடக்கு முறை இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பாதுகாப்பு இல்லை. குறிப்பாக இளம் பெண்களின் பாதுகாப்பு ஒரு கேள்விக் குறியான நிலையிலேயே உள்ளது. வன்னியில் பரவலாக இந்தப் பிரச்சினை உள்ளது. படையினரால் தொடர்ந்தும் மக்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். படையினர் அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர்.

அத்துடன் மீளக்குடியமர்ந்த எமக்கு உரிய வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. நான்கு ஆண்டுகளாகத் தறப்பாள் வாழ்க்கை தொடர்கிறது. வீட்டுத் திட்டங்கள் கிடைக்கவில்லை. தொழில் வாய்ப்புக்கள் இல்லை. எமது வறுமை நிலையைப் போக்கும் திட்டம் எதனையும் அரசு முன்னெடுக்கவில்லை.

காணாமற் போனவர்கள் தொடர்பில் ஒவ்வொரு இடமாக நாம் ஏறி இறங்குகிறோம். அவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்பது கூட எமக்குத் தெரியாது. எமது காணிகள் அரசினால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. வயல் நிலங்கள் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவ்வாறான நிலையில் தமிழ் மக்களாகிய நாம் எவ்வாறு சுதந்திரமாக வாழ முடியும்?

எனவே சர்வதேச சமூகம் தான் எமக்கு ஒரு வழியை ஏற்படுத்தித் தர வேண்டும் - என்றனர் அந்த மக்கள். (த-6)

## கடும் கோபத்தில் சவேந்திர சில்வா

நியூயோர்க்,பெப் 11

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா உங்கள் மீது கடும் கோபத்தில் இருக்கிறார் என்று இன்னர்சிற்றி பிரஸின் செய்தியாளர் மத்யூ ரசல் லீயிடம் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொகன்ன தெரிவித்துள்ளார்.

‘எப்போதும் நீங்கள் அவரைப் போர்க்குற்றவாளி’ என்று குறிப்பிட்டுக் குற்றஞ்சாட்டுவதாலேயே அவர் கோபத்தில் இருப்பதாகவும் பாலித ஹொகன்ன கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு நியூயோர்க்கில் உள்ள மிலேனியம் விடுதியில் ஈரான் தேசிய நாளை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட இரவு விருந்திலேயே இன்னர்சிற்றி பிரஸ் செய்தியாளரிடம் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த இரவு விருந்தில் சவேந்திர சில்வாவும் கலந்து கொண்டிருந்தார். அவருடன் இன்னர்சிற்றி பிரஸ் செய்தியாளர் மத்யூ ரசல் லீ உரையாடிய போது, நீங்கள் எப்போதும் எனக்கு எதிராகவே எழுதுகிறீர்கள் என்று சினத்துடன் தெரிவித்துள்ளார்.

பான் கீ மூனின் நிபுணர் குழுவின் அறிக்கையில் தனது படைப்பிரிவுக்கு எதிராகவே குற்றம்சாட்டப்பட்டுள்ளது என்றும் தனக்கு எதிராகத் தனிப்படக் குற்றம்சாட்டப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால் அவரே அந்தப் படைப்பிரிவுக்குத் தலைமை தாங்கியவர் என்று இன்னர்சிற்றி பிரஸ் குறிப்பிட்டுள்ளது. (த)




மாலைதீவு ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் உள்ள மாலைதீவு தூதரகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாலைதீவு நாட்டவர்களும் இலங்கையர்களும் கலந்து கொண்டனர்.

## ஆள்கள் கடத்தும் கும்பல் ஐரோப்பாவில் சிக்கியது

கொழும்பு, பெப். 11

இலங்கையில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஆள்களைக் கடத்தும் வலையமைப்பைச் சேர்ந்த கும்பலை ஒரு வருட காலமாகப் பின்தொடர்ந்து ஐரோப்பியப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

பொலிஸ் மற்றும் நீதித்துறை அதிகாரிகள் இணைந்து நீண்ட நாள்களாக மேற்கொண்ட முயற்சிகளை அடுத்து 27 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் அமைச்சு கூறுகின்றது. அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் அமைச்சு அதனைப் பற்றித் தகவல் தரவில்லை.

கைது செய்யப்பட்டுள்ள 27 பேரும் இலங்கையிலிருந்து பிரான்ஸுக்கு ஆள்களைக் கடத்துவதில் ஈடுபட்டிருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பின்லாந்து, கென்யா, தன்சானியா, துருக்கி ஆகிய நாடுகள் வழியாக இவர்கள் ஆள்களைக் கடத்தி வந்தனர் என்று ஐரோப்பிய பொலிஸார் கூறுகின்றனர்.

கைதானவர்களில் முதன்மைச் சந்தேகநபர் பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ளார். பாரிஸ் பொலிஸார் அவரிடம் நடத்திய நீண்ட விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் நிறுத்தப்பட்டுள்ளார். தொடர்ந்து 23 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் ஏனைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஆவண சாட்சியங்களும் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (உ-01)

### அபினுடன் கைதான இளைஞருக்கு அபராதம்

620 மில்லிகிராம் அபின் போதைப் பொருள் வைத்திருந்த இளைஞருக்கு யாழ். நீதிவான் மா.கணேசராஜா 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கைது செய்யப்பட்ட இளைஞரைப் பொலிஸார் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-4)

## இலங்கை மீதான நடவடிக்கைக்கு குறுக்கே நிற்கக்கூடாது பாகிஸ்தான்

### அந்த நாட்டுப் பத்திரிகை கருத்து

செய்யப்பட்ட போர்க் குற்றங்களுக்கு இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைக்க சர்வதேசம் முயன்று வரும் நிலையில் அதனை பாகிஸ்தான் குழப்பிவிடக் கூடாது; அந்த முயற்சிகளுக்குக் குறுக்கே நிற்கக்கூடாது என்று பாகிஸ்தானின் பிரபல நாளேடு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘டோன்’ என்ற அந்த நாளேட்டில் ‘இலங்கையில் போர்க்குற்றங்கள்’ என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலும் ஈரானிலும் பி.பி.சியின் முகவராகப் பணியாற்றிய பிரான்சிஸ் ஹரிசன் இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார்.

‘‘இலங்கையின் இறுதிப் போரின்போது இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களுக்குக் கொழும்பு அரசைப் பொறுப்புக்கூற வைப்பதற்கு அனைத் துலக சமூகம் நடவடிக்கை எடுக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன. பாகிஸ்தான் அதனைக் குழப்பிவிடக்கூடாது.

ஜெனிவாவில் இந்த மாத இறுதியில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை மீதான பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி பாகிஸ்தானில் மூன்று நாள் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார்.

ஐ.நா. மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் ஐந்து மாதங்களில் மட்டும் 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதைவிட அதிகமாக இருக்கக் கூடும். எனவே நசுக்கப்பட்ட பல ஆயிரம் சிறுபான்மைத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கு பாகிஸ்தான் குறுக்கே நிற்கக் கூடாது’’ - என்று அந்தக் கட்டுரையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

‘‘இலங்கையின் உள்நாட்டுப் போரில் உயிர் பிழைத்தோர், இறப்புகளை இன்னும் கணக்கெடுக்கிறார்கள்’’ என்ற தலைப்பிலான நூல் ஒன்றையும் பிரான்சிஸ் ஹரிசன் இந்த கோடை காலத்தில் லண்டனில் வெளியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-சி)

### மன நோயாளியின் ஆசைக்கு அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ். போதனா வைத்தியசாலையில் யுவதியுடன் பாலியல் தொல்லை கொடுத்த மனநோயாளி ஒருவருக்கு ஆயிரம் ரூபா அபராதமும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. யாழ். பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்தனர்.

வைத்தியசாலையில் பழைய வெளிநோயாளர் பிரிவில் அண்மையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கெனச் சென்றிருந்த யுவதி ஒருவருக்கே மனநோயாளியான இளைஞர் ஒருவர் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதுபற்றி யுவதி அங்கு நின்ற பொலிஸாரிடம் தெரிவித்ததை அடுத்து அவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேக நபர் மனநோயாளி என்பத [illegible] டது. (ஒ-4)

# கொள்ளைச் சந்தேகநபர்களின் பிணை மனுக்கள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.11

நான்கு கொள்ளைச் சம்பவங்களில் தங்க நகைகள் உட்பட 75 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று சந்தேக நபர்களில் இரண்டு பேரின் பிணை மனுக்கள் நேற்று நிராகரிக்கப்பட்டன.

யாழ். நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த நான்கு வழக்குகளும் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. சந்தேக நபர்களான அரியாலை முள்ளி வீதியைச் சேர்ந்த துரைராஜா அன்ரன் அமலநேசன், யாழ். 5ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பத்மநாதன் சுமந்தன் மற்றும் ஏழாலை வடக்கைச் சேர்ந்த இராசதுரை ராகுலன் ஆகிய சந்தேகநபர்கள் சார்பில் அவர்களின் சட்டத்தரணிகள் பிணை கோரியிருந்தனர்.

கடந்த திங்கட்கிழமை இப்பிணை மனுக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டபோது பொலிஸார் தரப்பில் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதையடுத்து நேற்றுவரை அவை ஒத்திவைக்கப்பட்டிருந்தன. மீண்டும் நேற்று வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டபோது 3ஆம் சந்தேகநபர் தவிர ஏனைய இரு சந்தேகநபர்களுக்கும் பிணை வழங்க பொலிஸார் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர்.

அரச தரப்பின் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா வாதாடினார். பயங்கர ஆயுதங்களுடன் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டால் மாத்திரமே புலன்விசாரணைகளை முன்னெடுக்கவும் கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்கவும் முடியும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும் சந்தேகநபர்கள் சார்பாக வாதாடிய சட்டத்தரணிகளான வி.தவபாலன், ரெமீடியஸ், ஜொனிமதுரநாயகம் ஆகியோரும் கடும் வாதங்களை முன்வைத்தனர். எனினும் இரு சந்தேகநபர்களின் பிணைமனுக்களை நீதிபதி நிராகரித்தார். திருட்டுக்காக வெளிமாவட்டங்களிலிருந்து வருபவர்களைக் கைதுசெய்யாது இங்குள்ளவர்களை மட்டும் கைதுசெய்வதில் பொலிஸார் அக்கறை கொண்டுள்ளனர் என்றும் ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர்தான் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாகவும் சட்டத்தரணி றெமீடியஸ் நீதிமன்றில் சுட்டிக்காட்டினார். கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட பல வெளிமாவட்ட நபர்கள் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் இப்பொழுது இங்குள்ள உள்ளூர் கோஷ்டிகள் ஒட்டுமொத்தமாகக் கைவரிசையைக் காட்டிவருகின்றன என்றும் ஸ்ரீகாந்தா பதிலளித்தார். (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உள்நாட்டில் தீர்வு முயற்சி தோற்றுப் போனால்...........

இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்நாட்டிலேயே எட்டப்பட வேண்டும். வெளிநாடுகள் இதில் தலையிடக் கூடாது என்று இலங்கை அரசு கூறுவதை ஏற்கமுடியாது. இந்தப் பிரச்சினை உள்நாட்டில் தீர்க்கப்படவில்லை என்பதாலேயே, அது குறித்து இலங்கை அரசு சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் அவற்றின் கேள்விகளுக்கு பதில் அளித்து வருகிறது. அதனாலேயே பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில், சர்வதேச சமூகத்துடன் நாம் - எமது பிரதிநிதிகள் - பேசிவருகிறோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன். வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்ட நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

வெளிநாட்டுத் தலையீடுகளை ஒரு போதும் தான் ஏற்றுக்கொள்ளமாட்டாது என்று கூறும் அரசு, எதற்காக ஜெனிவாவுக்கும் அமெரிக்காவுக்கும் போக வேண்டும்? வெளி நாடுகளின் நிலைப்பாடுகளும் போக்குகளும் பிடிக்கவில்லை என்றால் அவற்றுக்குப் பதில் அளிக்க வேண்டிய தேவையில்லையே.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசுக்கும் எங்களுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றை எட்ட முடியாத நிலை தொடர்ந்தால் ஏதாவதொரு வெளிநாட்டை நடுநிலையாளராக ஏற்பாடு செய்ய வேண்டிய தேவை வரலாம்.

இவ்வாறு தாம் வழங்கிய மற்றொரு செவ்வியில் கூட்டமைப்பின் தலைவர் கருத்து வெளிப்படுத்தியிருந்தார்.

இதற்கு முன்னரும் பல தடவைகள், வெவ்வேறு அரச தலைமைத்துவங்களுடன் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் காலத்துக்குக் காலம் நடத்திய பேச்சுவார்த்தைகள், தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளைத் தானும் கிடைக்க வகை செய்யவில்லை; வழி திறக்கவில்லை.

பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு உரிய ஜனநாயக உரிமைகளை, முழுமையாக சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சமமாக வழங்கக்கூடாது, வழங்க முடியாது என்ற கொடும் கோட்பாட்டுடனேயே, பெரும் பான்மைத் தலைமைத்துவங்கள் இனப்பிச்சினையை அணுகி வந்தன. அதே தாளக் கட்டுடனேயே மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள், சிங்களத் தலைவர்கள், கீதம் இசைத்து நாட்டின் இனங்களிடையே கண்ணுக்குப் புலப்படாத, செயல் அளவில் உணரப்படாத பிரச்சினையை உண்டாக் கின.

தங்களிடம் இருந்து பிரிக்கப்பட முடியாத அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காக, தமிழர்கள் அகிம்சை வழியில் நடத்திய போராட்டங்களை அரசாங்கங்கள் அடக்கி ஒடுக்கியதாலேயே ஆயுதப் போராட்டம் முகிழ்த்தது. அதனையும் முற்றாக ஒழித்துவிட்ட இப்போதைய அரசு - தான் தருவதையே - அற்ப சொற்பங்களையே பெற்றுக்கொள்ளத் தயாராக வேண்டும். ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதான அதிகாரங்களான காணி, பொலிஸ் அதிகாரங்களை தானும் தர முடியாது என்ற கருங்காலிக் கட்டையை கையில் ஏந்தி நிற்கிறது.

இத்தகைய, கர்ண கொடூரமான அரசியல் பின் புலத்தில், மூன்றாம் தரப்பின் தலையீடு இன்றித் தமிழ் மக்கள் மீதான கட்டை அவிழ்ப்பது மிகக் கடினம் என்ற நிலையில் -

தமிழ் மக்கள் சார்பில் மூன்றாம் தரப்பு ஒன்றின், வெளிநாடு ஒன்றின் மத்தியஸ்தம் மட்டுமன்றித் தலையீடும் தேவைப்படுகிறது. மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட நாடுகள் பலவற்றில் இது நிகழ்ந்துள்ளது.

அடிப்படை விடயங்களான மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்து பேச்சில் இணக்கம் காணப்பட்ட பின்பு தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு தனது உறுப்பினர்களை அறிவிக்கும் என்பது கூட்டமைப்பின் நிலைப்பாடு. மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது. தெரிவுக்குழுவுக்கு தனது உறுப்பினர்களை அறிவித்தால் மட்டுமே கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சு நடத்த இயலும் என்பது அரசின் கிடுக்கிப்பிடி. இதுவே இனப் பிரச்சினை குறித்த சமகாலத் தோற்றம்.

இதன் காரணமாக, ஒரு மாதகாலமாக பேச்சு நடைபெறவில்லை. தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு தனது உறுப்பினர்களை அறிவிக்காவிடில் அனைத்துக் கட்சிகள் மாநாட்டைக் கூட்டி ஆராயப் போவதாக ஜனாதிபதி எச்சரிக்கிறார். இம்மாத இறுதியில் ஆரம்பமாக உள்ள ஜெனிவா மாநாட்டுக்கு முன்பு கூட்டமைப்பைத் தெரிவுக்குழுவுக்குள் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்து விட்டன. தமிழ் மக்களைத் தோற்கடிக்கும் புதிய உத்தியே தெரிவுக்குழுவை அமைப்பதென்ற ஏய்க்காட்டு.

உள்நாட்டில் பேச்சு மூலம் எட்டப்படும் தீர்வை விட, வெளிநாட்டுத் தலையீட்டுடன் நடத்தப்படும் பேச்சு மூலம் எட்டப்படும் தீர்வு தமிழ் மக்களுக்கு கூடுதல் உரிமைகளை வழங்கக் கூடியது. நோர்வேயின் அனுசரணையுடன் புலிகளுக்கும் அரச தரப்புக்கும் இடையில் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சு வார்த்தை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி ஆட்சி முறையைப் பரிசீலனை செய்ய இணங்கிய அளவுக்கு முன்னேறியதை எவரும் மறந்து விடக்கூடாது.

இவற்றை மனதில் கொண்டு அரசு செயற்பட வேண்டும். சமகாலத்தில் இப்போதைய அரசு விட்ட தவறுகளே, இன்று வெளிநாடுகள் இலங்கையைப் பார்த்து விரலை நீட்டும் நிலைமையைத் தோற்றுவித்துள்ளன. ஜெனிவா மாநாட்டுக்குப் பின்பு இந்த நிலைமை மேலும் பலமுறும் சாத்தியம் உண்டு என்று எதிர்பார்க்கலாம்.

சமஷ்டி ஆட்சி முறையானது, பல இனங்கள் வாழும் நாடுகளில், அவற்றிடையே புரிந்துணர்வு, அதன் விளைவான அபிவிருத்தி, பொருளியல் வளர்ச்சி என்பவற்றினூடு தேசம் செழிப்புறவும், மக்கள் மனம் நிறைந்து வாழவும், வித்திட்டுள்ளது. அதனை உணரக் கூடாது என்ற வீம்புடன் கங்கணம் கட்டி நிற்கும் இந்நாடு, ஏதோ ஒரு வகையில் ஆழக் குழியில் வீழ்ந்து அவஸ்தைப்பட நேரிடும் என்பதனை ஆட்சியாளர்களும் அவர்களின் அடி வருடிகளும் எப்போது உணரப் போகிறார்களோ...?!

# போலி நியமனக் கடிதங்கள் கல்வி அதிகாரிகளே உஷார்

யாழ்ப்பாணம்,பெப்.11

போலி நியமனக் கடிதத்துடன் கடமையேற்கவென பாடசாலைகளுக்கு வருபவர்கள் தொடர்பாக விழிப்பாக இருந்து உடனடியாக அறிவிக்குமாறு கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் இவ்வா று அறிவுறுத்தியுள்ளார்.

உயர்கல்வி அமைச்சின் கடிதத் தலைப்புடனான போலி நியமனக் கடிதங்களைக் காட்டி குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களாக இணைந்த சிலர் அண்மையில் இனங் காணப்பட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்தே வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளர்.

மத்திய அரசினால் வழங்கப்படும் ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான பெயர் விவரங்கள் மாகாண திணைக்களத்துக்கும் எமக்கும் அறிவிக்கப்படும். எனவே உயர் கல்வி அமைச்சின் நியமனக் கடிதத்தை ஒத்த போலி நியமனக் கடிதத்துடன் வடபகுதியிலுள்ள பாடசாலைகளில் கடமையேற்க வருபவர்கள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும். அப்படி வருபவர்கள் தொடர்பாக அறியத் தாருங்கள் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

அண்மையில் வெளிப்பட்ட போலி நியமனங்கள் தொடர்பாக உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளோம். அந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் 'உதயனுக்கு'த் தெரிவித்தார். (த-3)

## பாலைதீவுக் கடலில் இந்திய ட்றோலர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.11

குடாக்கடலில் அண்மைக்காலமாக இந்திய மீனவர்களின் ட்றோலர் படகுகளின் அத்துமீறல் அதிகரித்துள்ளதாக குடாநாட்டு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் பாலைதீவுக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் குடாநாட்டு மீனவர்களின் வலைகளை அறுத்து நாசப்படுத்தியுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

கடந்தசில நாள்களாக இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறல் இப்பகுதிக் கடலில் அதிகரித்துக் காணப்படுவதாக உள்ளூர் மீனவர்கள் தெரிவித்தனர்.

இவர்களின் வருகையால் இப்பகுதியில் கடலுணவுகளின்பெருக்கம் குறைந்துள்ளதாகவும் இதனால் உள்ளூர் மீனவர்களாகிய நாம் பாதிக்கப்படுவதாகவும் அவர் கள் கூறுகின்றனர். (த-17)

## பலாலி வீதி அகலிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.11

பலாலி வீதி புனரமைப்பு மற்றும் அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கோண்டாவில் பஸ் டிப்போ சந்தியில் இருந்து இந்த வீதி அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்த வீதியின் அகலிப்புக்காக வீதியோரத்தில் காணப்படும் மரங்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

வீதி அகலிப்புக்கு இடையூறாக காணப்படும் குடியிருப்பாளர்களின் வீட்டு மதில்கள், கட்டடங்கள் என்பவற்றையும் பின்னகர்த்துவதற்கான பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (த-17)

## வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோயில் வானளாவ உயர்ந்த இராஜ கோபுரத்துடன் யாழ்.நகரின் மத்தியில் காங்கேசன்துறை வீதியில் அழகாக அமைந்து கம்பீரத்துடன் காட்சியளிக்கின்றது. உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான், வழிபடும் அடியார்களின் அல்லல்களையும் அவலங்களையும் துன்பங்களையும் துயரங்களையும் நீக்கும் நோக்கில் இந்த ஆலயத்திலே ''வைத்தீஸ்வரன்'' என்னும் திருநாமத்துடன் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

சிவன், நோய்களை மாற்றும் வைத்திய நாதனாக ஸ்ரீமத் வாலாம்பிகையைத் தமது அருட்சக்தி வழங்கும் தேவியாகக் கொண்டு இந்த யாழ்ப்பாணத்துக் கோயிலிலே எழுந்தருளி வாசஞ்செய்கின்றார். இவ்வாறு வழிபடு வோர் துயர் தீர்க்கும் வைத்தீஸ்வரன் ஆலயம் இன்று பாலஸ்தாபனம் செய்யப்படுகின்றது. இது நாம் செய்த புண்ணியப் பேறாகும்.

இந்தக் கோயில் திருத்த வேலைகளின் பொருட்டுப் புனருத்தாரணம் செய்ய இன்று பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நிகழ்கின்றது வரவேற்கத்தக்கது.

ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில் நல்ல முறையில் திருப்பணிகள் நிறைவேறி அருள் கொழிக்கும் ஆலயமாக மிளிர தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டியது சைவ மக்களின் கடமையாகும். இன்று முதல் ஆரம்பமாகும் ஆலயத் திருத்த வேலைகள் யாவும் விரைவில் நிறைவேறி மஹா கும்பாபிஷேகம் நிகழ நாம் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

வேதங்கள் ''ஐயாவென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாக'' விளங்கும் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் உறையும் திருத்தலம் வெகு விரைவில் திருத்த வேலைகள் யாவும் அழகுற முடிவுற்று அவனருளாலே அவன் தாள் வணங்க அவனருளையே நாடி நிற்போமாக.

சிவநெறிக்கலாநிதி. இராசையா ஸ்ரீதரன்

# நிகழ்வுகள் இன்று

### பாராட்டுவிழா

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபராகப் பணியாற்றிய யாழ். வலய பிரதிக்கல்விப் பணிப்பாளராக உயர்வு பெற்றுள்ள இ.குணநாதனின் சேவைநலன் பாராட்டுவிழா காலை 8.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. விழாநாயகன் நீர்வேலி கந்தசுவாமி கோயிலிலிருந்து விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்படவுள்ளார். (த-13)

### ஆண்டு நிறைவு விழா

கோப்பாய் மக்கள் வங்கிக் கிளையின் ஆண்டு நிறைவு விழா பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வங்கி முகாமையாளர் எ.எ.சதீஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் எம். பிரதீபன் கலந்து கொள்வார். (த-14)

### கூட்டம்

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச்சங்கத்தின் பத்தாவது வருடாந்த பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு கன்னாதிட்டியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிராந்தியக் காரியாலய மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரண, உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த வங்கிப்பணியாளர்களின் பிள்ளைகள், டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்த வங்கியாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப் படவுள்ளனர். (த-14-16)

### தெரிவுப் பரீட்சை

தரம்-6 மாணவர்களுக்கான மாகாண மட்ட கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சைக்கான முதலாவது தெரிவுப் பரீட்சை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் ஏனைய மாவட்ட மாணவர்களுக்கு வவுனியா சீ.சீ.த.க. பாடசாலையிலும் நடைபெறும். (த-14)

### உறுப்பினர் தெரிவு

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் தர்மகர்த்தா சபை உறுப்பினர்களுக்கான தெரிவு முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட நீதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது. (த-14)

### ஆங்கில தினம்

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம், வளர்மதி நிறை வாழ்வகம் ஆகியன இணைந்து நடத்தும் ஆங்கில தின விழாவும், விருது வழங்கும் நிகழ்வும் பிற்பகல் 3 மணிக்கு வளர்மதி வேலாயுதப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14)

### பரிசளிப்பு விழா

ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவு தினவிழாவும், பரிசளிப்பு விழாவும் காலை 9.30 மணிக்கு யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியின் ஜிபிலி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14)

### பிரிவுபசாரம்

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர் சிக்கன சேமிப்பு கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான பிரிவுபசார விழா காலை 9 மணிக்கு சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் க.நா.சபாரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கலந்து கொள்வார். (த-14-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகர வருமான இழப்பு உரிய விசாரணைகள் நடக்குமா?

யாழ். மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய பல கோடி ரூபா வருமானத்தை தன்னிச்சையாக தனியார் ஒருவருக்குத் தாரை வார்த்து கொடுத்துள்ள யாழ். மாநகர முதல்வரின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றில் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான வினா வேளையில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரிடமே இக் கேள்வி எழுப்பப்பட்டது

நாடாளுமன்றத்தில் நேற்றைய ஒழுங்குப் பத்திரத்தில் அவருடைய கேள்வியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

*யாழ். மாநகரில் கைவிடப்பட்ட சதுப்புநிலம் ஒன்றில் நான்கு மாடி வர்த்தகக் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு தனியார் ஒருவருக்கு யாழ். மாநகர சபையின் மேயர் தன்னிச்சையாக அனுமதி வழங்கியுள்ளார்.

*அமரர் நடராஜா ரவிராஜ் யாழ். மாநகர மேயராக இருந்த காலத்தில் மேற்படி சதுப்பு நிலக் காணியில் நான்குமாடிக் கட்டடம் ஒன்றை அமைக்க மண்வள ஆய்வுகள் நடத்தப்பட்ட போது பொருத்தமற்ற இடம் என்று அது கைவிடப்பட்டது.

*ஆனால் சாத்தியக் கூற்று மற்றும் மண்வள ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படாமல் இப்போது நான்கு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

*பொருத்தமற்ற இந்த சதுப்பு நிலத்தில் இந்தக் கட்டடம் அமைக்கப்படுவதால் எதிர்காலத்தில் உயிர் மற்றும் சொத்து இழப்புகளும் ஏற்பட வாய்ப்புண்டு.

*கட்டடம் அமைப்பதற்கு முன்னரே கடைத்தொகுதிகள் பலகோடி ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளன.

*ஒருகடைக்குஒருகோடியே 90 லட்சம் ரூபா விலை நிர்ணயிக்கப்பட்ட போதும் ஒரு கோடியே 10 லட்சம் ரூபாவுக்கு மட்டுமே உறுதி எழுதப்பட்டு முற்பணமாக தலா 56 ஆயிரம் பெறப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ். மாநகர சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டுள்ளதுடன் பெரும் வரி ஏய்ப்பு மோசடியும் இடம் பெற்றுள்ளது.

எனவே மேற்கூறப்பட்ட நிலைமையைத் தடுப்பதற்கு ஆரம்பகட்ட விசாரணையை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா? என ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கேள்வி நேரத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் சபையில் இல்லாததால் சக உறுப்பினர்கள் கேள்வியை அவரின் சார்பில் கேட்டனர் எனினும் இந்தக் கேள்விக்கான விடை கிடைக்கவில்லை. விடை அளிப்பதற்கு கால அவகாசம் கேட்டார் அமைச்சர் தினேஷ் குணவர்தன.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீர வீர கொடி தலைமையில் கூடியது.

வழமையான சபை நடவடிக்கைகளின் பின் வாய் மூல விடைக்கான கேள்விகள் கேட்கப்பட்டன.

### பௌத்த விகாரைக் காணி புத்தர் சிலையுடன் வங்கியில் அடைவு வைக்கப்பட்டுள்ளதாம்

ஜே.வி.பி. உறுப்பினரான அனுர குமார திஸநாயக்க ''லங்கா புத்ர வங்கி'' தொடர்பாக கேள்வி ஒன்றை எழுப்பினார்.

''லங்கா புத்ர வங்கி நடுத்தர மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு உதவும் வகையிலேயே ஆரம்பிக்கப்பட்டது எனப் பிரதி நிதி அமைச்சர் கூறுகின்றார். ஆனால் இந்த வங்கி மூலம் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு எந்தவிதமான பயனும் கிட்டவில்லை.




மாறாக 13 முக்கிய பெரும் தனவந்தர்களுக்கு பல கோடி ரூபாவைக் கடனாக வழங்கி உள்ளது. அதில் 36 சதவீதம் அறவிடப்பட முடியாது நிலுவையில் உள்ளது. வங்கியும் வங்குரோந்து நிலையை அடைந்துவிட்டது.

இதில் ஒரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆலம்பிட்டிய என்ற இடத்தில் உள்ள பௌத்த விகாரைக்குச் சொந்தமான காணியை புத்தர் சிலையுடன் சந்தன என்ற நபர் இந்த வங்கியில் அடைவு வைத்து முப்பது லட்சம் ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளார்.

அதுதான் வேடிக்கை'' என்றார் அனுர குமார திஸநாயக்க.

பதில் அளித்த பிரதி நிதி அமைச்சர் கீதாஞ்சனா குணவர்த்தனா -

''இவ்விடயம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்'' என மிகவும் சுருக்கமாகப் பதிலளித்துவிட்டார்.

நேற்று நாடாளுமன்றில் 15 வாய்மூல விடைக்கான கேள்விகள் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் உறுப்பினர்கள் சபையில் இல்லாததினால் அனேகமான கேள்விகளுக்கு விடையளிக்க கால அவகாசம் கேட்கப்பட்டது.

### 700 பேருக்கு புதிதாக சிறுநீரக நோய் 480 பேர் மரணம்

ஜே.வி.பி. உறுப்பினரான அனுர குமார திஸநாயக்க நாட்டில் தினம் அச்சுறுத்தலாகத் தோன்றியுள்ள சிறுநீரக நோய்ப் பாதிப்புத் தொடர்பாக சபையில் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

''வடமத்திய, மற்றும் ஊவா மாகாணங்களில் சிறுநீரக நோய்ப் பாதிப்பு தினம் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. தலா ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது'' என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

### அமைச்சரின் விளக்கம்

''வடமத்திய மாகாணத்தில் கடந்த ஐந்து வருடத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட 13,811 பேர் அடையாளங் காணப்பட்டுள்ளனர். 480 பேர் உயிரிழந்துள்ளனர். கூடுதலாக விவசாயிகளே பாதிக்கப்பட்டுள்ளனர்.

நோய்க்கான காரணிகள் 100 வீதம் கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் பெரும்பாலும் நீரினால் ஏற்படுகின்றது என கண்டறியப்பட்டுள்ளது.

குடிதண்ணீரில் காணப்படும் கல்சியம், குளோரைட் போன்றவையும் மந்த போசனமுமே காரணிகளாகும். குடிதண்ணீரைச் சுத்திகரிக்கவும் உவர் நீரை நன்னீராக்கவும் 72 மில்லியன் ரூபா செலவில் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வடமத்திய மாகாணம் உட்பட நாட்டின் பிரதான வைத்தியசாலைகளில் விசேட பரிசோதனைக் கூடங்களும் சிகிச்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

700 பேருக்குப் புதிதாக சிறுநீரக மாற்றுச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 3,800 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அதேவேளை சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு 500 ரூபா முதல் 1,500 ரூபா வரை விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

இந்தத் தொகையை 3,000 ரூபாவாக அதிகரிக்க அமைச்சரவைப் பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் அனுர குமாரவின் குற்றச்சாட்டுக்களை மறுக்கிறேன்''- என்று பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க கூறினார்.

### அறிக்கை சமர்ப்பிக்க ரணிலுக்கு மறுப்பு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக ஐ.தே.க. வின் நிலைப்பாடு தொடர்பான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க முன்வந்தார்.

இதனால் சபாநாயகரின் முன்னனுமதியின்றி சிறப்பு அறிக்கையை சமர்ப்பிக்க முடியாது என்று பிரதி சபாநாயகர் மறுத்து விட்டார்.

எனினும் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடமும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியிடமும் தனது அறிக்கையின் பிரதிகளை நேரடியாகச் சென்று கையளித்ததைக் காணமுடிந்தது.

நேற்று வெள்ளிக்கிழமை வழமைபோல் காலஞ்சென்ற சபை உறுப்பினர்களுக்கான அனுதாபப் பிரேரணைகள் இடம்பெற்றன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஷெல்டன் ரண ராஜா, எச்.எம்.டி.பி. கேரத் ஆகியோருக்கான அனுதாப உரைகள் இடம்பெற்றன.

சபையில் இருதரப்பு ஆசனங்களும் வெறிச்சோடிக் காணப்பட்டன. காலஞ்சென்ற உறுப்பினர்களின் உறவினர்கள் சபாநாயகர் கலரியில் இருந்தனர்.

சோபை இழந்த நிலையில் சபைக் கூட்டம் கலைந்தது. (ஒ-உ)

## பொலிஸ் அதிகாரம் இல்லாவிட்டால் அதிகாரப் பகிர்வில் அர்த்தமில்லை

1 » ளமையினாலும் அதனை நடை முறைப்படுத்தாமல் இருக்கின்றமைக்கு நியாயமான காரணத்தைக் கூற முடியாது எனவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் அரசு முன்னுக்குப் பின் முரணான வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளது. பொலிஸ் அதிகாரத்தைப் பகிர முடியாது என்று ஜனாதிபதி பகிரங்கமாகக் கூறினாலும் நாட்டின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதாகவும் அதனை அடிப்படையாகக் கொண்டு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்குச் செல்வதாகவும் ஜனாதிபதி இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணாவிடம் கூறியுள்ளார். கிருஷ்ணா அந்த விடயத்தைக் கூறியபோது அதனை எதிர்க்காத ஜனாதிபதி தற்போது அது தொடர்பில் தனக்குப் பொறுப்பு இல்லை என்று காட்ட முயற்சிக்கின்றார். பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பில் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை அரசுக்குத் தெளிவாகத் தெரியும். அப்படியானால் அரசின் நிலைப்பாடு என்ன? பொலிஸ் அதிகாரத்தைப் பகிர வேண்டியதன் அவசியத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகத் தெரிவித்துவருகின்றது.

இலங்கையின் அரசியலமைப்புக்கு அமைவாக பொலிஸ் அதிகாரத்தைப் பகிரும் செயற்பாடு அவசியமாகும். விசேடமாக அனைத்து மாகாணங்களுக்கும் பொலிஸ்படை ஒன்றை உருவாக்குவது அரசியலமைப்பின்படி அவசியம். தற்போது அரசியலமைப்பின் கீழ் அதிகாரத்தைப் பகிர்வதற்கு தேவையான ஏற்பாடுகளில் 9 ஆவது பிரிவுக்கு அமைய பொலிஸ் அதிகாரம் குறித்து கூறப்பட்டுள்ளதுடன் மாகாண சபை பட்டியலில் முதலாவது இடத்தையும் பிடித்துள்ளது. - என்றார்.(த)

## பிளேக் குழுவினர் மீது அரசு கடும் அதிருப்தி

1 » முதலில் இராஜதந்திரக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றவேண்டும். இதன்படி அவர்கள் அரச பிரதிநிதிகளையே முதலில் சந்திக்கவேண்டும். அதைவிடுத்து, கட்சிகளின் தலைவர்களை சந்திப்பதும் அதன் பின்னர் அரச பிரதிநிதிகளைச் சந்திப்பதும் தவறான நடைமுறை'' என்று பெயர் குறிப்பிட விரும்பாத ஜனாதிபதிக்கு நெருக்கமான அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

''இவ்வாறான செயற்பாடுகள் தொடருமானால் அரசு அதனை அனுமதிக்காது. உரிய நேரத்தில் நாம் எமது ஆட்சேபணையை வெளிப்படுத்துவோம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பிளேக்குடனான சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் எம்.ஏ.சுமந்திரன் தமிழ் மக்களின் உணர்வுகளைக் கூட்டமைப்பு இந்தப் பேச்சின்போது முன்வைக்கும் என்று குறிப்பிட்டார். (உ-சி)

## பெற்றோல் ரூ.20; டீசல் ரூ.13; ம.எண். ரூ.13

1 » நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவ்வாறானதொரு நிலை ஏற்படுமானால், எரிபொருள்களின் விலை உயர்வில் அது மீண்டும் தாக்கத்தை ஏற்படுத்தும் என உள்நாட்டு நிபுணர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

இலங்கை 70 சதவீதமான மசகு எண்ணெய்யை ஈரானிலிருந்தே இறக்குமதி செய்கின்றது. இதற்கு ஈரான் அரசு மூன்று மாதகால கடன் நிவாரணத்தை இலங்கைக்கு வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, ஈரான் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை இலங்கையை நிச்சயம் பாதிக்கும் என்பதுடன், பொருளாதாரத்தையும் ஆட்டம் காணச் செய்யுமென முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் ஈரானிடமிருந்து மட்டுமின்றி ஏனைய நாடுகளிடமிருந்தும் மசகு எண்ணெயை இறக்குமதி செய்வது தொடர்பாக அரசு பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றது. (உ-சி)

## ஈழத் தமிழர்கள் ஆள தனிப் பிராந்தியம் தேவை

1 » கள் ஆணையகத்தின் உப கூட்டத்தொடரிலேயே வைகோ இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஈழத் தமிழர்களுக்கு சுயாட்சி கிடைக்கப்பெற வேண் டும் என மேற்குலகம் உள்ளிட்ட சர்வதேச சமூகம் வலியுறுத்தி வரும் நிலையில், வைகோவின் இந்த நடவடிக்கையானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, சூடானிலிருந்து தென் சூடானை தனி நாடாகப் பிரிப்பதற்கு அண்மையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அது தனிநாடாகப் பிரிந்துள்ளது தெரிந்ததே.

அத்துடன், இந்திய தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர் வைகோ முன்வைத்துள்ள இந்தக் கோரிக்கை குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் கவனம் திரும்பியுள்ளதை அறியமுடிகின்றது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இம்மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஐரோப்பிய நாடாளுமன்ற மனித உரிமை கள் ஆணையகத்தில் இவ்வாறானதொரு விடயம் குறித்துப் பேசப்பட்டுள்ளமை சர்வதேசத்தின் கவனத்தை முழுமையாகத் தமிழர்களின் பக்கம் திருப்பியுள்ளது என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை, ஐரோப்பிய நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கை குறித்து இலங்கை அரசு தனது இராஜதந்திரிகளின் ஊடாக முக்கியமான தகவல்களை அறிந்து வருகின்றது என அரச உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-சி)

## மனித உரிமைகள் மேம்பாட்டை கண்காணிக்க அமைச்சர்கள்

1 » தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவராகப் பணியாற்றுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு வேண்டிய சட்ட ஆலோசனைகளை வழங்க, முன்னாள் சட்டமாதிபர் மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டம் கடந்த வருடம் செப்டெம்பர் மாதத்தில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அதன் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படுவதைக் கண்காணிக்க இப்போதே அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் ஜெனிவாவில் ஆரம்பமாக உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அரசின் இந்த அறிவிப்பு வந்துள்ளது. (உ-01)

## ஓட்டோவில் வந்தோரால் 16 வயது மாணவி கடத்தல்

1 » கடத்தப்பட்டது குறித்து அந்த மாணவி தனது தாய்க்குத் தொலைபேசியிலிருந்து குறுந் தகவல் அனுப்பி வைத்தார் என்றும் அவரது தாயார் கொடிகாமம் பொலிஸ் நிலையதில் செய்த முறைப்பாட்டில் கூறியுள்ளார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(உ-9-4-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.11

கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தேசிய சேமிப்பு வங்கியில் கணக்கு வைத்துள்ள மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதனை முன்னிட்டு யாழ்.நாவலர் வீதி தேசிய சேமிப்பு அஞ்சல் வங்கிக் கிளை மற்றும் தபால் அலுவலங்களில் தேசிய சேமிப்பு வங்கிக் கணக்குகளாக ஹப்பன், ஸ்மைல் ஆகிய கணக்குகளை வைத்திருக்கும் மாணவர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. (ம-14)

# தோட்ட நிலங்களில் முளைக்கும் கட்டடங்கள்

வடமராட்சி,பெப்.11

நெல்லியடிப் பகுதியில் தோட்ட நிலங்களில் புதிது புதிதாக வியாபார நிலையக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மாலுசந்தி தொடக்கம் நெல்லியடி ஊடாக நாவலர் மடம் வரையான பகுதிகள் ஒரே வர்த்தக மையமாக அதிவேகமாக மாறிவருகின்றன.

நெல்லியடி மையப் பகுதி தவிர்ந்த நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை வீதியில் மாலுசந்தி வரைக்கும் நெல்லியடியிலிருந்து யாழ். பிரதான வீதியில் நாவலர் மடம் வரைக்கும் வீதியோரமாக இருந்த தோட்ட நிலங்களில் பல புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு விடப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட வீதியில் எஞ்சியுள்ள தோட்ட நிலங்களிலும் புதிய புதிய கட்டடங்கள் வர்த்தக நிலையங்களை நிறுவுவதற்காக கட்டப்பட்டு வருகின்றன.

இந்தத் தோட்ட நிலங்களில் வெங்காயம், மரக்கறிவகைகள்,கீரை என்பன கடந்த காலங்களில் பயிரிடப்பட்டு சிறந்த அறுவடை மேற்கொள்ளப்பட்டது.

நெல்லியடிப் பட்டணம் அதிவேகமாக வியாபாரப் பட்டணமாக வளர்ந்து வருவதால் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியையடுத்தே தனியார் நிறுவனங் களும், வர்த்தக நிறுவனங்களும் குறிப்பிட்ட தோட்டக் காணிகள் அமைந்துள்ள வீதியோரங்களில் கட்டடங்களைப் பெற்றுக்கொள்வதில் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதன் காரணமாக குறிப்பிட்ட வீதிகளில் தினமும் புதிய புதிய கட்டடங்கள் உருவாகி நெல்லியடிப் பகுதி பிரதான வர்த்தக மையப் பகுதியாக பெரிதாக மாற்றம் கண்டுவருகின்றது. (ம-8)

## விதிகளை மீறிய வர்த்தகருக்கு 51ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி, பெப்.11

பாவனையாளர் சட்ட விதிகளை மீறிய தென்மராட்சிப் பிரதேச வர்த்தகர்கள் 16 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 51 ஆயிரம் ரூபா அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையின் மாவட்ட அலுவலர் ந.சிவசீலன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரி, கொடிகாமம், வரணி ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது கடந்த நவம்பர் மாதம் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அகப்பட்ட 16 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் எ.எ.ஆனந்தராஜா திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த 5 வர்த்தகர்களுக்குத் தலா நான்காயிரத்து ஐந்நூறு ரூபா வீதமும் பொருள் களின் குறித்த விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய 8 வர்த்தகர்களுக்குத் தலா மூவாயிரம் ரூபா வீதமும் வர்த்தக நிலையங்களில் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாத 3 வர்த்தகர்களுக்குத் தலா ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் அபராதம் விதித்தார். (ம-14-9)

காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த 5 வர்த்தகர்களுக்குத் தலா நான்காயிரத்து ஐந்நூறு ரூபா வீதமும் பொருள் களின் குறித்த விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய 8 வர்த்தகர்களுக்குத் தலா மூவாயிரம் ரூபா வீதமும் வர்த்தக நிலையங்களில் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாத 3 வர்த்தகர்களுக்குத் தலா ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் அபராதம்.

## மீண்டும் செயற்பட ஆரம்பித்த மருதங்கேணி உப அலுவலகம்

யாழ்ப்பாணம், பெப்.11

வடமராட்சி கிழக்கு - பருத்தித்துறை பிரதேச சபையின் மருதங்கேணி உப அலுவலகம் நேற்று மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

பொதுமக்களது தேவைகளை மிக வினைத்திறனுடன் முன்னெடுக்கவே இந்த மருதங்கேணி உப அலுவலகம் பருத்தித்துறை பிரதேச சபையால் மீண்டும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அங்கு பணியாற்றிய 3 சபை அலுவலர்கள் உடன் இடமாற்றம் செய்யப்பட் டுள்ளனர்.

மீள ஆரம்பிக்கப்பட்ட உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரியாக திருமதி கோசலா லோரன்ஸ் சபை செயலாளரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வாசகர்கள், கல்விமான்களது நலன்கருதி புதுப்பொலிவுடன் பொது நூலகமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ம)

## கிளைக்குழு தேர்தல் இன்று

கைதடி வடக்கு, கைதடி மத்தி, கைதடி மேற்கு, கைதடி தெற்கு, நாவற்குழி சிறிய கூட்டுறவு நகர், கோயிலாக்கண்டி, கைதடி – நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி நாவற்குழி தெற்கு, கோயிலாக் கண்டி மத்தி ஆகிய 11 கிளை நிலையங்களுக்கு இந்தக் கிளைக்குழு தெரிவு இடம்பெறும்.

யாழ்ப்பாணம், பெப்.11

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை குழுத் தெரிவுக்கான தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது என்று கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

கைதடி வடக்கு, கைதடி மத்தி, கைதடி மேற்கு, கைதடி தெற்கு, நாவற்குழி சிறிய கூட்டுறவு நகர், கோயிலாக்கண்டி, கைதடி-நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி நாவற்குழி தெற்கு, கோயிலாக் கண்டி மத்தி ஆகிய 11 கிளை நிலையங்களுக்கு இந்தக் கிளைக்குழு தெரிவு இடம்பெறும். சகல கிளைகளுக்கும் முற்பகல் 10 மணிக்குத் தேர்தல் நடைபெறும்.

இந்தக் கிளைக்குழு உறுப்பினர் தெரிவைத் தொடர்ந்து சங்கத்தின் பொதுச் சபையும் விரைவில் கூடி புதிய இயக்குநர் சபை தெரிவுகளும் இடம்பெறவுள்ளன. (த-17)

## அனலைதீவு சங்கத்துக்கு விரைவில் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், பெப்.11

அனலைதீவு பல.நோ.கூ. சங்கத்துக்குச் சொந்தக் கட்டடம் அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

இதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்சமயம் அனலைதீவு ப.நோ.கூ. சங்கம் தனியார் ஒருவரின் வீட்டிலேயே இயங்குகிறது. இதனால் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சில கஷ்டங்கள் ஏற்படுவதாகவும் சங்கத்துக்குச் சொந்தமாகக் காணி உள்ளதால் அதில் புதிய கட்டடத்தை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ம-7)

## அரைமணிக்கு ஒரு சேவை

வடமராட்சி, பெப்.11

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு அரைமணி நேரத்துக்கு ஒரு சேவையை இலங்கை போக்குவரத்துக்குச் சபையின் பருத்தித்துறை டிப்போ தற்போது நடத்தி வருகின்றது.

உள்ளூர் பஸ் சேவையை அதிகரிக்கும் நோக்கமாகவும் பயணிகளின் முறைப்பாடுகளை அடுத்தும் அரை மணி நேரத்துக்கு ஒரு சேவையை நடத்த ஆரம்பித்துள்ளதாக பருத்தித்துறை டிப்போ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-8)

## திருமணம் செய்வதாகக் கூறி 5 லட்சம் ரூபா கறந்த ஆசாமி

யாழ்ப்பாணம்,பெப்.11

திருமணம் செய்வதாகக் கூறிப் பதிவு செய்து பெண் ஒருவரிடமிருந்து 5 லட்சம் ரூபாவைப் பெற்று கொழும்புக்குத் தப்பிச் சென்று மோசடி செய்த கைதடி மேற்கைச் சேர்ந்த இளைஞர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஐயாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார்.

குறித்த மோசடிப் பேர்வழிக்கு எதிராக யாழ். நீதிமன்று பிடிவிறாந்து பிறப்பித்திருந்தது. சந்தேகநபர் யாழ்ப்பாணத்திலுள்ள திரையரங்கு ஒன்றின் முன்னால் நின்றிருந்தபோது பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர் ஒருவரால் அடையாளம் காணப்பட்டுவிட்டார். சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்று பிடிவிறாந்து பிறப்பித்திருப்பதை பெண்ணின் உறவினர் அங்கு நின்ற இராணுவத்தினருக்குத் தெரிவித்ததையடுத்து இராணுவத்தினர் சந்தேகநபரைக் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் 32 வயதான பிரஸ்தாப சந்தேகநபரை யாழ். நீதிமன்றில் முன்னிலைபடுத்தியபோது அவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதையடுத்து யாழ். சிறைச்சாலையில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவரைத் தான் திருமணம் செய்வதாகக்கூறி இவர் பதிவு செய்து கொண்டுள்ளார். அதனையடுத்து பெண்ணிடமிருந்து 5 லட்சம் ரூபாவைப் பெற்றுக் கொண்டுள்ளார். பணத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் கொழும்புக்குத் தப்பிச் சென்றுவிட்டார். அங்கு சென்ற பின்னர் பிரஸ்தாப பெண்ணுடன் தொடர்பு கொண்டு தான் இனிமேல் யாழ்ப்பாணத்துக்கு வரப் போவதில்லை எனவும், திருமணம் செய்யப் போவதில்லை எனவும், வெளிநாட்டுக்குப் போகவுள்ளதாகவும் கூறிவிட்டு அன்றிலிருந்து பெண்ணுடனான சகல வழித்தொடர்புகளையும் துண்டித்துவிட்டார்.

பாதிக்கப்பட்ட பெண் தனக்கு நேர்ந்த சம்பவம் பற்றி சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் ஊடாக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். இது தொடர்பான விசாரணை நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் கடந்த 31 ஆம் திகதி எடுத்துக்கொள் ளப்பட்டது.

இதன்போது சாட்சியமளித்த பிரஸ்தாப பெண், சந்தேகநபர் தெரிவித்திருந்த விடயங்களை நீதிவான் முன்னிலையில் கூறினார். சந்தேகநபர் வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்ல முயல்கிறார் என்பது கண்டறியப்பட்டதை அடுத்து அவருக்கு எதிராக மன்று பிடிவிறாந்து பிறப்பித்தது. மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேகநபர் வெளிநாடு செல்வதற்கு முன்னர் அதனைத் தடுப்பதற்குரிய பல வழிமுறைகளை விதிக்குமாறு மன்றில் கோரியிருந்தார் . அதனடிப்படையில் இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கும் பிடிவிறாந்து உத்தரவு அனுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கொழும்பிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தராக இருந்த சந்தேகநபர் யாழ்ப்பா ணத்துக்கு வந்திருந்தபோதே திரையரங்கு ஒன்றின் முன்னால் வைத்து கடந்த 4 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த வழக்கு புதன் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆஜராகி பிணைகோரியிருந்தார். அதனடிப்படையில் ஒவ்வொரு மாதமும் மனுதாரரான பெண்ணுக்கு 6 ஆயிரம் ரூபா வீதம் செலுத்தும்படி மன்று உத்தரவிட்டது. சந்தேகநபர் அதனை ஏற்றுக்கொண்டதை அடுத்து ஐயாயிரம் ரூபா ரொக்கப் பிணையி லும், ஒரு லட்சம் ரூபா ஆட்பிணையிலும் விடுவிக்கப்பட்டார். இது தொடர்பான அடுத்த விசாரணை அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-4)

பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர் ஒருவரால் அடையாளம் காணப் பட்டுவிட்டார்.

## அல்லைப்பிட்டி பகுதியில் டெங்கு ஒழிப்பு மும்முரம்

யாழ்ப்பாணம், பெப்.11

அல்லைப்பிட்டிப் பகுதியில் டெங்கு மலேரியா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். வைத்திய அதிகாரி அலுவலகமும் பிராந்திய மலேரியா தடுப்புப் பிரிவினரும் டெங்கு ஒழிப்பு, மலேரியா தடுப்பு நடவடிக்கைகளில் தீவிர செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். அல்லைப்பிட்டி பகுதியில் பல இடங்களில் கழிவு நீர் தேங்கிக் காணப்படுகிறது.

இதனால் டெங்கு நோய் பரவக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கலாம் என்பதால் வேலணைப் பிரதேச சபையின் தலைவர் குழுவினர்களும் துரித தடுப்பு நடவடிக்கைகளில் சுகாதாரப் பகுதியுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

இந்தக் குழுவினர் வீடுகள் தோறும் சென்று பார்வையிடுவதுடன் நுளம்புக் குடம்பிகள் இனங்காணப்படும் பகுதிகளில் பொதுமக்களுக்கு அறிவுரைகளை வழங்கி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

இனங்காணப்பட்ட நோயாளர்களின் வீடுகளுக்குச் சமீபமாகவுள்ள சூழல்களில் புகையூட்டல் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

இனங்காணப்பட்ட நோயாளர்களின் வீடுகளுக்குச் சமீபமாகவுள்ள சூழல்களில் புகையூட்டல் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தடை செய்த உபகரணங்கள் மூலம் குடாக்கடலில் தொடர்ந்தும் மீன்பிடி

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ்.குடாக்கடலில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீனவர்கள் தொடர்ந்தும் தொழிலில் ஈடுபட்டு வருவதாக யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தங்கூசி வலையைப் பயன்படுத்தியும் இழுவைப் படகு மூலமும் இந்தச் சட்டவிரோத மீன்பிடித் தொழிலில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

**தடை செய்யப்பட்ட இந்த மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடி தொழிலில் ஈடுபட வேண்டாம் என்று ஏற்கனவே மீனவர்களுக்குப் பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டுவிட்டன.**

தடை செய்யப்பட்ட இந்த மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட வேண்டாம் என்று ஏற்கனவே மீனவர்களுக்குப் பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டுவிட்டன.

எனினும் இந்த அறிவுறுத்தல்களையும் மீறிக் குடாக்கடலில் மீனவர்கள் தொடர்ந்தும் மீன்பிடித்து வருகின்றனர்.

இந்த மீனவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் திணைக்களம் தயாராகி வருகின்றது.

குறிப்பாக யாழ்.கரையோரப் பகுதி மீனவர்கள் மற்றும் வடமராட்சிப் பகுதி மீனவர்கள் ஆகியோரே இந்தத் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடித்தலில் ஈடுபடுகின்றனர் என்றார் அந்த அதிகாரி.

குடாக்கடலில் இவ்வாறு தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் சிலருக்கு எதிராக அண்மையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதெனவும் அவர் கூறினார். (த-17)

## 'சேலைன்'கள் வந்தன

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி 'சேலைன்'கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

ரயில் மூலம் வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்ட இந்த 'சேலைன்'கள் பின்னர் அங்கிருந்து வாகனம் மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டன

சுமார் இரண்டாயிரம் போத்தல்வரையானசேலைன்கள் பெட்டிகளில் கொண்டு வரப்பட்டது.

இதேவேளை-

வைத்தியசாலைக்கான முதலாம் காலாண்டுக்குரிய மருந்துவகைகளும் வாகனம் மூலம் கட்டம் கட்டமாக எடுத்து வரப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

## மணியம் தோட்டத்தில் கூட்டுறவுச் சங்கக் கிளை

யாழ்ப்பாணம்,பெப்.11

மணியம் தோட்டப் பிரதேச மக்களின் வசதி கருதி அங்கு விரைவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையம் ஒன்றை இந்தப் பிரதேசத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டக் கூட்டுறவு நிலையத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

'என்றிப்' திட்டத்தின் கீழ் இந்தக் கிளை நிலையத்தை விரைவில் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கிளையை அமைப்பதற்கு மணியம் தோட்டப் பகுதியில் காணி வசதி ஒன்றைப் பெறுவதற்கும் சங்கம் துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

**'என்றிப்' திட்டத்தின் கீழ் இந்தக் கிளை நிலையத்தை விரைவில் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிளையை அமைப்பதற்கு மணியம் தோட்டப் பகுதியில் காணி வசதி ஒன்றைப் பெறுவதற்கும் சங்கம் துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.**

ஏற்கனவே போருக்கு முன்னர் தோட்டப் பகுதியில் சங்கத்தின் கிளை நிலையம் ஒன்று செயற்பட்டு வந்தது.

இந்தக் கிளை விற்பனை நிலையம் ஒன்றை மீண்டும் ஆரம்பிக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (த-17)

## குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம்,பெப்.11

சட்டவிரோதமாக சாராய விற்பனையில் ஈடுபட்டவர் சிவில் உடையில் நின்ற பொலிஸாருக்கும் அதனை விற்றதால் வசமாகமாட்டிக் கொண்டார். அவரைப் பொலிஸார் யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தினர். சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொக்குவில் சபா பதிப்பிள்ளை வீதியிலுள்ள வீடு ஒன்றில் வைத்து 180 மில்லிலீற்றர் சாராயத்தை 200 ரூபாவுக்கு சிவிலுடையில் நின்ற பொலிஸாருக்கு விற்றபோது அவர் கைது செய்யப்பட்டார். (ம-4)

* * *

2005 ஆம் ஆண்டு மே மாதம் சாரதி அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபர் இன்னொருவரை மோதிக் காயம் விளைவித்த குற்றச்சாட்டில் அவர் மீது நீதிமன்றால் பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

விசாரணையின் போது சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான் மா.கணேசராஜா அவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். கோப்பாய் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்திருந்தனர். (ம-4)

* * *

வீட்டுப்பணி செய்வதற்காகச் சென்ற பெண் அங்கிருந்த 4 லட்சத்து 88 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நாவலர் வீதி, நல்லூரில் உள்ள வீட்டுக்குச் சென்ற நல்லூர், சங்கிலியன் வீதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு திருடினார் என்று யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் பிரஸ்தாப பெண் கைது செய்யப்பட்டார்.

அவரை யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் பொலிஸார் முற்படுத்தினர். (ம-4)

## நிரந்தர வருவாய் பெறுவோருக்கு இந்த வருடமும் கடன் திட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ். மாவட்டத்தில் நிரந்தர வருமானம் பெறும் ஊழியர்களுக்கு வழமை போன்று இந்த வருடமும் 5 லட்சம் ரூபா வரையில் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் நன்மதிப்புப் பெற்ற திணைக்களமாக வீடமைப்பு அதிகாரசபை மாற்றப்பட வேண்டும் என்பதற்காக இந்த வருடம் அரச திணைக்களங்களுக்கே சென்று இந்தக் கடன் திட்டங்கள் வழங்கப்பட்டு வருவதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் கே.நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வழமையாக வருடந்தோறும் நிரந்தர வருமானம் பெறும் அரச ஊழியர்களுக்கு கடன் வழங்கப்படுகின்றது.இந்த வருடமும் அவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. அதற்காகத் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊழியர்கள் அரச திணைக்களங்களுக்கு நேரடியாகவே சென்று வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர்.

நிரந்தர வருமானம் பெறுவோர் புதிய வீடுகளை அமைப்பதற்கோ அல்லது தமது பழைய வீடுகளை திருத்துவதற்கோ ஆகக் கூடிய தொகையாக 5 லட்சம் வரை வழங்கப்படும். கடன் அடிப்படையில் வழங்கப்படுகின்ற போதும் அதற்கான வட்டிவீதம் குறைவானதாகவே இருக்கும்.

யாழ். மாவட்டத்தில் யாழ். மாநகரசபை, யாழ்.போதனா வைத்தியசாலை என்பவற்றுக்குச் சென்று இந்தக் கடன் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் நிரந்தர வருமானம் பெறாதவர்களுக்காக புதிய வீடு அமைப்பதற்கு 2 லட்சம் வரையிலும் கடனாக வழங்கப்படும்.- என்றார். (ம-5)

### சங்கானைக் குருக்கள் கொலை வழக்கு

# 3 சந்தேக நபர்களில் ஒருவருக்கு மேல் நீதிமன்றம் பிணை அனுமதி

யாழ்ப்பாணம், பெப்.11

சங்கானைப் பிரதேசத்தைப் பரபரப்பில் ஆழ்த்தியிருந்த கோயில் குருக்கள் கொலை வழக்கில் சந்தேக நபர்கள் மூவரில் ஒருவருக்கு யாழ். மேல் நீதிமன்றினால் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி சங்கானையில் நிகழ்ந்த கொலை மற்றும் கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் கடந்த 11 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சம்பவத்தில் நித்தியானந்தக் குருக்கள் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகவும், அவரது மகனான சிவானந்தசர்மாவை சுட்டுக்காயப்படுத்திய தாகவும், சிவானந்தசர்மாவின் உடைமையான இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்ததாகவும் சந்தேக நபர்கள் மூவருக்கும் எதிராக குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டிருந்தன.

**சம்பவத்தில் நித்தியானந்தக் குருக்கள் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற தாகவும், அவரது மகனான சிவானந்தசர் மாவை சுட்டுக் காயப்படுத்திய தாகவும், சிவானந்தசர்மாவின் உடைமையான இரண்டு லட்சம் ரூபா பெறு மதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்ததாகவும் சந்தேக நபர்கள் மூவருக்கும் எதிராக குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டிருந்தன.**

காசிநாதன் முகுந்தன், பாலசுப்பிரமணியம் சிவரூபன், பேதுறு றணேபுற ஹேவாகே குணசேன ஆகியோரே சந்தேக நபர்கள் ஆவர். இவர் கள் சம்பவத்தைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிவானின் உத்தரவின்பேரில் கடந்த 14 மாதங்களாக விளக்கமறியலில் உள்ளனர்.

இந்த நிலையில் இரண்டாம் சந்தேக நபரான பாலசுப்பிரமணியம் சிவரூபனுக்கு (வயது-29) பிணை வழங்குமாறு கோரி அவரது மனைவியான அள்வெட்டி முதலியார் கோயிலடியைச் சேர்ந்த கஜானா பிணைமனு தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனும், எதிர்மனுதாரர்களாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் சார்பில் அரச சட்டவாதி வி.திருக்குமரனும் ஆஜராகியிருந்தனர்.

இந்த மனு தொடர்பில் இரு தரப்பினராலும் ஏற்கனவே சமர்ப்பணங்கள் செய்யப்பட்டு தீர்ப்புக்காக வழக்கு நேற்று முன்தினம்வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

குறித்த சந்தேகநபர் ஒரு வருடத்துக்கு மேலாகத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அவரது விளக்கமறியலை மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிப்பதற்கு சட்டமா அதிபர் மேல் நீதிமன்றில் விண்ணப்பித்து அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் எனவும், அவ்விதம் செயற்படாத நிலையில் பிணை அனுமதி பெறும் உரிமை சந்தேக நபருக்கு உண்டு எனவும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இது தொடர்பாக தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஜே.விஸ்வநாதன், சந்தேக நபர் ஒரு வருடத்துக்கு மேலாக விளக்கமறியலில் இருப்பதால் அவருக்குப் பிணை வழங்குவதாகத் தெரிவித்தார். அதன்படி ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் விடுவிக்க உத்தரவிட்டார்.

அத்துடன் ஒவ்வொரு மாதமும் முதலாம், பதினைந்தாம் திகதிகளில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் கையெழுத்திட வேண்டும் எனவும் நீதிபதி மேலும் உத்தரவிட்டார். (ஒ-4)

### 10 வருடங்களுக்கு முன் இடம்பெற்ற குற்றம்; சந்தேகநபர் கைதாகி நீதிமன்றில்

10 வருடங்களுக்கு முன்னர் உரிய ஆவணங்கள் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றச்சாட்டில் நீதிமன்றால் பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்ட நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

கோப்பாய் பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து மன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலை யில் முற்படுத்தினர். 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிவான் விசாரணை மேற்கொண்ட போது அவருக்கு எதிராகப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. அது பற்றி சந்தேக நபரிடம் விசாரித்த போது அவர், தனக்கு பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்டது பற்றி எதுவும் தெரியாது எனத் தெரிவித்தார்.

10 வருடங்களாக பொலிஸாரும் சந்தேக நபரைத் தேடியதாக தெரியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். அவர் மீதான குற்றச்சாட்டுப் பத்திரம் உரிய ஆவணங்கள் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்றார் என்பதே.

சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு 9 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்முனையில் சுதந்திரதின நிகழ்வு; மாநகர உறுப்பினர் புறக்கணிப்பு

கல்முனை,பெப்.11

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற 64 ஆவது சுதந்திரதின நிகழ்வில் மாநகரசபை உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம்.பறக்கதுல்லாஹ் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

**மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் சுதந்திர தின நிகழ்வுக்கு அழைக்கப்படாததன் பின்னணி என்னவென்பது மறைமுகமாகவே உள்ளது.**

கடந்த 4ஆம் திகதி கல்முனை மாநகரசபையில் இடம்பெற்ற 64 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு பொது மக்களால் கல்முனை மாநகரசபைக்கு தெரிவுசெய்யப்பட்ட முதல்வர், பிரதி முதல்வர் உள்ளிட்ட 19 உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்தச் செயலானது கல்முனை மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட 11 பிரதேசங்களில் வாழும் முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவ மற்றும் சிங்கள மக்களைப் புறக்கணிக்கும் செயலாகவே கருதப்படுகின்றது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் சுதந்திர தின நிகழ்வுக்கு அழைக்கப்படாததன் பின்னணி என்னவென்பது மூடு மந்திரமாகவே உள்ளது.

இது மாத்திரமல்ல, நிர்வாக ரீதியாக இடம்பெறும் நிகழ்வுகளுக்கும் கூட இறுதி நேரத்திலேயே அழைப்பு விடுக்கப்படுகின்றது.

மாநகரசபை உறுப்பினர்கள் அங்கத்துவம் வகிக்கும் உப குழுக்களை ஒழுங்கு முறையாக ஏற்பாடுசெய்யும் சகல நடவடிக்கைகளுக்கும் கல்முனை மாநகரசபை நிர்வாகம் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தாதியர்கள் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு,பெப்.11

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் கடமைபுரியும் தாதியர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் பிற்பகல் ஒருமணி வரை நடைபெற்றது.

வேலை நாள்களை ஐந்து நாள்களாகக் குறைக்க வேண்டும், அரச தாதியர் களின் சீருடைக் கொடுப்பனவை 15 ஆயிரம் ரூபாவால் உயர்த்த வேண்டும், மேலதிக நேரக் கொடுப்பனவை 180 நாள்களால் அதிகரிக்கவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-31)



மூதூர் பஸ் தரிப்பு நிலையத்துக்கு அண்மையில் அங்காடி வியாபாரிகளுக்கான கடைத்தொகுதியொன்றை அமைப்பதற்கான வேலைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

## இந்திய நபருக்கு ஒருவருட சிறைவாசம்

மட்டக்களப்பு,பெப்.11

சுற்றுலா விசாவில் வந்து வாகரைப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக தொழில் புரிந்து வந்த இந்திய நபர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த இந்த நபர்கள் நால்வரில் மூவர் வாகரை சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து, எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அவர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

நான்காவது நபருக்கு 50ஆயிரம் ரூபா அபராதத்துடன் ஒருவருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## மதுவுக்கு மேலதிக அறவீடு: பிள்ளையான் மீது குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,பெப்.11

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மாகாணத்தில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு போத்தல் மதுபானத்துக்கும் மேலதிக வரி அறவீடு செய்கின்றார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போத்தல் ஒன்றுக்கு தலா 20 ரூபா அறவீடு செய்யப்படுகின்றது எனவும், இந்தப் பணத்தை முதலமைச்சர் சந்திரகாந்தன் பெற்றுக்கொள்கின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட கலால் திணைக்கள அதிகாரி நடராஜா சுசாந்தரன் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார். இந்தச் சட்டவிரோத நடவடிக்கையைத் தடுக்க முயற்சித்தபோது, முதலமைச்சர் தமக்குக் கொலைமிரட்டல் விடுத்தார் என்று அவர் தெரிவித்தார். தமக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பு அமைச்சு, தற்பாதுகாப்புக்காக ஆயுதமொன்றையும் வழங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், மருத்துவ விடுமுறையில் சென்றிருந்த தன்னை திருகோணமலைக்கு இடமாற்றம் செய்துள்ளார் என்று மனுவில் அவர் தெரிவித்தார். (ச)

## டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு

பெரியநீலாவணை,பெப்.11

மருதமுனை தௌஹீத் ஜமாஅத்தின் இஸ்லாமிய பிரசார மையம் ஏற்பாடு செய்த மருதமுனையிலுள்ள கிணறுகளுக்கு குளோரின் இடுதல் மற்றும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு ஆகிய நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

ஓட்டோவில் சென்று வீதிகள் தோறும் டெங்கு ஒழிப்பு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், 'சுக மருதம்' எனும் தலைப்பிலான துண்டுப்பிரசுரமொன்றும் மக்களுக்கு விநியோகிப்பட்டது. (ச)

## கடைகளை உடைத்து சேதப்படுத்திய யானைகள்


மூதூர், பெப்.11

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச செயலகப் பிரிவிவுக்குட்பட்ட தோப்பூர் - அல்லை நகர், இக்பால் நகர் ஆகிய கிராமங்களுக்குள் யானைகள் புகுந்து கடைகள் குடிசைகள், வீட்டுத் தோட்டங்கள் என்பவற்றுக்கு சேதங்களை விளைவித்துச் சென்றுள்ளன என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அல்லை நகர், சேருவில வீதியில் அமைந்துள்ள கடைத்தொகுதியொன்றினுள் புகுந்த யானைகள் இரண்டு கடைகளின் கதவுகளை உடைத்து அங்கிருந்த வியாபாரப் பொருள்களைத் தூக்கி வீசியெறிந்துள்ளன.

இதேவேளை, அருகிலுள்ள இக்பால் நகர் கிராமத்துக்குள் புகுந்த யானைகள் குடிசைகள் மற்றும் வீட்டுத்தோட்டங்களுக்கு சேதத்தை விளைவித்துச் சென்றுள்ளன என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

## காத்தான்குடியில் நேற்று கடையடைப்பு



மட்டக்களப்பு, பெப்.11

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடிப் பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு பூரண கடையடைப்பு அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் மேற்கொண்டு வரும் போலிப் பிரசாரங்களுக்கு எதிராகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காத்தான்குடி நகரசபைத் தலைவர் எஸ்.எச்.எம்.அஷ்பர் தெரிவித்தார்.

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் கூத்தல் நாடகமொன்றை பொய்யாக அரங்கேற்றி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மீதும் காத்தான்குடி நகரசபைத் தலைவர் எஸ்.எச்.அஷ்பர் மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் இந்த நடவடிக்கைகளை கண்டித்து காத்தான்குடியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக கறுப்புக்கொடிகளை கட்டுமாறு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.(ச-21-31)

## வீதி அகலமாக்கல்; மக்களுக்கு நஷ்டஈடு

திருகோணமலை,பெப்.11

கிண்ணியா - தம்பலகாமம் பிரதான வீதியை அகலமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது. கிண்ணியா பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.என்.தௌபீக், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரியிடம் இது தொடர்பாக வலியுறுத்தியமைக்கு இணங்க இந்த நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட 570 கட்டடச் சொந்தக்காரர்களுள் 200 பேருக்கு ஏற்கனவே நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. மிகுதித் தொகையினருள் 60 பேருக்கு அடுத்த வாரமளவில் நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்படும். ஏனையவர்களின் ஆவணங்கள் உரிய முறையில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் அவர்களுக்கும் விரைவில் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மின்னல் தாக்கி பலர் காயம் 100 தொலைக்காட்சிகள் சேதம்

மட்டக்களப்பு,பெப்.11

அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை போன்ற பிரதேசத்தில் மழையுடன் கூடிய இடிமின்னல் தாக்கத்தினால் பலர் சிறுகாயங்களுக்குள்ளானதுடன் 100 இற்கு மேற் பட்ட தொலைக்காட்சி, கணினி, மற்றும் மின்சார உபகரணங்கள் சேதமடைந் துள்ளன.

கிழக்கில் தற்போது சீரற்ற காலநிலையினால் சில நாள்களாக இடிமின்னலுடன் கடும் மழைபெய்து வருகின்றது.

மின்னல் தாக்குதல் ஏற்பட்டபோது வீடுகளில் சமயலறையில் கிரைண்டர், மிக்சி போன்றவற்றை பாவித்துக் கொண்டிருந்த பெண்கள் பலர் மின்னல் தாக்குதலுக்குள்ளாகி தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

இதேவேளை பல அரச மற்றும் அரசசார்பற்ற அலுவலகங்களில் கணினி மற்றும் மின்சார உபகரணங்களை பாவித்துக் கொண்டிருந்த பலர் மின்னல் தாக்கத்தினால் தூக்கி வீசப்பட்டு காயங்களுக்கு உள்ளாகினர்.

## தேசத்துக்கு மகுடம்: சிறுவன் காயம்

அநுராதபுரம்,பெப்.11

அநுராதபுரம், ஓயாமடுவயில் நடைபெறும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த சாசன அமைச்சின் காட்சிக்கூட முகப்பு நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு இப்பகுதியில் பெய்த கடும் மழையின் காரணமாக உடைந்து வீழ்ந்ததில் சிறுவன் ஒருவன் காயங்களுக்கு உள்ளானான். (301)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.11.1948

மறைவு
03.02.2010

திதி: சதுர்த்தி

அமரர்

### கார்த்திகேசு சிவபாலன்

*வருடங்கள் இரண்டான போதும்*
*நினைவில் நின்று நீங்குமா? உம் பூ முகம்*
*அழகிய சிரிப்பையும், கலகல உம் பேச்சையும்*
*மீண்டும் கேட்போமா? என்று*
*ஏங்கித் தவிக்கின்றோம்*

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (14332) (6,7,10) குடும்பத்தினர்.

## ஆய்வுகூட உபகரணங்கள் வழங்கப்பட்டன

தென்மராட்சி, பெப்.11

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான ஆய்வுகூட உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வலயக்கல்வி அலுவலகத்தில் வைத்து பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

மாகாண கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆய்வு கூட உபகரணங்கள் வகை 1 எபி, 1சி வகை II ஆகிய தரங்களைச் சேர்ந்த 30 இற்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. (ந-9)

### வேலைக்கு ஆள் தேவை
**GLASS CUTTER**

கண்ணாடி வெட்டத் தெரிந்த
(GLASS CUTTER)அனுபவம்உள்ள
ஆள்தேவை.
தொடர்புகளுக்கு : 077 7686021
இல.11/06, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 2221153
077 3114415 (14243)(6-7-8)

### வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்.நகரில் பிரபல புத்தக நிலையம்
ஒன்றுக்குப் பாடசாலை உபகரணங்கள்
விற்பனையாளர் தேவை.
பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 021 222 4375

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழையுங்கள் 0779086737
அழகான கணினி மேசைகளும்
விற்பனைக்கு உள்ளன.

## கண்ணீர் அஞ்சலி




எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
திருமதி ஜெயந்தி அவர்களது
அன்புத் தாய்

திருமதி
### பாக்கியராசா திலகவதி

27.01.2012 இல் இறைபதம் அடைந்தார்
அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்..
சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

பணிப்பாளர், பணியாளர்கள்,
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம். (C\8907) (6,7,10)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
08-11-1954

மறைவு
23-01-2011

அமரர்
### இரத்தினம் பிறேமரட்ணம்

அமைதியான புன்சிரிப்பும் ஆழ்ந்த அறிவும் கொண்டு
கனிவு மொழி பேசும் கள்ளமில்லா வெள்ளை மனமும்
அந்தரித்து வருவோர்க்கு அள்ளி வழங்கும் குணமும்
அகிலத்தில் என்றும் நாம் உயர ஆசீர்வதிக்கும் அப்பாவே!
ஆண்டொன்று சென்றாலும் ஆறிடுமோ நம் துயரம்!

வி.மு.வீதி, பருத்தித்துறை. மனைவி, மருமகன், பிள்ளைகள்.

(சி/8906)(3-6-7)

## ஓய்வு பெற்ற அதிபர் திரு.சு.மனோகரன் புவனேஸ்வரி தம்பதியரின் ஐம்பதாவது திருமண நல்வாழ்த்து – 11.02.2012



எம்மை நன்கு வளர்த்தெடுத்த பெற்றோரின் ஐம்பதாவது
திருமண நாளதனைப் புந்தி மகிழ்ந்து புதல்வர்கள் நாம்
போற்றுகின்றோம். ஐம்பதாண்டு கால இல்லற இன்பம்
கண்ட எங்கள் மாமா, மாமி நீடூழிவாழ
வாழ்த்துகின்றோம். அறிவுரைகள் சொல்லவல்ல
எங்கள் பேரன் பேர்த்தி இன்னும்
பல்லாண்டு வாழ குட்டிகள்
நாம் போற்றுகின்றோம்.



வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
தகவல்: ம.சுகுமாரன் (மகன்)
அரியாலை.

(14334)(6-6-7)

நகராட்சிமன்றம், சாவகச்சேரி

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 27.02.2012 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதேதினம் முற்பகல் 11 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையின் பொருட்டு, நிர்மாண பயிற்சி நிலையத்தில், 30.05.2012 வரை வலுவுள்ள (ICTAD) தரம் C 10 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் முதல் இரு வேலைகளுக்கும், தரம் C 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மூன்றாவது வேலைக்கும் கேள்வி கோருவதற்கு தகைமையுடையவராவர்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT.NBT நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | பழக்கடைத் தொகுதி நிர்மாணித்தல் வேலை | 3000 | 1000 |
| 02 | நுணாவில் கிழக்கு கல்லடி மூட்டு வீதி புனரமைப்பு வேலை | 7000 | 1000 |
| 03 | சேகண்டி வாய்க்கால் 1ஆம், 2ஆம் ஒழுங்கை புனரமைப்பு வேலை | 10500 | 1000 |

கேள்விப்பத்திரங்கள் சாவகச்சேரி நகராட்சிமன்றத்தில் 24.02.2012 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி தவிசாளர், நகராட்சிமன்றம் சாவகச்சேரி என முகவரியிடப்பட்டு நேரடியாகப் பெட்டியில் இடப்படல் வேண்டும். இணைப்பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 27.02.2012ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

[illegible] தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

நகராட்சிமன்றம் சாவகச்சேரி
09.02.2012. (6-7-45)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் தனபாலசிங்கம்



நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தனபாலசிங்கம் அவர்கள் (07.02.2012) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம், நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை, மீனாட்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் தனலட்சுமி அவர்களின் அன்புக்கணவரும் புனிதநாதன், வாமதேவா, ரேணுகா, கிருபானந்ததுரை, சந்திரகாந், சுஜிகாந், ஹம்சத்வனி ஆகியோரின் அன்புத் தந்தையும் அமராவதி, சுப்பிரமணியம், தேசிங்கு ராணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் உமாபிரியா, சுபா, தர்மராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும்.

காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் நாகரெத்தினம், கணேசலிங்கம், புண்ணியமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஹஜனி, ஹனோஜன், மதுசன், விதுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நயினாதீவுசல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
5ஆம் வட்டாரம், மனைவி,பிள்ளைகள்,
நயினாதீவு. (14328)(6-7-8) பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் காப்பாற்றுவோம் கிளர்ச்சியைக் கைவிடுங்கள்

## மாலைதீவின் புதிய அதிபர் வேண்டுகோள்



மாலே, பெப். 11

கிளர்ச்சியைக் கைவிட்டு தேச ஒற்றுமையைக் காப்பாற்றுங்கள் என்று மாலைதீவின் புதிய அதிபர் முகமது வாஹீத் ஹசன், அந்த நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். தலைநகர் மாலேவில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேட்டியளித்தபோது அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முன்னாள் அதிபர் முகமது நஷீத்துக்கு எதிராக நாம் ஒருபோதும் செயற்பட்டது இல்லை என்றும் விளக்கமளித்தார்.

மேலும்நாட்டில் அமைதியை ஏற்படுத்தி நிலையான ஜனநாயக ஆட்சியை அமைக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண் டும்.

இதேவேளை முன் னாள் அதிபர் நஷீத்துக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்றும் அவர் உறுதியளித்தார்.


நஷீத் பாதுகாப்பாக இருக்கிறார் என்று இப்போதைய ஆட்சியாளர்கள் கூறி வருகின்றனர். ஆனால், அவர் எங்கிருக்கிறார் என்பது மர்மமாக உள்ளது. இது குறித்து கவலை வெளியிட்டுள்ள சர்வதேச மனித உரிமை அமைப்பான அம்னஸ்டி இன்டர்நஷனல், நஷீத்துக்கு எந்த ஆபத்தும் நேரிடக் கூடாது என்று கேட்டுக் கொண்டுள்ளது. அந்த அமைப்பின் ஆசிய- பசிபிக் இயக்குநர் சாம் ஜாரிபக் வெளியிட்டுள்ள அறிக்கையில், நஷீத் மீதோ, அவரது ஆதரவாளர்கள் மீதோ எந்த நடவடிக்கையையும் எடுக்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளைநஷீத்தின் மாளிகையில் இருந்து 100 பாட்டில் மதுபானங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலாத் தலங்களைத் தவிர இதர இடங்களில் மதுபானங்களை வைத்தி ருப்பது அந்த நாட்டின் சட்டப்படி குற்றமாகும்.

இது தொடர்பாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும். (ந)

# ஈரானுக்கு வருமாறு பாப்பரசருக்கு அழைப்பு



ஈரானுக்கு வருகை தருமாறு கத்தோலிக்க மதத் தலைவர் பாப்பரசர் பெனடிக்ட்டுக்கு ஈரான் அழைப்பு விடுத்துள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. அணுஆயுதத் திட்டங்களை நிறுத்தாவிட்டால், ஈரான் மீது இஸ்ரேல் இராணுவத் தாக்குதல் நடத்தும் என்று வெளிப் படையாக மிரட்டல் விடுத் தது.

இதற்கு ரஷ்யா உள்பட பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. மேலும் ஈரான் அதிபர் முகமது அகமதி நிஜாத் உலக வரைபடத்தில் இருந்து இஸ்ரேலை அழித்து விட வேண்டும் என்று கூறியிருந்தார்.


இந்நிலையில், ஈரானுக்கு வர வேண்டும் என்று போப் பெனடிக்ட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வத்திக்கானுக்கான ஈரான் தூதர் அலி அக்பர் நசரி நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

பாப்பரசரின் வருகையை ஈரான் அதிபர் முகமது மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறார். ஈரானுக்கு பாப்பரசர் வருகை தந்தால் அவருக்கு மிகச் சிறப்பான வரவேற்பு அளிப்போம்-என்றார். ஆனால், பாப்பரசர் பெனடிக்ட் இது வரை எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று வத்திக்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ந)

# 42 ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஓவியம்

உலகின் பழைமை வாய்ந்த ஓவியம் ஒன்று ஸ்பெயின்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின்நாட்டின் தென்பகுதியைச் சேர்ந்த அண்டாலுசியாவில் உள்ள குகை ஒன்றில் கார்டோபா பல்கலைக்கழகக் குழுவினர், பேராசிரியர் ஜோஸ் லூயிஸ் சான்சிட்ரியன் என்பவர் தலைமையின் கீழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஓவியங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்தனர். தொடர்ந்து அந்த ஓவியத்தை ஆராய்ந்த போது அவை சுமார் 42 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்கக் கூடும் என்பது தெளிவாகியது. (ந)



மலேசியா, புத்ரஜயாவில், அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் ஹனிபா அமனை (வலது), வியட்நாம் வெளியுறவுத்துறை அமைச்சர் பாம் பின் மிங் சந்தித்துப் பேசினார்.

# ஒருநாளில் மட்டும் 100 பேர் சாவு

சிரியாவில் அதிபர் பஷர் அல் அசாத்தைப் பதவி விலகக் கோரி போராட்டம் நடத்தி வரும் மக்கள் மீது அந்த நாட்டுப்படையினர் நடத்திய தாக்குதல்களில் நேற்றுமுன்தினம் ஒரு நாளில் மட்டும் 100 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

போராடி வரும் மக்களை ஒடுக்குவதற்காக அதிபர் இராணுவத்தைப்பயன்படுத்தி வருகிறார். பொது மக்களுக்கு ஆதவாகப் போராட புரட்சிப் படையும் உருவாகி உள்ளது. இந்தப் புரட்சிப் படையினர் உள்ள சில பகுதிகளுக்குள் இராணுவம் நுழைந்து கண்மூடித்தனமாகத் தாக்கி வருகிறது.

இந்த நிலையில் நேற்று மட்டுமே 100 பேரைக் கொன்று இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதே போல சபாதனி என்ற நகரிலும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடந்து வருகின்றன. (ந)

# ஆப்கன் போர்முனையில் இளவரசர் ஹரி



பிரிட்டிஷ் இளவரசர்ஹரிநேற்று முன்தினம் ஆப்கானிஸ்தானின் முன்னரங்கப் போர்முனையில் விமானியாகப் பணியாற்ற வந்துள்ள நிலையில், நேட்டோ படையினர் நடத்திய வான் தாக்குதலில் எட்டுக் குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு அந்தநாட்டு அதிபர் ஹமீத் ஹர்சாய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தாக்குத்லை ஒடுக்க அமெரிக்காவின் நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் ஆப்கானிஸ்தானின் கபீஸா மாகாணத்தின் நெஜ்ராப் மாவட்டத்தில் நேட்டோப் படையினர் திடீர் வான் தாக்குதல் நடத்தியதாகவும், இதில் எட்டுக் குழந்தைகள் பலியாகியுள்ளனர் எனவும், கபீஸா மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் , அதிபர் ஹமீத் ஹர்சாயிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அதிபர் ஹர்சாய் இது போன்ற தாக்குதல்கள் பல முறை நடந்துள்ளமை வருந்தத்தக்கது; கண்டனத்திற்குரியவை எனத் தெரிவித்தார். அத்துடன் இதுவரை நேட்டோ படையினர் நடத்திய வான் தாக்குதல் குறித்து விசாரிக்க குழு ஒன்றை அனுப்பி நேட்டோவிடம் விளக்கம் கேட்க உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டிஷ் இளவரசர் ஹரி பயிற்சிக்காக ஆப்கானிஸ்தான் வந்துள்ளார். இவர் அபாச்சே ஹெலிகொப்டரின் துணை விமானியாகப் பணியாற்றி பயிற்சி பெறவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# மேலுமொரு அல்குவைதா தலைவர் சாவு

பாகிஸ்தானில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் மற்றுமொரு அல் குவைதா தலைவர் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

வஜிரிஸ்தானில் உள்ள மிரான்ஷா பகுதியில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நேற்று ஏவுகணை தாக் குதல் நடத்தியதில் மன்சூர் உட்பட நான்கு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானில் கடந்த இரண்டு நாள்களாக ஆளில்லாத விமானங்கள் நடத்திய தாக்கு தலில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். (ந)

# 23 மணிநேரமாக கணினியில் விளையாடியவர் பரிதாப மரணம்

தாய்வானில் தொடர்ந்து 23 மணிநேரங்கள் கணினி விளையாட்டில் ஈடுபட்டிருந்த இளைஞர் பரிதாபமாக மரணத்தைத் தழுவியுள்ளார்.

தாய்வான் தலைநகர் தைபேயில் பல கணினி விளையாட்டு மையங்கள் உள்ளன. ஒரு மையத்தில் சென் ரோங்யூ என்ற 21 வயது இளைஞன் அடிக்கடி கணினி விளையாட்டில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இவர் கடந்தவாரம் கணினி மையத்தில் 'வீடியோ கேம்' விளையாடிக் கொண்டி ருந்த போது இருக்கையில் சரிந்தபடி இறந்து கிடந்தார். இறந்த நிலையிலும் அவருடைய கைகள் கணினியில் கீபோர்டையும் மவுஸையும் இறுக்கமாகப் பிடித்தபடி இருந்தன . இந்த நிலையிலேயே பொலிஸார் அவரது உடலை மீட்டனர்.

இதனையடுத்து இடம் பெற்ற விசாரணையில் அவர் தொடர்ந்து 23 மணி நேரமாக விளையாட்டில் ஈடுபட்டிருந்தது தெரியவந்தது.

இது குறித்து அந்த மையத்தின் ஊழியர்கள் தெரிவித்ததாவது;

இங்கு வரும் பலரும் தொடர்ந்து பல மணி நேரம் விளையாடுவார்கள். அவ்வாறே கடந்த செவ்வாய்க் கிழமை இரவு ரோங்யூ இங்கு வந்து விளையாடத் தொடங்கினார். அதனால், அவர் இறந்தது தெரிய வில்லை. தூங்குகிறார் என்று நினைத்தோம்.

ஆனால், நீண்ட நேரம் ஆகியும் அவர் வெளியே வராததால் அவரை எழுப்பச் சென்றபோதே அவர் இறந்திருந்தது தெரியவந்துது . உடனடியாகப் பொலிஸுக்குத் தகவல் கொடுத்தோம்- என்றனர். (ந)

# அம்மன் கோயிலாக மாறிய தேவாலயம்

லண்டன்,பெப். 11

பிரிட்டனின் கிழக்கு மிட் லாண்ட் நோட்டிங்ஹாம் பகுதிக்குட்பட்ட பீஸ்டன் ரைலண்ட் நகரில் உள்ள ஒரு கிறிஸ்தவ ஆலயம் துர்க்கை அம்மன் கோயிலாக மாற்றம் பெற்றுள்ளது.

இந்நகரின் சுற்றுப்புறப் பகுதி மக்களின் ஒத்துழைப்புடன் கோயில் [illegible] கோயில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி திறக்கப்பட உள்ளது.

இங்கு செயற்படும் யுனிவர்சல் சொசைட்டி ஒப் ஹின்டூசியம் அமைப்பு தலைவர் ராஜன் தெரிவித்ததாவது:-

இப்படி ஒரு கோயில் உருவாவது இந்து மதத்திற்கு சிறந்த மைல்கல் ஆகும். ஆன்மிகம் பரப்புவதில் சிறந்த பங்காற்றும்.

இந்தப் பகுதியில் உள்ள திரை [illegible]திரங்கள், பாட கர்கள், பேசன் டிசைனர் உட்பட பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ந)

# நாடாளுமன்றத் தலைவர் ராஜினாமா

ஊழல் குற்றச்சாட்டை அடுத்து தென் கொரிய நாடாளுமன்றத் தலைவர் பார்க் ஹீடி தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இவர் பழைமைவாதக் கொள்கையுடைய கிரான்ட் நஷனல் கட்சியைச் சேர்ந்தவர். கடந்த 2008 ஆம் ஆண்டில் கட்சியின் தலைவர் பதவிக்கு நடந்த தேர்தலில் தனக்கு ஆதரவாக வாக்கு அளிக்குமாறு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு லஞ்சம் வழங்கினார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. இதனையடுத்து ராஜினாமா செய்துள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினியில் தென்சூடான்

## நிலைமையை சீராக்கக் கோருகிறது ஐ.நா.

கடந்த வருடம் தனி நாடாகப் பிரகடனம் செய்துகொண்ட தென் சூடானில் கலவரங்கள் இன்னமும் ஓயவில்லை. இடைவிடாத போர்ச் சூழல், விநியோக வழிகளில் தடை என்பவற்றால் அங்கு உணவுப் பற்றாக்குறை எழுந்துள்ளது.



தென் சூடானில் தொடர்ந்தும் குழப்பமான சூழ்நிலை நீடிக்குமானால் அங்கு தோன்றியுள்ள உணவுப் பஞ்சத்தால் ஆயிரக்கணக்கானோர் மடியக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது. எனவே பொதுமக்களுக்கான உணவு விநியோகத்தைச் சீராக்குவதற்குத் திறந்த மனதுடன் செயற்படத் தென்சூடானும், கலவரக்காரர்களும், தென் சூடான் அரசும் முன்வர வேண்டும் - என்று ஐ.நா. அமைப்பு அவசரமாக அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த வருடம் சூடானில் இருந்து பிரிந்து தென் சூடான் தனி நாடாகப் பிரகடனம் செய்துகொண்டது. எனினும் அங்கு கலவரங்கள் இன்னமும் ஓயவில்லை. இடை விடாத போர்ச் சூழல், விநியோக வழிகளில் தடை என்பவற்றால் அங்கு உணவுப் பற்றாக்குறை எழுந்துள்ளது.

தென் சூடானுக்கான பிரதான விநியோக மார்க்கங்களை சூடான் அரசு தடைசெய்துள்ளது. இதனால் சூடானுக்கான அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. தென் சூடானில் அரசுக்கெதிராக கலவரங்களை மேற்கொள்பவர்களுக்கு சூடான் அரசு ஆதரவளித்து வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் பொது மக்களுக்கான உணவு விநியோகத்தைச் சீராக்குவதற்காகச் சூடானும், தென் சூடானும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு சாதகமான முடிவொன்றை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, தென் சூடானில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைக் குறைப்பதற்காக விமானங்கள் மூலம் ஐ.நா. உணவுப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளது. (ங)

# சீக்கிய ஆலயத்தின் மீது அமெரிக்காவில் தாக்குதல்

வாஷிங்டன், பெப்.11

அமெரிக்காவில் கட்டப்பட்டு வரும் சீக்கியர் இன மக்களின் குருத்வாரா எனப்படும் கோயில் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மிச்சிகன் மாநிலம், ஸ்டெர்லிங் ஹைட்ஸ் என்ற இடத்தில் குருத்வாரா கோயிலில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், கடந்த வாரம் கோயில் மீது விஷமிகள் சிலர் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க சீக்கிய அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கூறியுள்ளனர். (ங)

## உடலெங்கும் உரோமக் காடு



இந்தியாவில் புனே நகருக்கு அருகிலுள்ள கிராமம் ஒன்றில் வசித்து வரும் சகோதரிகள் மூவர் அபரிமிதமான உரோம வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சவீதா (வயது 23), மோனிஷா (வயது 18), சாவித்திரி சங்க்லி (வயது 16) ஆகிய இந்தச் சகோதரிகளின் தலை முதல் கால் வரை அடர்த்தியான உரோமங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. அவர்களது கண் இமைப் பகுதி, மூக்கு, மற்றும் முகம் ஆகிய பாகங்களிலும் உரோமங்கள் அடர்த்தியாக வளர்ந்து காணப்படுகின்றன. முகத்தில் வளர்ந்துள்ள உரோமங்கள் ஆண்களுக்கான தாடி போன்றுள்ளது.

இந்த அசுர வேக உரோம வளர்ச்சியானது அவர்களது தந்தையின் மரபணு மூலமான விளைவு எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் குடும்பத்தில் மொத்தம் 6 சகோதரிகள். இவர்களில் மூவருக்கே இந்தப் பாதிப்பு உள்ளது.

இந்த உரோமங்கள் வளர்வதைத் தடுப்பதற்கு ஒருவகை கிரீம்களை உபயோகித்தாலும் குறுகிய நாள்களுக்குள் உரோமங்கள் மீண்டும் வளர்ச்சியடைந்து விடுவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். (ங)

## "சீனாவுக்கு உதவ இந்தியா தயார்"



பீஜிங், பெப்.11

திபெத் பிரச்சினையில் சீனாவுக்கு உதவத் தயாராக இருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது. சீனா சென்றுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, அங்கு முக்கிய தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார். இதன் பின்னர் அவர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். இதன் போது, திபெத்தில் சீன அரசுக்கு எதிராகப் புத்த பிக்குகள் தீக்குளித்து தற்கொலை செய்துகொள்வது குறித்துசெய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த கிருஷ்ணா, திபெத் பிரச்சினை சீனாவின் உள்நாட்டுப் பிரச்சினை. எனினும் இந்தப் பிரச்சினையில் சீனாவுக்கு உதவ இந்தியா தயாராக இருக்கின்றது - என்றார்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தாய்மடியில் 07.09.1967

இறையடியில் 13.01.2012

திருமதி

## இரத்தினசபாபதி இந்திராணி (சாந்தி)

கடந்த 13.01.2012 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது மூத்த குலவிளக்கின் (சாந்தி) அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் வேதனைகளை உன்னுள் சுமந்து - நீ
சிரித்த முகத்துடன் திகழ்ந்தாய்
பாரினிலே உயர்ந்திட நினைத்தாய் - நீ
பாதியிலே பாவியவன் பறித்தானே உன் உயிரை
இருவிழிகள் அருவியெனச் சொரிய - திருமகளே
உன்னை நாம் தினமும் தேடுகிறோம்
சாந்தி சாந்தி உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்!

உன் பிரிவால் துயருறும்:


குடும்பத்தினர்.

அந்திரான், கரணவாய் மேற்கு, கரவெட்டி.

(14109)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றுக்குள் பாய்ந்தது வான் 10 பேர் பரிதாபமாகச் சாவு



திருமங்கலம்,பெப்.11

மதுரை அருகே, கிணற்றுக்குள் வான் பாய்ந்ததில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். கிணற்றில் 25 அடி வரை தண்ணீர் இருந்ததால் அவர்கள் தப்ப முடியாமல் தண்ணீரில் மூழ்கி உயிர் இழந்தனர்.

தூத்துக்குடியைச் சேர்ந்த உமா என்பவருக்கும் தேனி மாவட்டம் தேவாரத்தைச் சேர்ந்த சதீஷ் என்பவருக்கும் துத்துக்குடியில் கடந்த திங்கட்கிழமை திருமணம் நடைபெற்றது.

இதையடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை பெண் வீட்டார் தேவாரத்துக்கு மறுவீடு சென்றனர். அங்கு மணமக்களை விட்டு விட்டு மீண்டும் ஊர் நோக்கி திரும்பிக்கொண்டிருந்தனர். வானில் 10 பேர் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மாலை 6.30 மணி அளவில் உசி லம்பட்டி - திருமங்கலம் வீதியில் நக்கலக்கோட்டை கிராமத்தின் அருகே இருந்த கிணற்றுக்குள் வான் பாய்ந்தது.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவந்ததும் அயல் கிராமத்தினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். அவர்கள், கிணற்றில் தத்தளித்த தூத்துக்குடியைச் சேர்ந்த மணி, விருதுநகரைச் சேர்ந்த மாதவன், சாயல்குடியைச் சேர்ந்த கருப்பசாமி ஆகியோரை மீட்டனர்.

தீயணைப்பு வீரர்களும், உயர் அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை விரைவுபடுத்தினர்.

கிணற்றில் இருந்த தண்ணீரை வெளியேற்ற மின்சாரம் இல்லாததால், மீட்புப் பணியை ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. சம்பவம் நடந்து 2 மணி நேரம் ஆன பின்னரே மின் இணைப்பு தரப்பட்டு, தண்ணீரை வெளியேற்றும் பணி ஆரம்பமாகியது.

இச்சம்பவத்தில், சித்திரை வேல், முருகம்மாள், அருணா, சஞ்சய், கைலாஷ், விஷ்வா, பாலகிருஷ்ணன் ஆகியோர் நீரில் மூழ்கினர். அவர்கள் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

கிணற்றுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் அதிகாரிகளும் தீயணைப்பு வீரர்களும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

வீதியில் செடி களை அடுக்கி அதன் மீது கற்களை வைத்திருந்தனர். அதன் மேல் உரசி நிலை தடுமாறி கிணற்றுக்குள் வான் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## சுப்பர் சொனிக் ஏவுகணை சோதனை வெற்றி



ஒரிசா,பெப்.11

எதிரி விமானங்களை வழியிலேயே இடைமறித்துத் தாக்கும் சுப்பர்சோனிக் ஏவுகணையை இந்தியா நேற்று வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

ஒரிசா மாநிலம் பாலாச் சூரில், எதிரிநாட்டு விமானங்களை வழியிலேயே இடைமறித்துத் தாக்கும் வலிமை வாய்ந்த சுப்பர் சோனிக் ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது.

இந்த ஏவுகணையில் உள்ள டிராக்கிங் வலையமைப்பு மிகத் தொலைவில் இருந்து வருகின்ற எதிரி ஏவுகணைகளைக் கண்டறியும் சக்தி வாய்ந்தது. (வ)

# இராணுவ பலத்தை நவீனப்படுத்தும் இந்தியா



டில்லி,பெப்.11

இந்தியாவுக்குப் பெரும் போட்டியாக உருவாகியுள்ள சீனாவைச் சமாளிக்க, இந்தியா தனது ராணுவ பலத்தை நவீன மயமாக்கத் திட்டமிட்டுள்ளதாக ராணுவ உயர் அதிகாரி குர்மீத் கன்வால் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 1962 ஆம் ஆண்டில், இந்தியா மற்றும் சீனா நாடுகளுக்கிடையே நடைபெற்ற போர் ஆரம்பித்து, இன்று வரை இரு நாடுகளுக்கிடையே போட்டி மனப்பான்மையே நிலவி வருகிறது.

தங்களது ராணுவ பலங்களை இரு நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு உயர்த்தி வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவைச் சுற்றியுள்ள பகுதிகளில் சீனாவின் ஆக்கிரமிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

மேலும் இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் மியான்மார் துறைமுகங்களின் வளர்ச்சிக்கு சீனா உதவி செய்வதன் மூலம் அங்கு தங்கள் படைகளை அமைத்து வருகிறது.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, இந்தியாவும் தனது ராணுவபலத்தை அதிகரிக்க உள்ளது.

இதனடிப்படையில் பிரான்ஸிடமிருந்து 126 ஜெட் போர் விமானங்கள், ரஷ்யாவிடமிருந்து அணுசக்தியின் மூலம் இயங்கும் நீர்மூழ்கி கப்பல் மற்றும் உள்நாட்டிலேயே முதன் முறையாக உருவாக்கப்பட்ட ஏர்கிராப்ட் கேரியர் உள்ளிட்டவைகளை இராணுவத்தில் சேர்க்கவுள்ளோம்- என்றார் அவர். (வ)

# கேரளாவுடன் உடன்பாடு செய்ய வேண்டாம்

### மன்மோகனிடம் ஜெயலலிதா வலியுறுத்து





தமிழக முதல்வர் ஜெயலலிதா முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தைக் கண்காணிக்க கேரள அரசுக்கு மத்திய அரசு உதவக் கூடாது என்று கடிதம் மூலம் மன்மோகன் சிங்குக்கு வலியுறுத்தியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் தெரிவித்ததாவது:

அவ்வப்போது நீர் மட்டத்தைக் கண்காணிக்க சில கருவிகளை நிறுவுவது குறித்து மத்திய விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்துறை அமைச்சுக்கும் கேரள அரசுக்குமிடையே உடன்பாடு கையெழுத்தாக இருப்பதாக செய்திகள் வெளியாகின. இதனைச் சுட்டிக்காட்டி, ஜெயலலிதா தனது கடிதத்தில் அத்தகைய முயற்சிகள் மக்களிடையே பீதியைக் கிளப்பும் செயல் என்று குறைகூறியுள்ளார்.

பிரதமர், தொழில்நுட்ப அமைச்சகம் கேரள அரசுடன் உடன்பாடு எதனையும் செய்து கொள்ளக் கூடாது என்று உத்தரவிட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

அணையின் பாதுகாப்புக் குறித்து ஆராயவென உச்சநீதி மன்றத்தால் அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழு, தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் முன்னரே இவ்வாறு கண்காணிப்புக் கருவிகளைப் பொருத் துவது ஏற்றுக்கொள்ள முடியாத செயல் என்றும், விஷமிகள் எவரும் அணைக்கு சேதம் விளைவித்து விடாமல் இருக்க, மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படையினை நிறுவவேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையை வலுப்படுத்துவதாகவே இருக்கிறது கேரளாவின் இத்தகைய முயற்சிகள் -என்று அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (வ)

## நக்கீரன் கோபாலை கைதுசெய்ய நீதிமன்றம் தடை

தமிழக முதல்வர் ஜெயலலிதா பற்றி அவதூறான செய்தியை வெளியிட்டது பற்றிய முறைப்பாடுகள் தொடர்பான வழக்கில், நக்கீரன் ஆசிரியர் கோபாலை கைது செய்யக்கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஜெயலலிதா பற்றி உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டதாகக் கோபால் மீது தமிழகத்தின் பல்வேறு காவல் நிலையங்களில் அ.தி.மு.க.வினர் முறைப்பாடு அளித்தனர்.

இது தொடர்பாக சென்னை ஜாம் பஜார் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கில், கோபாலைக் கைதுசெய்யாத வகையில் அவருக்கு முன் பிணை வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேபோல் தமிழகத்தில் 200 இற்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளை யும் சென்னை ஜாம் பஜார் காவல் நிலையத்துக்கு மாற்ற வேண்டும் என்று கோரி உயர்நீதிமன்றத்தில் கோபால் மனுத் தாக்கல் செய்தார். (வ)



உத்தரப்பிரதேச மாநிலம் அமேதி தொகுதியில் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள பிரியங்கா பாதுகாப்புத் தடுப்பையும் தாண்டி பொதுமக்களிடம் கைகுலுக்குகிறார்.

## கர்நாடக முதல்வர் பதவி விலக வேண்டும் காங். கோரிக்கை

கர்நாடக சட்டபையில் ஆபாசப் படம் பார்த்த அமைச்சர்களின் குற்றத்துக்கு பொறுப்பேற்று, மாநில முதல்வர் சதானந்த கவுடா பதவி விலக வேண்டும் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.


அகில இந்திய காங்கிரஸ்கட்சி செயலாளர் சுதாகர் ரெட்டி இது குறித்து தெரிவித்ததாவது:

லட்சுமண் சவேதி, சி.சி. பாட்டீல் மற்றும் கிருஷ்ணா பாலேமர், சட்டசபையில் விவாதம் நடைபெறும் வேளையில் அங்கேயே அமர்ந்து ஆபாசப் படம் பார்த்துள்ளனர்.

இந்த விடயம் ஜனநாயகத்தின் தூணாக விளங்கும் சட்டசபையை மட்டுமல்லாது, இந்திய அரசியலமைப்பையே அவமதிக்கும் செயலாகும்.

இந்த விவகாரம் தொடர்பாக, அந்த அமைச்சர்கள் ராஜினாமா செய்வதோடு மட்டுமல்லாது, முதல்வர் சதானந்த கவுடாவும் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் - என்றார். (வ)

# சட்டத்தை மீறிய சட்ட அமைச்சர்



தேர்தல் விதி முறைகளை மீறிய மத்திய சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் மீது தேர்தல் ஆணையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேச சட்டசபை தேர்தலில் மத்திய சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் மனைவி லூயிஸ் போட்டியிடுகிறார்.

மனைவியை ஆதரித்து சல்மான் குர்ஷித் பிரசாரம் செய்தபோது, உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், சிறுபான்மையினர் இட ஒதுக் கீடு 4.5 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்படும் என்று வாக்குறுதி அளித்தார்.

இதுதொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையாளர் குரேஷி, தேர்தல் ஆணையாளர்கள் சம்பத், பிரம்மா ஆகியோர் வெளியிட்டுள்ள 15 பக்க உத்தரவில் சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீட்டை அதிகரிப்பதாக வாக்குறுதி அளித்ததன் மூலம் மத்திய மந்திரி சல்மான் குர்ஷித், தேர்தல் விதிமுறைகளை மீறிவிட்டதாக தேர்தல் ஆணையம் கண்டனம் தெரிவித்துள்ளது. (வ)

# பிரணாப்பிடம் மன்றாடிய தயாநிதி மாறன்

சட்டவிரோதமாக 550 கோடி ரூபாய் பெற்ற வழக்கில் விரைவில்அழைப்பாணை அனுப்ப அமுலாக்கப் பிரிவு முடிவு செய்து உள்ள நிலையில், வழக்கிலிருந்து காப்பாற்றும்படி, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியை முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

**அமுலாக்கப் பிரிவு பதவியைக் கவனிக்கும் தன்னை, முன்அனுமதி பெறாமல் சந்திக்க வந்ததற்காக பிரணாப் முகர்ஜி தயாநிதியை கடிந்துகொண்டார்.**

தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று கைவிரித்து விட்ட பிரணாப் முகர்ஜி அமுலாக்கப் பிரிவு பதவியைக் கவனிக்கும் தன்னை, முன் அனுமதி பெறாமல் சந்திக்க வந்ததற்காக தயாநிதியை அவர் கடிந்து கொண்டுள்ளார்.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், சட்ட விரோத பணப்பரிவர்த்தனை செய்ததாக, தொலைத் தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் தயாநிதி மற்றும் அவரின் சகோதரரும், சன் குழுமத் தலைவருமான தயாநிதி மீது கடந்த வெள்ளிக்கிழமை, அமுலாக்கப் பிரிவு வழக்குப் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## இரத்தினம் சிறிதரன்

மலர்வு: 14-04-1968
உதிர்வு: 23.01.2011
திதி:11.02.2012

ஆண்டு ஒன்று ஆயிற்றே
ஆருயிர் விட்டுப் பிரிந்து
மீண்டுமொருமுறை வாரீரோ
நாம் பார்த்து மகிழ
மாண்டு நீ போனதெங்கே
மனம் கிடந்து துடிக்கிறதே

மதிவதனி (அக்கா)
செட்டியார் வளவு,
சுன்னாகம்.

(14969)(2-6-7)

# நீங்காத நினைவில் ஈராண்டு

| மண்ணுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 28 ★ 08 ★ 1945 |  | 02 ★ 02 ★ 2010 |

அமரர்
## குருநாதபிள்ளை ஞானேஸ்வரன்

நாம் வளர்ந்து விருட்சமாகி - எம்
நிழல்தனில் இளைப்பாற கனவு கண்ட தந்தையே!
இடை நடுவே பிரிந்து போக காலன்
உமை அழைத்ததேனோ!
காலங்கள் கூடிக் கடந்தாலும் நீங்கள்
வாழ்ந்த காலமும் நீங்காத உங்கள் நினைவுகளும்
எம்மை விட்டு ஒருபோதும் நீங்காது அப்பா!

54/12, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 20 ★ 11 ★ 1941 |  | 13 ★ 01 ★ 2012 |

அமரர்
## ஜெகநாதன் திலகவதி

கடந்த (13.01.2012) அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவியின் மறைவுச்செய்தி கேட்டு எமது துன்பத்தில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வ தோடு நாளை (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முருகன் கோயில் வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

குடும்பத்தினர்

(11024) (45-6)

## கடை வாடகைக்கு

யாழ். முனீஸ்வரன் வீதியில் அமைந்து இருக்கும் கடை வாடகைக்கு விடப்படும்
தொ.பே. 222 7416

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.S. நாதன், இல. 16/3 விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே. 077 614 6434

## விற்பனைக்குண்டு

C.D 100SS மோட்டார் சைக்கிள், நல் இன தென்னம்பிள்ளைகள், விதை தேங்காய்கள் விற்பனைக்குண்டு
தொடர்பு: S.N.V. கடை, இல.16, ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டுச் சந்தி அருகில். தொ.பே. 077 1394217

## காணி விற்பனைக்கு

நல்லூர் சுற்றாடலில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்புகள் மாலை 4 மணிமுதல் 8 மணி வரை.
தொடர்பு: 072 6803408 (14220) (45-)

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், குருவிகள், புதியவகைக் கூடுகள், நாய்க்குட்டிகள், புதியஇனங்களில் பூக்கன்றுகள் மற்றும் பல இன கோழிக்குஞ்சுகள் அனைத்தும் ஒரே இடத்தில் விற்பனைக்கு உண்டு.
யாழ் அக்சுவரியம்
941, K.K.S றோட், யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

German shepherd பெண் நாய் ஒன்றும் கினிக் கோழி 2 பேடுகளும் ஒரு சேவலும், வான்கோழி ஒரு சோடியும் உடன் விற்பனைக்குண்டு.
மனோன் மாஸ்ரர்
அரசடி, நாவலி தெற்கு, மானிப்பாய்.

## காணி விற்பனைக்கு

சங்கானை கிழக்கு, சங்கானையில் 3 ¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 072 7750023
077 7750023
(14177)(6-7-8)

## காணி விற்பனைக்குண்டு

கோப்பாய், இருபாலை பழம் றோட்டில் கானான் இல்லத்துக்குப் பக்கத்தில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 021 2255613, 077 5191795

## பிறீமா நம்ப 01கோழிக் குஞ்சு

பிறீமா முட்டைக் குஞ்சு (வெள்ளை, சிவப்பு) இறைச்சிக் கோழிக் குஞ்சு. ஒரு குஞ்சு 100/= ஓடர்களை முன் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இல:
077 9337287 / 077 4164734

## விற்பனைக்கு

தரமானநிலையிலுள்ள ISUZU 350 வாகனத்தின்தட்டு (OPEN BODY-ORIGINAL) விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 9357523
(14321)(6-7-8)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வெளி நாட்டில் குடியுரிமை உள்ள மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:
Nice talk 2012 @ yahoo.Com
01 1647 5322773

## வயல் காணிவிற்பனைக்கு

கிளிநொச்சி, கரடிப்போக்கு சந்தியில் இருந்து 3.5 Km தூரத்தில் 5ஆம் வாய்க்காலில் அமைந்துள்ள இருபோகம் நெற்பயிர் செய்யக் கூடிய நீர்ப்பாசன வசதிகள் கொண்ட 21 ஏக்கர் வயல்காணி விற்பனைக்குண்டு.
அதிக விலை கோரலுக்கு மட்டும்.
தொடர்பு : 077 2881855
021 2285317
(தரகர் தேவையில்லை) (14121)(6-7-8)

## காணிவிற்பனைக்கு

கைதடி, நாவற்குழியில் ஏ - 9 பாதைக் கும் ரயில் நிலையத்துக்கும் சமீபமாக 4 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 021 3211220
021 7900909

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944 | நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944 | கூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085 |

## AHAVOLI
### Institute for Higher Studies offers a Diploma Course Peace Building & Community Development Practice

The Applications are called for this course. This is a one year, week - end (Saturday & Sunday) Course that consists of 240 hours. The applicants should have the following prerequisites to apply for this course:

1. Knowledge of English as to read, write and speak.
2. A Pass in Advanced Level.
3. Interested in social activities.

The candidates will have to buy special form from our office and submit it before the 20th of February 2012.
N.B. The Diploma Certificate would be given by the National University of Ireland, Galway.

For further details please contact:
**AHAVOLI**
Institute for Higher Studies
Affiliated to national University, Galway
St. Patrick's Road, Jaffna.
Contact No 021 2222856

(14317)(2,6,7)

# ஆறாம் ஆண்டு நினைவு நாள்



அமரர்
## செல்வசீலன் அகிலன்

மண்ணுலகில்: 12.10.1989
விண்ணுலகில்: 11.02.2006

"நான் பிழைத்திருக்கிறேன்,
நீங்களும் பிழைப்பீர்கள்" (யோ.14:19)
ஆண்டுகள் பல உருண்டு மறைந்தாலும்,
நீங்கள் என்றும் எம்முடன்,
உங்களை மறப்பதற்கில்லை எம் இதயம்.

இராமலிங்கம் வீதி,
உடுவில், சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(13311)(2-6-7)

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | உதிர்வு |
|---|---|---|
| 04 ★ 03 ★ 1952 |  | 11 ★ 02 ★ 2001 |

## வைத்திலிங்கம் துரைசிங்கம்

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடங்களோ பதினொன்றாகின அப்பா
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்.......

இல. 51, 5ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி,
நல்லூர்.

தாய், மனைவி,
பிள்ளைகள்,
மருக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரிக்கையை நிரூபித்தால் தமிழீழத்தை ஏற்கத் தயார்

## சவால் விடுகிறது ஹெல உறுமய

கொழும்பு,பெப்.11

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வந்து தமது தரப்புக் கோரிக்கைகள் நியாயமானவை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதார பூர்வமாக நிரூபித்தால் தமிழீழம் என்ற கோரிக்கையையும் ஏற்றுக்கொள்வதற்கு நாம் தயார் என்று ஜாதிக ஹெல உறுமய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சவால் விடுத்துள்ளது.

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பில் சிங்கள இலத்திரனியல் ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும் போதே அதன் பிரதிச் செயலாளரும், மேல்மாகாண சபை அமைச்சருமான உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 பிளஸ் குறித்துப் பேசுவதற்கு முன்னர் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை 25 வருடங்களாக நடைமுறைப்படுத்த முடியாமல் போனமைக்கான கார ணத்தை ஆட்சியாளர்களும், அரசியல் வாதிகளும் உணர வேண்டும்.

சிங்களத் தேசிய அழுத்தங்களுக்கு எதிராக நாட்டில் எதையும் செய்யமுடியாது என்ற உண்மையையே அது உணர்த்துகின்றது.

எனவே, நிலைப்பாடு சரியானது என்பதை அவர்களுக்கு உணர்த்திய பின்னரே அதிகாரப் பரவலாக்கலை நோக்கிப் பயணிக்க முடியும். இல்லையேல் அவ்வாறு செய்யமுடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு நாம் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். சிங்களத் தரப்பு எதுவித நிபந்தனைகளுமின்றியே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருகின்றது. நீங்கள் உங்கள் பக்க நியாயத்தை ஆதார பூர்வமாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் நிரூபிக்கும் பட்சத்தில் தமிழீழத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளத் தயார்.

எனவே,பொய் என்ற கற்களைப் பொறுக்கித் திரியாமல், காலத்தை இழுத்தடிக்காது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வந்து உங்கள் கோரிக்கைகள் நியாயமானவை என்பதை நிரூபிக்குமாறு நாம் சவால் விடுக்கின்றோம் - என்றார்.

(ச-சி)

## அதிவேக நெடுஞ்சாலையில் 151 மில். ரூபா வருமானம்

### நிர்மல கொத்தலாவல தெரிவிப்பு

கொழும்பு,பெப்.11

தெற்கு அதிவேக வீதி திறந்து வைக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை 151 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையில், கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் 7 கோடி ரூபாவும், ஆரம்பத்திலிருந்து இன்று வரை 151 மில்லியன் ரூபாவும் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

**கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் 7 கோடி ரூபாவும், ஆரம்பத்திலிருந்து இன்று வரை 151 மில்லியன் ரூபாவும் வருமானமாகக் கிடைக்கப் பெற்றுள்ளது.**

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வாகனத் தொடரணிகள் அதிவேக வீதியில் பயணம் செய்வதற்கு தேசிய பொது வீதிகள் சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்டும், ஏனைய வாகனங்களுக்கு அவற்றின் வகை மற்றும் பயணத் தூரம் என்பவற்றுக்கேற்ப 150 ரூபா முதல் 2000 ரூபா வரை கட்டணம் அறவிடப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## லஞ்சம் பெற்ற இருவர் கைது

**அதிகாரி 6000 ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டார் என்று லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

கொழும்பு,பெப்.11

லஞ்சம் பெற்றனர் எனக் கூறப்படும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை உதவியாளர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரிய நடைமுறைக்கு மாறாக வாகனமொன்றை வேறு ஒருவரின் பெயருக்கு மாற்றுவதற்கென குறித்த அதிகாரி 6000 ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டார் என்று லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அதிகாரிக்கு உடந்தையாக இருந்த மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டார் என்று ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சந்தேக நபரான விசாரணை உதவியாளரைக் கைது செய்யும்போது அவரிடம் ஒரு லட்சத்து 24 ஆயிரம் ரூபா பணம் இருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பணம் எவ்வாறு அவருக்குக் கிடைத்தது என்பது தொடர்பாக லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



பாதணிகள் மற்றும் பதனிடப்பட்ட தோல் உற்பத்திப் பொருள்களுக்கான கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இந்தக் கண்காட்சி மண்டபத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாடாவைவெட்டித் திறந்து வைக்கின்றார்.

### தேசத்துக்கு மகுடம் கண்காட்சி:

## போதைப்பொருள் பாவித்த 35 பேர் கைதாகினர்

அனுராதபுரம்,பெப்.11

அனுராதபுரம், ஒயாமடுவையில் நடைபெறும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி வளாகத்தினுள் போதைப் பொருள் உட்கொண்ட நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை சென்ற 35 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கண்காட்சிக் கூட வளாகத்தினுள் போதையில் செல்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தநிலையில் இவர்கள் மதுபானம், கஞ்சா, அபின் போன்ற போதைப்பொருள்களை உட்கொண்ட நிலையில் கண்காட்சி வளாகத்தினுள் சென்ற போது போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு ஒயாமடுவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

**கண்காட்சிக் கூட வளா கத்தினுள் போதையில் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.**

இந்த நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று ஒயாமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ச-301)

## தபால் விநியோகத்துக்கு 10ஆயிரம் சைக்கிள்கள்

கொழும்பு,பெப்.11

தபால் விநியோக உத்தியோகத்தர்களுக்கென இந்த வருடம் பத்தாயிரம் சைக்கிள்களை பகிர்ந்தளிப்பதற்கு தபால் சேவைகள் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

சைக்கிள்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் கஷ்டப் பிரதேசங்களில் தபால் விநியோகத்தில் நிலவுகின்ற சிரமங்கள் நீங்கிவிடும் என்று அமைச்சர் ஜீவன்குமாரதுங்க தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் தபால் விநியோக உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக சுமார் 3,500 சைக்கிள்களைப் பகிர்ந்தளிக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தபால் நிலையங்களை வலையமைப்புக்கு உட்படுத்துவதற்கான திட்டத்தை விரைவுபடுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

## கூட்டமைப்பை விமர்சிப்பதற்கு அஸ்வருக்கு அருகதையில்லை

கொழும்பு,பெப்.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பற்றியோ அதன் தலைவர் ஆர்.சம்பந்தனின் செயற்பாடுகள் பற்றியோ விமர்சிக்கும் உரிமை வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு மட்டுமே உண்டு. நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வருக்கு இதற்கான எதுவித அருகதையும் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

**புலிகள் ஒழிக்கப்பட்டு விட்டனர் என்று அரசு கூறியது. இப்போது புலிகள் உள்ளனர் என்று கூறுவதும் நீங்கள்தான். உங்களுக்கு புலிகள் இல்லாவிட்டால் பிழைப்பு நடத்த முடியாது என்கிறார் அரியநேத்திரன் எம்.பி.**

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுவிதிகள் சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் பல இடங்களில் தமிழ் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு பௌத்த விகாரைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் ஆதாரமில்லாமல் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம் என்று தெரிவித்தார்.

தாம் ஆதாரம் இல்லாமல் எவற்றையும் கூறவில்லை. விகாரை அமைப்புத் தொடர்பான புகைப்படங்கள் உள்ளிட்ட பல தகவல்களை நாம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளோம் என்று அரியநேத்திரன் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த அஸ்வர், உங்கள் தலைவர் சம்பந்தன் புலம்பெயர் தமிழ் மக்களைச் சந்திக்கிறார். உங்களைச் சேர்த்துக் கொள்வதில்லை என்றும், புலிகளுக்கு வால் பிடிப்பவர்கள் என்றும் கூறினார்.

இதற்குப் பதிலளித்த அரியநேத்திரன், 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி புலிகள் ஒழிக்கப்பட்டு விட்டனர் என்று அரசு கூறியது. இப்போது புலிகள் உள்ளனர் என்று கூறுவதும் நீங்கள்தான். உங்களுக்கு புலிகள் இல்லாவிட்டால் பிழைப்பு நடத்த முடியாது என்று தெரிவித்தார். (ச-சி)

## மக்கள் கட்சியில் இணையுமாறு சந்திரிகாவுக்கு அழைப்பு

கொழும்பு,பெப்.11

இலங்கை மக்கள் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

அவரது கணவரான விஜயகுமாரதுங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை மக்கள் கட்சியின் தலைவராக சந்திரிகா பணியாற்றியிருந்தார்.

இந்தக் கட்சி தற்போதைய ஆளும் கட்சியின் பங்காளிக்கட்சி என்ற போதிலும் தற்போதைய ஆட்சியாளர்களினால், மக்கள் கட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை கட்சியில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும் அவர் அதற்கு இதுவரை எந்தப் பதிலையும் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IIS

IIS CITY CAMPUS

# 16ஆவது ஆண்டு நிறுவன தின விழா
## பட்டமளிப்பு வைபவ சிறப்பு மலர்



### சாதனை படைக்கும் முன்னோடி நிறுவனம்

IIS நிறுவனத்தின் 16வது நிறுவன தினத்தையும் பட்டமளிப்பு நிகழ்வை யொட்டியும் இன்று வெளிவந்திருக்கும் இவ்விதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

அரசியல், யுத்த நெருக்கடிகளும் புதிய தொழில் முயற்சிகளுக்கு சாதகமற்றதான நிலைகளும் நிலவிய 1990 களின் நடுப்பகுதில் IIS நிறுவனம் திரு K.Vignesh ஆல் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் அவரது சிறந்த முயற்சியாலும், தூரநோக்கு கடின உழைப்பு தெளிவான இலக்குகள் சிறப்பான தந்திரோபாயங்களால் இன்று உன்னதநிலையை அடைந்துள்ளது. இன்று IIS நிறுவனம் பல மட்டத்தில் தரமான தகவல் தொழில்நுட்பக் கல்வியையும் சேவைகளையும் வழங்கும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக திகழ்கின்றது. இந்நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழக கணனி நிறுவனத்துடன் இணைந்து தகவல் தொழில் நுட்பத்தில் பட்டப் படிப்பு கல்வியினை வழங்குகின்றது. மேலும் பல சர்வதேச கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு பட்டு பல தொழிற்பிரிவுகளுக்கு பொருத்தமான பல் நிலை தகவல் தொழில் நுட்பக் கல்வியினை வழங்கி வருகின்றது. மற்றும் நகர கைத்தொழில் வர்த்தகத்துறையினருக்குச் சேவைகள் மற்றும் ஆளணியினர் வழங்குவதில் முக்கிய இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தை தகவல் தொழில் நுட்பத்தில் பெங்களூர், சென்னை, ஹைதராபாத் போன்று விருத்தியாக்கலாம். இதற்கான மனித வளமும் தொழில் விருத்திக்கான சாதக சூழ் நிலைகளும் உண்டு. இதனால் தற்போதைய முதலீட்டுச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். IIS நிறுவனம் தனது முயற்சியில் மென் மேலும் வளரவும் நகரின் தகவல் தொழில் நுட்பத்துறையில் உன்னத நிலைகளை பெற வைப்பதற்கும் மேற்கொள்ளும் பணிகளுக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்**



## Digital Revolution

It is with great pleasure I give this massage to the supplement being published honouring the students and the Institute Academics on the occasion of IIS City Campus 16th Institute day and graduation 2012. I have had close relationship with the campus from the inception onwords. The Institute by rendering a standard, discipline and assured service has earned its regard and respects of Sri Lankans and people abroad.

We are now living through one of the most exciting period change in history. Virtually every thing we do in our daily life, in our work and all our structures, is experiencing- or will soon experience- fundamental transformation. This is called digital revolution. Students of today will be leaders of tommorrow, leading the digital revolution that will change the organization in the 21st century.

I am certain that the Instutite will grow further in the years to come. I am pleased to note that the Institute Board as a clear Vision about their future and formulating future strategies that will help them to become a market leader in this field. Building up of e_facilities in the institute's library and lecture hall will further strengthen their activities in the field of Information Technology and this will lead them to join hands with our Sri Lankan President Vision of bringing Sri Lanka in "Information Technology and Science Based Knowledge Country" in the year 2017.

I wish them all success.

Professor.M.Nadarajasundaram,
Department of Financial Management,
Faculty of Management Studies & Commerce,
University of Jaffna, Sri Lanka.



### E-Citizens Accredited

It is with great pleasure I give this massage to the supplement being published honouring the students and the Institute Academics on the occasion of the sixteenth Institute day of the IIS City Campus and its graduation 2012. It is an institution that maintains discipline and quality in its performance. The students graduated from this institute would be distinctly recognised by their attitudes and attributes in this regard.

The Institute of Communication Technology Agency, commonly known as ICITA is one of the main bodies of the Government for matters related to Information and Communication Technology. The main of ICTA is to make all Sri Lankans as e-citizens – who would be able to handle matters in the era of information technology through e-technologies. I believe that the Institute of Informatics Studies, well known as "double I S", has already achieved this years ago on its own style of approach and is stepping forward into the next stages of e-citizenship. If one says that the "double I S" doubles its institutional strength through its achievement every year, it would not be an exaggeration, it is a reality. It started with a few computers during the difficult period but giving a literacy on computer skills for hundreds of students, and grew rapidly to this stage as a City campus which, now, provides courses in multi-dimension, accredited by many academic bodies known for their standards. Accreditation is a crucial factor for any institution to be a successful establishment. The main reason for success of IIS in general, I believe, is the accreditation, in addition to the courages, determination and tireless efforts of the Directory, Mr V K Vignesh. Those who seek employments are expected to have several skills including the key skills: computer skills, communication skills and managerial skills . The Institute has already recognised this necessity and provides courses in these essential areas, in addition to other main courses in Computing and Business studies *etc*. This way, it paves the ways for employment and, in addition, it gives jobs for quite a number of people at the institute itself.

The students who have graduated from the City campus would have the knowledge, talents and skills for their journey through the cyber-world of the 21st century having the capability of the e-citizens of the next stages as if the future is today. It is my pleasure to congratulate all the students for their success and I wish them all the best future with prosperity. At this juncture it has to be emphatically mentioned here that the staff of Institute through their dedicated and disciplined services form the pillars of the Institutes for its successful stand, on the firm foundation that Mr Vignesh has established. *Hats off* to the staff for their services. "*Behind everyman's success is there a lady*" is a saying, and in case of Mr Vignes, behind him is not only the lady but the whole family, especially his beloved father – who was one of the pivot in starting the institute helping and guiding him in many aspects. Even in the absence of his father, now, if Mr Vignesh can march forward in preserving his aims and objectives of such an Institution as a successful establishment, it is because not only of the courages and determination he has, but also of the talents and skills he inherited from his beloved father. It is my earnest happiness to congratulate the directory and people behInd him for a fruitful success in the peninsula.

I wish you all for the best for stepping forward wit this Sprit of success

**Dr S Mahesan,** (Head/Computer Centre)
Senior Lecturer Gr.I /Department of Computer Science, University of Jaffna, Sri Lanka



### மேலும் சிறப்புற

எமது பிரதேசம் போரினால் நலிவுற்று மீண்டும் பொலிவு பெற்று வரும் இந்தக் கால கட்டத்தில் நிர்மாணத்துறையின் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அதற்கு ஊன்று கோலாக தலை நிமிர்ந்து நிற்கக்கூடியதாக மிளிரும் இந் நிறுவனம் தனது 16வது அகவையை இன்று அடைவதையிட்டு மிகவும் மனமகிழ்ந்து தனது பணியின் இலக்கினை மேன் மேலும் விரிவடையச் செய்து சிறப்புற மனமார வாழ்த்துகின்றேன்.

சி.உருத்திரலிங்கம்
Managing Director Ruhlins



### OUTSTANDING PERFORMANCE

As Sri Lanka moves towards rapid development, especially with the vast opportunities on offer in the north of Sri Lanka, Institute of Informatics Studies (IIS) has demonstrated outstanding performance and potential as an Edexcel BTEC centre over the years. Pearson Edexcel, UK's largest awarding body for academic and vocational qualifications has been associated with IIS City Campus of Jaffna to create pathways for the students of Jaffna and the north of the country through the BTEC Higher National Diploma qualifications as we remain excited about the potential of this region as Jaffna emerges in a new era of development that requires skilled and qualified professionals capable of driving the much needed change. With over 1.1 million BTEC vocational registrations made across the world annually, BTEC Higher National Diploma by Pearson Edexcel is the most effective pathway to a Bachelor's degree and becoming 'work-ready' at the same time. I am confident at Pearson Edexcel together with the Institute of Informatics Studies of Jaffna we will create a larger number of skilled and qualified professionals in the years to come. On behalf of Pearson Edexcel, I take this opportunity to congratulate the students, parents and the management of Institute of Informatics Studies for their outstanding performance and commitment.

**Suriya Bibile** (Regional Development Manager - Sri Lanka & Maldives Pearson Edexcel )



### Renowned Links

It is with great pleasure that I am sending this message on the occasion of the 16th Institute's day and the Graduation Ceremony of IIS City Campus.

All the students who are getting qualified in different fields today can be very proud as they have achieved courses leading to International recognition. It is also an important day for the Students as they take one step forward in their unending journey of seeking professional excellence.

I take this opportunity to appreciate the Institute's effort in preparing students not only for local job market but also for foreign job market needs with link up of many renowned awarding bodies such as BCS The Chartered Institute for IT. My congratulations for the new graduates and I wish them a better future and hope they will also join hands with the others passed out earlier to contribute towards making Sri Lanka a Professional hub in the region.

**Niranjala J Weerasinghe (Regional Manager -Sri Lanka)**
BCS The Chartered Institute for IT



### பொறியியல் பயிற்சிநெறிகள்

எந்தவொரு நாட்டிலும் பொருளாதாரத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் நிர்மாணத்துறை கணிசமான தொரு பங்கினை வகிப்பதை மறுக்க முடியாது. எமது நாட்டுக்கும் இது பொருந்தும். அதிலும் அண்மைக்காலத்தில் எமது பிரதேசத்தில் பாரிய உட்கட்டுமான நிர்மாணங்கள் அதிக அளவில் நடைபெற்றுக் கொண்டிருப்பது கண்கூடாகும். இவற்றில் பெரும்பாலான நடுத்தர தொழில்நுட்ப அணியினர் (middle level technical cadre) எமது பகுதி ஆளணியினரால் நிரப்பப்படவில்லை. அத்துடன் அவ்வாறான ஆளணியினருக்கு தட்டுப்பாடும் நிலவுகின்றது. மேலும் சில வருட அனுபவத்துடனான இலங்கையரை நடுத்தர தொழில்நுட்ப பதவிகளுக்கு வேறுநாடுகளும் விரும்பி வரவேற்கின்றன. இவ்வகை ஆளணியினருக்கான தட்டுப் பாட்டை நிவர்த்தி செய்ய உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழக அனுமதிபெறத் தவறியவர்களுக்கு அல்லது தாம் விரும்பிய எந்திரவியல் துறைகளுக்கு அனுமதி பெற தவறியவர் களுக்கு இவ்வாறான நடுத்தர தொழில்நுட்பவியலாளருக்கான கல்வியையும்அதனுடனொட்டிய பயிற்சியையும் HND (Civil Eng), HND (Q.S) மூலம் IIS வழங்கி வருகின்றது இக்கற்கை நெறிகள் பிரித்தானிய Edexcel நிறுவன அங்கீகாரத்துடன் நடத்தப்பட்டு பூரணப்படுத்தியோருக்கு உரிய பட்டம் வழங்கப் படுகின்றது.

HND(CIVEL Eng) ஆனது கட்டட நிர்மாணம், பெருந்தெருக்கள் , பாலங்கள், நீர்ப்பாசனம், நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் எந்திரவியல் போன்ற சகலவகை அடிப்படை ஆரம்ப எந்திரவியல் அறிவையும் வழங்கும் ஒரு கற்கை நெறியாகும். இக்கற்கை நெறியை கற்று தேறியோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாயப்புக்களை பெற்றுத்தருவதோடு பிரித்தானியா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் உயர்கல்வி நிறுவனங்களில் தமது மேலதிக பட்டப்படிப்புக்களையும் தொடரலாம்.

அதேபோல் HND.QS மேற்சொன்ன சகலவிதமான நிர்மாண வேலைகளுக்கான கணிய அறிவுப்பின் புலத்தையும் அவற்றுடன் ஒத்த ஓரளவு குடிசார் எந்திரவியல் நிர்மாண அறிவையும் மாணவர்களுக்கு வழங்குகின்றது. மேலே இதில் குறிப்பிட்ட படி உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பு, பட்டப்படிப்பு வாய்ப்பு உலக அளவிலான கணிய அளவியலாளர் (Royal Institute of Quantity Surveys) பதிவு என்பனவற்றை இவ்அடிப்படை கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்களால் தொடரமுடியும். இவற்றுடன் Diploma in AutoCAD கல்வியானது நிர்மாணம்சார் பட வரைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அத்து டன் எந்திரவியல் துறையில் மேற்படிப்பை மேற்கொள்ள விரும்பும் சகலருக்கும் இந்த அடிப் படை AutoCAD பயிற்சி இன்றியமையாதது. இவர்களுக்கு குடிசார் எந்திரவியல் பாட நெறிகளும் போதிக்கப்படுவதால் நடுத்தர மட்ட ஒப்பந்தக்காரர்கள் இவர்களை விரும்பி வேலைக்கு அமர்த்துகின்றனர்..

இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டு தமது எதிர்காலத்தை நிர்மாணம் சார் துறைகளில் வளர்த்துக் கொள்ளவிரும்பும் மாணவர்கள் ஆண்களாயினும் பெண்களாயினும் முழு சர்வதேச அங்கீகாரமுள்ள IIS இன் இவ்வாறான பயனுள்ள கற்கை நெறிகளில் இணைந்து தமது எதிர் காலத்தை வளப்படுத்திக் கொள்ள எனது வாழ்த்துக்கள்.

எந்திரி.சி. தயாபரன்.



### IIS ஒரு தனித்துவம் மிக்க தனியார் உயர்கல்வி வளாகம்

இன்றைய இந்நாள் எமது நிறுவன நாட்காட்டியில் முக்கியமான பொன்நாளாகும். எமது நிறுவனம் தனது 16வது ஆண்டுகால கல்விச்சேவையிலே இந்தப் பிரதேசத்திற்கும் நாட்டிற்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கி இன்று 17வது வருட செயற்பாட்டிலே காலடி பதித்துள்ளது. இன்று இந்த 16வது நிறுவன விழாவை நாம் கொண்டாடும் அதே வேளையில் கல்வியாண்டு 2011ல் கல்வி கற்று வெளியேறி இன்று பட்டங்களைப் பெறக்காத்திருக்கும் மாணவர்களுக்கு எனது சார்பிலும் நிறுவனத்தின் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். மேன்மேலும் உங்கள்துறைகளிலே முன்னேறி உங்கள் இலட்சியங்களை அடைய வாழ்த்துகின்றேன். மாணவர்களே! கனவுகளோடு உங்களை வளர்த்த பெற்றோருக்கும், நல்லதொரு எதிர் காலத்திற்காக உங்களை நம்பியிருக்கும் இத்தேசத்திற்கும் உதாரண புருஷர்களாக நீங்கள் விளங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். கணினி நிறுவனமாக 1996ம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட எமது நிறுவனம் இன்று இலங்கையிலே குறிப்பிட்டு பேசும் அளவிற்கு ஓர் சிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனமாக பரிணமித்து நிற்கின்றோம். கணினி விஞ்ஞானம், குடிசார் பொறியியல், வர்த்தக முகாமைத்துவம் என்னும் மூன்று துறைகளில் சான்றிதழ், டிப்ளோமா, பட்டக்கல்வி என வழங்கி வருகின்றோம். எமது கற்கை நெறிகள் ஒவ்வொன்றும் எமது மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதோடு எமது பிரதேச/தேசிய வளர்ச்சிக்கும் பங்களிப்பதாக அமைந்திருப்பது சிறப்பாகும். எமது வெற்றியின் இரகசியம் எமது கல்வி முறைமையின் அணுகு முறையாகும். அதாவது மாணவர்களை முழுமையாக தொழிற்துறைக்கு ஏற்ற வகையில் தயார் படுத்துவதாகும். கடந்த 16 ஆண்டுகளாக வட இலங்கையிலே முதன்மையான உயர்கல்வி நிறுவனமாக விளங்குவதற்கு அனைத்து வழிகளிலும் எம்மை வழிநடத்தி ஒத்துழைப்பு தந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இச்சந்தர்ப்பத்திலே நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் பல்வேறு நிறுவனங்கள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட போதும் எமது செயற்பாட்டில் முழுமையான நம்பிக்கை கொண்டு எம்முடன் இணைந்த மாணவ சமூகத்திற்கும் பெற்றோர்களுக்கும் கல்விசார் அதிகாரிகளுக்கும் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதம நிறைவேற்று அதிகாரி (IIS/IIS City Campus)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐந்து மாவட்டங்களிலும் அனேகமாக மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## அமுலாக்கல் திட்ட செயலமர்வு

வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்படும் அதிபர்களுக்கான வருடாந்த அமுலாக்கல் திட்டம் தொடர்பான செயலமர்வு நாளை, நாளை மறுதினம் ஆகிய இரு தினங்களும் நடைபெறவுள்ளன.

இந்தச் செயலமர்வு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வகை மூன்று பாடசாலை அதிபர்களுக்கு நாளையும், ஏனைய வகைப் பாடசாலை அதிபர்களுக்கு நாளை மறுதினமும் இந்தச் செயலமர்வு நடைபெறுமென அறி விக்கப்பட்டுள்ளது. (ந-38)

# பறவைக் காய்ச்சல் வதந்தி பரப்புவோர் மீது நடவடிக்கை

**பறவைக் காய்ச்சல் பரவுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நாடுகளிலிருந்து நம் நாட்டுக்குப் பறவைகள், இறைச்சி வகைகள், முட்டைகள்மட்டுமல்லாது பறவை இறகு ஒன்றைக்கூட கொண்டுவருவதற்கு இடமளிக்கப்பட்டிருக்கவில்லை.**

கொழும்பு, பெப்.11

பறவைக் காய்ச்சல் தொடர்பாக வதந்தி பரப்புவோர் மீது உடனடி நடவடிக்கை எடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் பறவைக் காய்ச்சல் இல்லை என்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனாலும் சிலர் இந்த நாட்டில் பறவைக் காய்ச்சல் பரவி வருவதாக நாடு முழுவதும் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். எனவே உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களை மேற்கொள்வோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது எனக் கால் நடை உற்பத்திகள் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகமான டாக்டர் குமார டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பறவைக் காய்ச்சல் பரவுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நாடுகளிலிருந்து இந்த நாட்டுக்குப் பறவைகள், இறைச்சி வகைகள், முட்டைகள்மட்டுமல்லாது பறவை இறகு ஒன்றைக் கூடக் கொண்டுவருவதற்கு இடமளிக்கப்பட்டிருக்க வில்லை. எனவே கோழி இறைச்சியையோ, முட்டைகளையோ உண்பதற்கு பொதுமக்கள் பீதியுறுவது அவசியமற்றது- என்றார். (ந-22)



பகவான் ஸ்ரீ சத்தியசாயி காரைதீவு சேவா நிலையத்தால் கடந்த வியாழக்கிழமை பாடசாலை மாணவர்களுக்கான ஆன்மிக விழிப்புணர்வுக் கருத்தரங்கு காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் அகில இலங்கை சத்தியசாயி நிறு வனங்களின் மத்திய அறக்கட்டளை உறுப்பினர் டாக்டர் என்.பிரேமதாசன் உரைநிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம். (ந)

# குற்றம் புரிந்தவர்களுக்கு தனிக் குடியிருப்புகள்

### சுவிஸ் அதிகாரி தகவல்

சுவிஸ் நாட்டு மத்திய அதிகாரிகளின் சர்ச்சைக்குள்ளாகி குற்றவியல் பின்னணியில் உள்ள புலம்பெயர்ந்தோர் அனைவரும் தனிக் குடியிருப்புகளில் அமர்த்தப்படுவர் என்று மத்திய புலம்பெயர்ந்தோர் துறையின் தலைவரானமரியோ கட்டீகெர் தெரிவித்தார்.

மரியோகட் டீகெர் செய்தி நிறுவனம் ஒன்றுக்குஅளித்த பேட்டியின் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

டிசினோவின் அரசிலுள்ள லீகா டேய் டிசினேசி இயக்கத்தின் முக்கிய நபரால் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. கியாசோ ஊருக்கு வெளியே உள்ள குடியிருப்புகள்தான் அவர்களுக்குரிய தூங்கும் இடங்கள். அவை சிறையிருப்புகள் அல்ல என்றார்.

மேலும் ஆபிரிக்காவிலிருந்து புலம் பெயர்ந்து எல்லையோரப் பகுதிகளில் வாழும் இளைஞர்கள் சட்டரீதியான செயல்களில் ஈடுபடுவது குறித்து அடிக்கடி மக்கள்முறையிடுகின்றனர்.

அத்துடன் புலம் பெயர்ந்தோரில் அதிகமானோர் நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுகின்றனர்.

எனினும் இந்தச் சட்டங்களை மீறி நடக்கும் சிலருக்காகவே இந்தத் தனிக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ந)

# கண் சத்திரசிகிச்சை முகாம்

சுழிபுரம், பெப்.11

புலம்பெயர்ந்து லண்டனில் வாழும் காரைநகர் மக்கள் நலன் காக்கும் அமைப்பினால் கடந்த வாரம் கண்சத்திர சிகிச்சை முகாம் மூளாய் கூட்டுறவு ஐக்கிய சங்க வைத்தியசாலையில் இடம்பெற்றது.

வைத்தியநிபுணர் எஸ். குகதாசன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சிகிச்சை முகாமில் காரைநகர் பிரதேச மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இதேவேளை இந்த அமைப்பு நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான கட்ட டப் புனரமைப்புப் பணிகளுக்கும் நிதியுதவி வழங்கவுள்ளது. நேரடியாக வைத்தியசாலைக்கு வருகை தந்த இந்த அமைப்பின் குழுவினர் வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர். (ந-28)

ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
கோபாலன் தனசேகரம்

அமரர்
தனசேகரம் ஞானசேகரம்

09.04.1933 அன்னை மடியில் 12.10.1977
06.02.2007 ஆண்டவன் அடியில் 23.12.2007
திதி: சதுர்த்தி

ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்திட்டாலும்
இன்றும் எம்மால் நம்பமுடியவில்லை நீங்கள்
சற்றே விலகியிருப்பதைப் போன்ற உணர்வுகள்தான்
உங்கள் நினைவுகள் என்றென்றும் மறைந்திடுமோ?
புன்னகை சிந்தும் உங்கள் முகங்களைக் காண
நித்தம் நித்தம் ஏங்கித் தவித்து
வாழ்ந்து கொண்டு கண்ணீர்ப்பூக்களையே
காணிக்கையாக்குகின்றோம்.



செல்வ விலாஸ்,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.
0771881169

(12667)(2-6-7)

என்றும் உங்கள் நினைவுடன்
- குடும்பத்தினர்.

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
20.08.1976

இறப்பு
03.02.2010

திதி - சங்கட சதுர்த்தி

மார்க்கண்டு
சிவராசா

நேர்மை தவறவில்லை அப்பா நீ
நேர் வழி சென்றிருந்தாய்
பாசப்பிணைப்புடனே எங்களை
பக்குவமாய் காத்து வந்தாய்
எமை விட்டுப் பிரியமனம் உங்களுக்கு
எப்படி வந்ததப்பா....

இரண்டு வருடங்கள் மறைந்து விடினும் – எம்
இதயத்தின் வடுக்கள் மட்டும் ஆறவில்லை
கண்டங்கள் இரண்டு கடந்தாலும்
காயம் விட்டு உயிரே நீங்கினாலும்
உறவே உமை என்றும் நாம் மறக்கமாட்டோம்


அழியாத புகழ் கொண்ட எம் அப்பாவே
உங்களை சதிசெய்து சாய்த்தனரோ பாரினிலே

- அனுசியா, அபிராமி. (பிள்ளைகள்)

32, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரின் இனப்படுகொலை டென்மார்க்கில் நடந்த கண்காட்சி



இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினத்தைக் கண்டித்து கவனயீர்ப்புக் கண்காட்சி டென்மார்க் கொல்பேக் நகரில் கடந்த புதன்கிழமை நடை பெற்றது.

சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தமிழினம் சுதந்திரத்தை இழந்து நிற்கின்றது. ஈழத்தமிழர்கள் இன்றும் மரணப்போராட்டத்தில் நிற்கின்றனர் என்பதை டென்மார்க் மக்களுக்கு இந்தக் கண்காட்சி எடுத்துக் காட்டுகிறது.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலைகளையும் ஆக்கிரமிப்புகளையும் தாங்கி நிற்கும் இந்தக்கண்காட்சியை டெனிஸ் மக்கள் ஆர்வத்தோடு பார்வையிட்டனர். மேலும், சனல் 4 இல் வெளிவந்த கொலைக்களம் தொகுப்பு அடங்கிய ஒளித்தட்டுகள் (சி.டி) டெனிஸ் மக்களுக்கு வழங்கப்பட்டன. (வ)

## நாடுகடந்த தமிழீழ அரசின் பொதுக்கூட்டம் நோர்வேயில்

தமிழ் மக்களுடன் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ளும் நோக்கில் நோர்வேயின் பர்கன் நகரில் நாடு கடந்த தமிழீழ அரசின் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை Lodde fjord Kultursal Vannkan ten-பர்கன் நகரின் மாலை 6 மணி தொடக்கம் 8 மணி வரை பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் நாடு கடந்த தமிழீழ அரசின் செயற்பாடுகள் குறித்த கருத்துப் பரிமாற்றம் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

நாடு கடந்த தமிழீழ அரசுக்கு நோர்வேயிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தோமஸ் அலோசியஸ் மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசின் ஊடகத்துறை துணை அமைச்சர் சுதன்ராஜ் பிரான்ஸிலிருந்து வருகை தந்து இந்தப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்ரகுமாரன் காணொலி ஊடாக உரையாற்றவுள்ளதுடன், மக்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்கவுள்ளார்.

சிறப்புரைகள், கலந்துரையாடலுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

ஆர்வமுள்ள அனைவரையும் இந்த பொதுக் கூட்டத்தில் பங்கேற்குமாறும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்த துணை நிற்குமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (வ)

## ராமேஸ்வரம் மீனவர்கள் கைது

ராமேஸ்வரம் மீனவர்கள் 4 பேரை நடுக்கடலில் படகுடன் இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 600 விசைப்படகுகள் கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தன. அப்போது அங்கு 3 போர் கப்பல்களில் ரோந்துவந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களை எச்சரித்து விரட்டியுள்ளனர்.

மேலும் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஜான் பிரிட்டோ என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் ஜான் பிரிட்டோ, ராபர்ட், பெட்வின், மரியகிளாசன் ஆகிய 4 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

பின்னர், மீனவர்களை இலங்கை தலைமன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றதாக ராமேஸ்வரம் திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மெய்வன்மைப் போட்டிகள்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் இன்று சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் அருட்தந்தை கே.ஜேம்ஸ் சிங்கராஜர் தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக நிதித்துறை பணிப்பாளர் வின்சென்ற் ஸ்ரான்லி மனுவேல்பிள்ளை கலந்து கொள்வார். (வ-325)

***

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி எல். என்.ஜோசப் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் கலந்து கொள்வார்.(வ-8)

***

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வண்மைப் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு கந்தசாமி ஞாபகார்த்த விளையாட்டு மைதா னத்தில் பாடசாலை அதிபர் பிரதா நவரத் தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அப்பாத்துரை ஈஸ்வர நாதன் கலந்து கொள்வார். (வ-16)

***

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் பி.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (வ-8)

***

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளையார் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வண்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் இ.ஸ்ரீநடராசா தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் கலந்து கொள்வார். (வ-78)

***

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று காலை 9மணிக்கு அதிபர் வே.க. இரத்தினகுமார் தலைமையில் நடைபெறும். (வ-135)

***

நவாலி மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

## சமய சந்நிதிகளில்

பருத்தித்துறை கல்லூரி வீதி ஸ்ரீ பேச்சி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக்கோல விழாவும் 108 அஸ்டோத்திர சங்காபிஷேகமும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் 11.30 வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து 11.30 மணிக்கு ஓய்வு பெற்ற ஆசிரியர் க. பாலசுப்பிரமணியம் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்துவார். மாலை நிகழ்வுகளாக மாலை 6 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் செயலாளர் சி.பசுபதியின் தெய்வீக சொற்பொழிவும், காட்சியும் காணமும் கதம்ப நிகழ்வும் மற்றும் இசை நிகழ்வுகளும் இடம் பெறும். (வ-78)

***

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்து அன்னை கெபியில் இன்று மாலை திருவிழா நடைபெறவுள்ளது. மாலை 5 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆராதனைகள் ஆரம்பமாகி திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (ம-135)





வெளிவந்துவிட்டது

புகழ்பெற்ற காதல் கதைகள்



ஷாஜகான் - மும்தாஜ்
அம்பிகாபதி - அமராவதி
லைலா - மஜ்னு
ரோமியோ - ஜுலியட்.

இசைப்பிரியாக்களுக்கு நீதி வேண்டும்!



பிரான்ஸ் அதிபரின் 1 நாள் சாப்பாட்டுக்கு ரூ.7.80 லட்சம்



ஜனாதிபதியின் யாழ்.வருகை



"மொத்தத்தில் யாழ்.மக்களின் தற்போதைய எண்ணம் என்னவென்றால் தங்கள் வீதிகள் பொலிவு பெறவாவது ஜனாதிபதி தமது பிரதேசத்திற்கு அடிக்கடி வரவேண்டும் என்பது தான் "



கோபுரத்தைக் காட்டி இந்தியாவை மிரட்டுகிறதா இலங்கை?

'தாமரைக்கோபுரம்' எனப்பெயரிடப்பட்டுள்ள இக்கோபுரம் தென்னாசியாவிலேயே அதிக உயரமானதும், உலகின் உயரமான தொலைத்தொடர்பு கோபுரங்களில் 19வது இடத்தைப் பிடிப்பதாகவும் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. 100 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இக்கோபுர அமைப்பிற்கான நிதி மற்றும், நிர்மாணப் பணிகளை சீனாவே நேரடியாக மேற்கொள்கிறது. ஆரம்பிக்கப்பட்டு முப்பது மாதங்களில் இதன் நிர்மானப்பணிகள் முற்றுப்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்ட சில வேலைகளில் மாற்றங்களைச் செய்யலாம். ஒருவரிடம் அவசர செலவுகளுக்காக பணம் வாங்கலாம். அரசியல்வாதிகள் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். இறை வழிபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம். உல்லாசமான செயற்பாடுகளை தவிர்க்கவும்.

**இடபம்:** பழைய பொருள்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்கலாம். உறவினர்கள் சிலருக்கு முக்கியமான விடயங்களில் நல்ல யோசனை சொல்வீர்கள். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்:** திட்டமிட்டது மட்டுமின்றி, திட்டமிடாத காரியங்களும் நடக்கும் நாள். நண்பர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். ஏதாவது ஒரு வழியில் பணவரவுகளைப் பெறலாம். பெண்கள் வழியில் ஏற்பட்ட சிரமங்கள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். வாகன யோகத்துக்கு வாய்ப்பு உண்டு.

**கடகம்:** வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கிக் கொடுக்க கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். மற்றவர்களுக்காக நீங்கள் பிணை கொடுக்கலாம். அரட்டை அடிப்பதில் நாட்டம் செல்லும். சில வேலைகளுக்காக அங்கும் இங்கும் அலைய நேரிடலாம். நீண்ட நேரம் தூங்கலாம். ஒருவர் கேட்ட உதவியை செய்யாமல் கையை விரிப்பீர்கள்.

**சிங்கம்:** இல்லம் தேடி நல்ல செய்திகள் வரும் நாள். பண விடயங்களில் மற்றவர்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி பெருமை அடைவீர்கள். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். கல்மனம் படைத்த சிலரிடமும் சாதகமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். கலகலப்பான அனுபவம் உண்டு.

**கன்னி:** புதிய காரியங்களுக்கு அடித்தளம் அமைப்பீர்கள். தொழில் ரீதியாக ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். குறைந்த செலவில் முடியும் என்று நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடலாம்.

**துலாம்:** உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும் நாள். பெண்கள் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கைக் காட்ட முற்படுவீர்கள். பெரிய மனிதர்களின் நட்பைப் பெறலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர் ஒருவரைச் சந்திக்கலாம். சில விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள்.

**விருச்சிகம்:** தம்பதியர் இடையே அன்யோன்யம் உண்டாகும். மாமன், மைத்துனர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். நேற்று செய்யாமல் விட்ட வேலை ஒன்றால், இன்று அவதிக்கு ஆளாகலாம். வெளியூர்களில் இருந்து முக்கிய செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாளைய பிரச்சினை ஒன்று சுமுகமாகத் தீர்வுக்கு வரும். ஆறுதல் அனுபவம் உண்டு.

**தனுசு:** மனைவி வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். தொழில் ரீதியாக உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். ஒவ்வாத உணவுகளைச் சாப்பிட்டு வயிறு உபாதைகளுக்கு ஆள்படலாம். வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

**மகரம்:** ஏமாற்றங்களைத் தவிர்க்க எச்சரிக்கையாகச் செயற்பட வேண்டிய நாள். எந்த வேலையும் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கலாம். சிலரை தேடிச்சென்று பார்க்க முற்பட்டு அவர்கள் இல்லாமல் திரும்பலாம். பணவரவு ஒன்று வந்தாலும் அதை உடனே கடன்மிகுதி ஒன்றைத் தீர்க்க கொடுக்கலாம். மனக்குழப்பம், தடுமாற்றம் உண்டாகும்.

**கும்பம்:** ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் வருமானம் பெறலாம். நண்பர்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். புதிய உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். உங்களின் செயற்பாடுகளில் சிலர் சந்தேகம் கொள்ளலாம்.

**மீனம்:** உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சில விடயங்கள் நடக்காமல் போனாலும், எதிர்பாராத ஒரு காரியம் நடக்கலாம். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். வீடு மாற்ற விவகாரங்களில் முன்னேற்றமான திருப்பங்கள் உண்டு.

**நாளை**

தை 29 ஞாயிற்றுக்கிழமை 12.02.2012
திதி: பஞ்சமி மு.இ. 07.28 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.ப. 09.34 வரை
சுபநேரம்: 09.34 - 11.04 வரை,
ராகு காலம்: 05.04- 06.34 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 4 | 3 | 5 | 7 | | |
| | | 8 | | 2 | | 5 | 4 | 6 |
| | | | | 6 | | | 3 | |
| 1 | | | | 8 | | 9 | 5 | |
| | 3 | 5 | | | | 8 | 7 | |
| | 8 | 7 | | 4 | | | | 1 |
| | 5 | | | 1 | | | | |
| 8 | 9 | 3 | | 5 | | 1. | | |
| | | 4 | 8 | 7 | 3 | | 9 | |

சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 2 | 1 | 5 | 9 | 3 | 7 | 8 |
| 7 | 5 | 8 | 2 | 3 | 4 | 1 | 6 | 9 |
| 3 | 9 | 1 | 7 | 6 | 8 | 2 | 5 | 4 |
| 1 | 4 | 9 | 6 | 2 | 7 | 8 | 3 | 5 |
| 2 | 7 | 5 | 8 | 1 | 3 | 6 | 4 | 6 |
| 8 | 3 | 6 | 9 | 4 | 4 | 7 | 2 | 1 |
| 5 | 8 | 3 | 4 | 9 | 2 | 6 | 1 | 7 |
| 6 | 2 | 7 | 5 | 8 | 1 | 4 | 9 | 3 |
| 9 | 1 | 4 | 3 | 7 | 6 | 5 | 8 | 2 |

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் கனகசபை நடராசா



மலர்வு 17.12.1922 உதிர்வு 12.01.2012

கடந்த (12.01.2012) அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் கனகசபை நடராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.02.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ளன.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்கள் குலவிளக்கு அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்து சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலமாக வும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர் களுக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

14, அரச வீதி,
நல்லூர்.

- குடும்பத்தினர்.

(14231)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
### வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2012

காலம் : இன்று (11.02.2012) சனிக்கிழமை காலை 9 மணி
இடம் : கல்லூரி மைதானம்
தலைவர் : திரு.வே.க.இரத்தினகுமார் (கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர் :
கௌரவ K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்கள்
(அமைச்சர், பாரம்பரிய கைத்தொழில் மற்றும்சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு)
சிறப்பு விருந்தினர் :
திரு.ச.கைலாசநாதன் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
கௌரவ விருந்தினர்: வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமாரன்
(மருத்துவ அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை. (14239) (6,7,10) பாடசாலைச் சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நூலக உதவியாளராகக் கடமைபுரியும்
திரு. கருணைதாசனின் அன்பு மனைவி
**திருமதி க. மேரி மாகிரெற்**

இறைபதம் அடைந்தமையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது கண்ணீர்க் காணிக்கைகளை செலுத்தி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.
(143330) (6,7,10)

## நீங்கா நினைவு நொடிகளில் நாள்கள் முப்பத்தொன்று



## இராஜா யோகராஜா

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24.08.1947 | 10.01.2012 |

(பூர (ம்) நட்சத்திரத்து துதியைத் திதி)

எம் சந்தோஷங்களை விசும்பல்களாக்கிய
சாயங்காலத் தென்றலே!
வாழ்க்கைப் பாதையில் மூச்சால் நடந்து
மரணம் எனும் வீட்டை அடைந்த
அன்பான அப்பாவே!
கலாரசனையின் கண்ணாடி வெளிச்சமாய்
உங்கள் முகதரிசனத்தைக் காணத்துடிக்கும்-நமக்கு
காட்சி தர விரைந்திடும் திருநாள் எந்நாளோ.

குறிப்பு–
எம் குடும்பத்தலைவரின் மறைவை யொட்டிய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வுகளும் இன்று (11.02.2012) சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் (கல்வியங்காடு) சட்டநாதர் சிவன் கோயிலுக்கு அருகில் நடைபெறுகின்றது. நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

18A, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (14234)(6-7-8)
மனைவி,
பிள்ளைகள்.

## 3 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**தேவராஜா அன்ரனி ஜஸ்ரின்**
தோற்றம்: - 29.05.1973
மறைவு: - 11.02.2009

இணையான இருதூண்கள்
இல்லை என்று ஆனபின்னே
இல்லம் இனியென்ன வாழும்
மைந்தன் துணையாக எந்தையும்
போனீரோ?
எங்கள் துணை என்ன எண்ண
மறந்தீரோ?



**சூசைப்பிள்ளை தேவராஜா**
தோற்றம்: - 16.01.1938
மறைவு: - 21.04.2009

"உங்கள் பிரிவால் துயருறும்"
புலோப்பளை மேற்கு,
பளை.
தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் உறவினர்கள்.

## மேலதிகமாக 1,300 மாணவர்களுக்கு பல்கலை அனுமதி

2012ஆண்டு 1,300 மாணவர்களை பல்கலைக்கழகங்களில் மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த வருடத்தை விட கூடுதல் எண்ணிக்கையிலான மாணவர்கள் இம்முறை சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன கூறினார்.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் 2011ஆம் ஆண்டு 22, 200 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர் என்றும் இந்த முறை 1,300 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், சமூக விஞ்ஞானம் மற்றும் கலைப் பிரிவுகளில் கற்கின்ற மாணவர்களுக்கு தகவல் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடத் திட்டங்களை கற்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ந-14)

## மின்சார சபைக்கு கடந்த ஒரு மாதத்தில் ரூ.93 லட்சம் லாபம்

யாழ்ப்பாணத்தில் 2012 ஆண்டு ஜனவரி மாதத்தில் மட்டும் 155 சட்டவிரோத மின் இணைப்புகளுக்காக அறவிடப்பட்ட தண்டப்பணம் மூலம் 93 லட்சம் ரூபா லாபம் பெறப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையின் அவசர அழைப்புப் பிரிவு மேற்கொண்ட தேடுதலிலேயே இந்தச் சட்டவிரோத மின் இணைப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதற்காக அறவிட்ட தண்டப்பணம் மூலம் 93 லட்சம் ரூபா இலாபமாகப் பெறப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதுவரையில் 1,550,000 ரூபா நீதிமன்றம் அறவிட்ட தண்டப்பணம் மூலமாகப் பெறப்பட்டுள்ளதுடன் 7,738,305 ரூபா மின்சார சபை நேரடியாக அறவிட்ட தண்டப்பணம் மூலமாப் பெறப்பட்டுள்ளது. (ந-14)

## பெண்கள் வாரம் அனுஷ்டிப்பு

வடமராட்சி. பெப்.11

இலங்கை மெதடிஸ்த திருச்சபையால் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர் வரும் 19 ஆம் திகதி வரையிலான ஒரு வார காலப் பகுதி பெண்கள் வாரமாக அனுஷ்டிக்கப்படும். இதனை முன்னிட்டு பருத்தித்துறை கட்டைவேலி சேகரப் பிரிவில் உள்ள திருச்சபை தேவாலயங்களில் சேகர முகாமைக் குரு அருட் திரு கே.சி.தங்கராசா தலைமையில் குறிப்பிட்ட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெண்கள் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களை மெதடிஸ்த திருச்சபையினர் சந்தித்து அவர்கள் பிரச்சினைகளை தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர். (ம-8)

## பதவி வெற்றிடம்

கொழும்பில் இயங்கும் நிறுவனத்தின் யாழ். கிளைக்கு பின்வருவோர் உடன் தேவைப்படுகின்றனர்.

1. Project Officers
2. Trainee English Teachers/ English Teachers
3. Field Officers
4. Secretary
5. Computer Instructors (Female)

நேர்முகப் பரீட்சைக்கான பதிவுகளுக்கு:
T.P - 077 6242966 (14329)(6-7-8)



ஜெய் குருதேவ்
எப்போதும் ஆரோக்கியமாகவும்
ஆனந்தமாகவும் வாழ
வாழ்க்கையில் உற்சாகம் பெற
தன்னம்பிக்கை, தைரியம்பெற
சிறந்த படைப்பாற்றலுடன்
விளங்க, கல்வியில், பணியில்
முன்னேற்றம் பெற குடும்பத்திலும்
சமூகத்திலும் நல்லுறவுபெற
ஆஸ்துமா, ஒற்றைத் தலைவலி
மாற வாழ்க்கை வைபவமாக மாற

## வாழும் கலைப் பயிற்சி

சனி அறிமுக உரை (11.02.2012)
நல்லூர் -
மகேஸ்வரன் மணிமண்டபம். (5.00 - 6.00)
0777740593
(14236) (2-6-7)

## முக்கிய அறிவித்தல்
## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima (பிறிமா) No.1 புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 1987ஆம் ஆண்டு தொடக்கம் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தால் விநியோகித்துக் கொண்டிருக்கிறோம். போலியான முகவர்களால் விநியோகிக்கப்படும் தரம் குறைந்த கோழிக்குஞ்சுகளை வாங்கவேண்டாம்.

| நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர். | நல்லூர் பாம் சென்ரர் கனகபுரம் வீதி, கிளிநொச்சி. |
|---|---|
| தொ.பே. 021 2226944 | தொ.பே. 077 6225944 |

(மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய விவரம்.)
1. சிலோன் கிறெய்ன் எலிவேற்றர்ஸ் (பிறிமா)
011 2522556
011 2522558
2. பிறிமா யாழ். முகாமையாளர் அமீன்
தொலை பேசி. இல - 077 7637027 (14313)(6-7-8)



உ
ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முத்துமாரியம்மன்
ஸ்ரீ முருகன் ஆகிய மூர்த்திகளுக்குரிய
புதிய சந்நிதிகளுக்கான

## அடிக்கல் நாட்டுவிழா அழைப்பு

நிகழும் மங்களகரமான கர வருடம் தை மாதம் 29 ஆம் நாள் (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை அமிர்த சித்தியோகமும் சித்திரை நக்ஷத்திரமும் கூடிய சுப தினத்தில் காலை 9 மணி முதல் 11 மணி வரையிலான சுப நேரத்தில் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ முருகன் ஆகிய மூர்த்திகளுக்கு புதிய சந்நிதிகளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவதற்கு ஸ்ரீ முத்துமாரியம்பாளின் திருவருள் கூடியுள்ளது.

### மேற்படி விழாவுக்கான கிரியைகள்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் கோயில் தேவஸ்தான பிரதமகுரு பிரதிஷ்டவித்யா சிரோன்மணி சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்த குருக்கள் அவர்களது நல்லாசிகளுடன் முத்தமிழ் குருமணி சதாமஹோற்சவவித்தகர் பிரதிஷ்டா வித்யாசிரோண்மணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வர குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும்.

### பண்ணிசைக் கச்சேரி

இந்தியாவில் இருந்து மயிலாடுதுறை தேவார இசைமணி, இசைத்தமிழ்ச் செல்வர், சிங்கப்பூர் புகழ் சொ. சிவக்குமார் ஓதுவார் அவர்களின் பண்ணிசைக் கச்சேரி இடம்பெறும்.

**குறிப்பு:**
ஆலய கட்டடவேலைகள் மற்றும் சிற்ப வேலைகள் தமிழ் நாட்டில் இருந்து வரும் சிற்பாகம வல்லுநர் எஸ். சிவபாலன் ஸ்தபதியின் தலைமையில் தமிழ் நாடு மற்றும் உள்ளூர் ஸ்தபதிகளின் கைவண்ணத்தில் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அம்பாள் அடியார்கள் அனைவரையும் இந்த அடிக்கல் நாட்டு விழாவிற்கு வந்து பங்குபற்றி ஆலயத் திருப்பணி செவ்வனே நடைபெறப் பெருவுளம் கொண்டு தம் மாலான நன்கொடைகளை வழங்கி விழாவைச் சிறப்பித்து அம்பிகையின் திருவருளைப் பெற்றுக்கொண்டேகும் வண்ணம் அழைக்கின்றோம்.

புகையிரத நிலைய வீதி,
தெல்லிப்பழை.
**தேவஸ்தானம்,**
www.Srimuthumariamman.ORg
(14214) (45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமதி, சிவானந்தா அணிகள் இறுதியாட்டத்தில் நாளை மோதல்



கலைமதி வி.க — சிவானந்தா வி.க

யாழ்ப்பாணம்,பெப்.11

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

காட்சிப்போட்டியில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இறுதியாட்டத்துக்குப் பிரதம விருந்தினராகக் கரவெட்டி பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரனும், கௌரவ விருந்தினராகப் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்க செயலாளர் எஸ். வரதராஜனும் கலந்து கொள்வர்.

(த-23)

## அணி ஒழுங்கு தயாரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ்.மத்திய கல்லூரியின் 2004 ஆம் ஆண்டு கூடைப்பந்தாட்ட அணியில் அங்கம் வகித்த வீரர்களின் அனுசரணையுடன் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகமும் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் இராசதுரை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அணி ஒழுங்குத் தெரிவு இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு கொள்ளும் கழகங்களின் பிரதிநிதிகளை இதில் கலந்து கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(த-23)

## இறுதி ஆட்டம் நாளை


வவுனியா,பெப்.11

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அமரர்களான சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஈகிள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(த-23-400)

## கோப்பாய் கோட்டக் கரப்பந்து வெற்றிபெற்ற பாடசாலைகள்



யாழ்ப்பாணம்,பெப்.11

கோப்பாய் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 15,17,19 வயது ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் பெயர் விவரங்கள் வருமாறு:

**19 வயதுப் பிரிவு**

* புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி - முதலாமிடம், அச்சுவேலி மத்திய கல்லூரி - இரண்டாமிடம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி - மூன்றாமிடம்.

**17 வயதுப் பிரிவு**

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம் - முதலாமிடம், ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் - இரண்டாமிடம், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி - மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு**

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம் - முதலாமிடம், ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் - இரண்டாமிடம், கோப்பாய் மகா வித்தியாலயம் மூன்றாமிடம்.

**19 வயதுப்பிரிவு (பெண்கள்)**

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி - முதலாமிடம், அச்சுவேலி மத்தியகல்லூரி - இரண்டாமிடம், அத்தியார் இந்துக் கல்லூரி - மூன்றாமிடம்.

**17 வயதுப் பிரிவு (பெண்கள்)**

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி - முதலாமிடம், ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம் - இரண்டாமிடம், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி - மூன்றாமிடம்.

**15 வயதுப்பிரிவு - (பெண்கள்)**

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம் - முதலாமிடம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி - இரண்டாமிடம், அச்சுவேலி மத்திய கல்லூரி - மூன்றாமிடம்.

(த-23)


## மரண அறிவித்தல்



### குலத்துங்கம் ஸ்கந்தராஜா (கணேசன்)

கே.கே.எஸ்.வீதி, றொட்டியாலடி, உடுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Bondy ஐ வதிவிடமாகவும் கொண்ட குலத்துங்கம் ஸ்கந்தராஜா (03.02.2012) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் குலத்துங்கம்- காலஞ்சென்ற நீலாம்பிகை தம்பதியரின் இளைய மகனும், ஈஸ்வரி (பிரான்ஸ்), ஜெயஸ்ரீ (கனடா), கௌரி (ஆசிரியை - வவுனியா), வசந்தன் (நோர்வே), தேவகி (பிரான்ஸ்), பாஸ்கரன் (நோர்வே), ரேணுகா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற குணசிங்கம் (பிரான்ஸ்) மற்றும் நித்தியானந்தம் (கனடா), நந்தகுமார் (வவுனியா), மகிழ்ராஜசிங்கம் (பிரான்ஸ்), அம்பிகாதேவி (நோர்வே), சிவரஞ்சினி (கவிதா - நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், அனோஜன், அபிநா, பிருந்தா, குமரன், மௌலிகா, மாளவிகா, திவ்யா ஆகியோரின் மாமனும், வதுஷன், ஜதுஷன், சானுஜா, சானுஜன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7Bd.de Menilmontant - 75011, Paris என்னும் இடத்தில் இன்று (11.02.2012) சனிக்கிழமை காலை 8.30 மணிமுல் 9.30 மணிவரை நடைபெற்று Crematorium, du para - Lachaise -71 Ruedes Rondeaux - 75020 Paris (M: Gambetta) என்னும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. குலத்துங்கம்
(ஓய்வுபெற்ற லிகிதர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்).

கே.கே.எஸ். வீதி,
றொட்டியாலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (14238) (6-7-45)

## மரண அறிவித்தல்



### இராமலிங்கம் விக்கினராசா (விக்கி)

பெரும் தெரு, புலோலி தெற்கு புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் விக்கினராசா (விக்கி) (09.02.2012) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், கருங்காலி காரை நகரைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் மருமகனும், கனகலட்சுமியின் பாசமிகு கணவரும், மாணிக்கவாசகர், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் ஆகியோரின் சகோதரரும், கேதுராணி (லண்டன்), ரேணுகா (கனடா), யசோதா (பேராதனை), சுரேஸ் (நெல்லியடி ரட்ணம் புடைவைமாளிகை), தனேஸ்வரி (லண்டன்), சுரேக்கா ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரபாகரன் (லண்டன்) பிறேமதாசன் (கனடா), சபா நடேசன் (பேராதனை), மதிவதனன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ஆரூசன் (லண்டன்), தனிஷா (பேராதனை), பவித்திரன் (பேராதனை) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்

பெரும்தெரு,
புலோலி தெற்கு, புலோலி. (13895) (6-45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரபரப்பான ஆட்டத்தில் ஆஸியிடம் தோற்றது இலங்கை



ஆஸ்திரேலிய, இலங்கை அணிகளுக்கிடையிலான நேற்றைய ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி கடும் போராட்டத்தின் பின்னர் 5 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இலங்கையின் சார்பில் இறுதிவரை அஞ்சலோ மத்தியூஸ் போராடியும் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

ஆஸ்திரேலியாவில் கொமன் வெல்த் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இடம்பெற்று வருகின்றது. தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் இலங்கை அணியை எதிர்த்து ஆஸ்திரேலிய அணி விளையாடியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

ஆஸ்திரேலிய அணிக்கு வோர்னர் அதிரடியான தொடக்கத்தை அமைத்தார். இலங்கையின் பந்து வீச்சைப் போட்டுத் தாக்கி ஓட்ட வேகத்தை உயர்த்தினார். இருப்பினும் வோர்னருடன் களமிறங்கிய வேட் ஒரு ஓட்டத்துடன் வெளியேற அடுத்து களமிறங்கிய பொண்டிங்கும் ஒரு ஓட்டத்துடன் பவிலியனுக்கு அனுப்பப்பட்டார். இருப்பினும் வோர்னர் தனது தாக்குதலை நிறுத்தாமல் தொடர்ந்தார். மைக்கல் கிளார்க் களமிறங்கி நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார்.

8.5 பந்து பரிமாற்றங்களில் ஆஸ்திரேலிய அணி 50 ஓட்டங்களை எட்டிய நிலையில் வோர்னர் 29 பந்துகளில் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் இணைந்த மைக் ஹஸி, அணித்தலைவர் கிளார்க் இருவரும் நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்தனர். இருப்பினும் இலங்கை அணியின் சிறப்பான பந்து வீச்சு மற்றும் அபார களத்தடுப்பின் முன்பாக ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் திணறினர். மைக் ஹஸி 23, டேவிட் ஹஸி 27 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்க ஆஸ்திரேலிய அணி 27.4 பந்து பரிமாற்றங்களில் 130 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது.

இருப்பினும் ஒரு முனையில் நிதானமாக ஆடிக் கொண்டிருந்த அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 80 பந்துகளில் தனது 51 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். ஆறாவது இலக்குக்காக கிளார்க்குடன் இணைந்து சகல துறை ஆட்டக்காரர் டானியல் கிறிஸ்ரெய்ன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். கிறிஸ்ரெய்ன் 33 ஓட்டங்களுடனும், ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடிய கிளார்க் 57 ஓட்டங்களுடனும், ஹரிஸ் 2 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க ஆஸி. அணி 41.5 பந்து பரிமாற்றங்களில் 191 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்தது. அதன் பின்னர் மக்கே, ஸ்ராக் இருவரும் வேகமாக துடுப்பெடுத்தாடி ஆஸி அணியைப் பலப்படுத்தினர். இவர்களது ஆட்டத்தின் உதவியுடன் ஆஸ்திரேலிய அணி இறுதியில் 49.1 பந்து பரிமாற்றங்களில் 231 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. மக்கே 25, ஸ்ராக் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இலங்கை அணியின் சார்பில் மலிங்க, குலசேகர, மத்தியூஸ், பிரசாத், சேனநாயக்க தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.


பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய இலங்கை அணிக்கு தரங்க 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அதன் பின்பு டில்ஷான், சங்ககார ஜோடி நம்பிக்கையளிக்கும் விதத்தில் துடுப்பெடுத்தாடியது. மிகவும் நிதானமான சிறப்பான இணைப்பின் மூலம் இலங்கை அணி இலக்கை விரட்டியது. இரண்டாவது இலக்குக்காக 50 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் சங்ககார 22 ஓட்டங்களுடன் துரதிஷ்டவசமாக 'ரன் அவுட்டானார்.'

சங்காவை தொடர்ந்து சந்திமால் களமிறங்க ஆரம்பம் முதல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டில்ஷான் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய அணித்தலைவர் மஹேல 13, திரிமன்னே 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 27.4 பந்து பரிமாற்றங்களில் 119 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது.

இலங்கை அணியின் இக்கட்டான நிலையில் மத்தியூஸ் களமிறங்கினார். மறுமுனையில் சிறப்பாக ஆடிய சந்திமால் 37 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். அதன் பின்னர் இலங்கை அணியின் பின்வரிசை வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். குலசேர 8, சேனநாயக்கா 9, மலிங்க 1 என ஆட்டமிழக்க இலங்கை அணி 44.2 பந்து பரிமாற்றங்களில் 180 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்தது.

இலங்கை அணியின் தோல்வி உறுதியான நிலையில் மத்தியூஸ் மற்றும் தம்மிக்க பிரசாத் இருவரும் இணைந்து துடுப்பெடுத்தாடத் தொடங்கினர். மத்தியூஸ் 70 பந்துகளில் தனது 10 ஆவது அரைச்சதத்தை அடிக்க இலங்கை அணியின் ஆட்டம் வெற்றியை நோக்கி மெல்ல மாறியது. மத்தியூஸிற்கு சிறப்பான ஒத்துழைப்பை தம்மிக்க பிரசாத் வழங்க இலங்கை அணி வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.





இந்த நிலையில் ஆட்டத்தின் இறுதிப் பந்து பரிமாற்றம் பதற்றத்தின் உச்சிக்கே சென்றது. இறுதிப் பந்து பரிமாற்றத்தில் இலங்கை அணிக்கு வெற்றிக்கு 18 ஓட்டங்கள் தேவைப்பட்டன. மிட்செல் ஸ்ராக் வீசிய அந்தப் பந்து பரிமாற்றத்தின் முதல் பந்தில் நான்கு ஓட்டத்தையும் அடுத்த பந்தில் ஆறு ஓட்டத்தையும் அஞ்சலோ மத்தியூஸ் அடித்தபோது இலங்கை அணியின் வெற்றி கைக்கெட்டும் தூரத்தில் இருந்தது. 3 ஆவது பந்தில் மத்தியூஸ் ஒரு ஓட்டத்தைப் பெற்றார். 4 ஆவது பந்தில் தம்மிக்க ஒரு ஓட்டத்தைப் பெற்றார். கடைசி 2 பந்துகளில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் 5 ஆவது பந்தை எதிர்கொண்ட மத்தியூஸ், டானியல் கிறிஸ்டியனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் இலங்கை அணி 49.5 பந்து பரிமாற்றங்களில் 226 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. மத்தியூஸ் 76 பந்துகளில் 64 ஓட்டங்களையும், பிரசாத் 11 பந்துகளில் 15 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் ஸ்ராக், கிறிஸ்டியன், டொஹேட்டி தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனான ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவு செய்யப்பட்டார். (10-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

**The Only Official French Language Centre in Jaffna**

*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்குத் தோற்றலாம்.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri - Nallur Road, Jaffina Phone: 021 2228093 (14282) (2-6-7)
E-mail: alliance jaffina@yahoo. com

(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.


## மரண அறிவித்தல்



### செபஸ்ரியன் விக்ரர்

யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வதிவிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் விக்ரர் கடந்த (06.02.2012) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் எதிர்வரும் (14.02.2012) செவ்வாய்க்கிழமை நோர்வேயில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*[illegible]1, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சகோதரர்கள்.


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மணல்தறை ஒழுங்கையில் நிலப்பரப்பு குழி 6.67 அளவுள்ள காணிவிற்பனைக்கு உண்டு. முழுமையாகவோ/ [illegible]தியாகவோ பிரித்து கொடுக்கப்படும் (தரகர் தேவையில்லை)

தொடர்பு:-0779237957



## ஸப்தஸ்வரம் இசை ஒலிப்பதிவு கலையகம்

புதிய பக்திப்பாடல்கள், மெல்லிசைப் பாடல் கள், இலங்கை இந்திய பாடகர்களின் குரல் நயத் தில் இசையமைத்து ஒலிப்பதிவு செய்து தரப்படும்.

தொடர்பு: 0776980573, ஸ்ரீருகன் (இசையமைப்பாளர்)
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. (கல்வியங்காடு)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



''பேரின்பம் என்பது அறிவினால் உணர்ந்து, அன்பும், கருணையுமாகப் பிற உயிர்களிற்குத் துன்பமே செய்யக் கூடாது என்பதும், துன்பப்படும் உயிர்களுக்கு நன்மையே செய்ய வேண்டும், உதவ வேண்டும் என்ற தெளிவு வேண்டும். இதுதான் மனித இனத்திற்குத் தேவையான அறிவு, வாழ்க்கைப்பாதை, இதுவே அறநெறி வாழ்வுப் பாதை''

வேதாத்திரி மகரிஷி

மகான்கள் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை, இறைவனே குரு உருவில் வந்து மனிதர்களுடைய மன இருளை அகற்றி, நம்முடன் வாழ்ந்து நம்மை வழி நடத்துகின்றான். அவ்வாறு தோன்றிய மகான் தான் வேதாத்திரி மகரிஷி அவர்கள். இயற்கையை உணர்ந்து இயற்கையோடு ஒன்றி தன் வாழ்வில் கண்ட உண்மைகளையும், அனுபவங்களையும் எமக்கு எடுத்துக் கூறியவர். அந்த வகையில் மனிதன் மன ஆரோக்கியத்துடனும், உடல் ஆரோக்கியத்துடனும் வாழ்வதற்காக மகரிஷி அவர்கள் காட்டிய வழியே மனவளக் கலை யோகா எனும் பயிற்சி.

இன்று உலகில் பரந்து விரிந்து வாழும் பல லட்சம் மக்கள் இந்த மனவளக் கலை யோகாப் பயிற்சிகளைப் பெற்றுப் பயன் அடைந்துள்ளார்கள். அதன் மூலம் அவர்கள் பெற்ற பயன்கள், அனுபவங்களைக் கேட்கும் போது எங்களுக்கும் ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது. இந்த அரிய மனவளக் கலையானது அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதே எங்களது நோக்கமாகும்.

**இலவச அறிமுக உரை**

காலம்: 11.02.2012 (சனிக்கிழமை)
நேரம் : மாலை 5.00 மணி
இடம் : துர்க்கா மணி மண்டபம்
வழங்குபவர் : S. இந்திரா அவர்கள் (தமிழ்நாடு, இந்தியா)

இந்த அரிய பயிற்சிகளைப் பயின்று எல்லா வளங்களும் பெற்று வாழ அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

*இலங்கை அறிவத் திருக்கோயில்*
*இலங்கை மனவளக்கலை மன்றம்*
*53/1 A, இராமகிருஷ்ண வீதி,*
*கொழும்பு - 06*
*தொ.பே. 5658412.*

*தவமையம்,*
*14/4, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்*
*தொ.இ. 0213202286, 0212220734.*

## சதுரங்கப் போட்டியில் வென்ற பாடசாலைகள்

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் 15,19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் பெயர் விவரங்கள் வருமாறு:

**15 வயதுப் பிரிவு - ஆண்கள்**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி - முதலாமிடம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி - இரண்டாமிடம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் - மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு - ஆண்கள்**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி -முதலாமிடம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் - இரண்டாமிடம், புற்றளை மகா வித்தியாலயம் - மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு - பெண்கள்**

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை - முதலாமிடம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி - இரண்டாமிடம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி- மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு - பெண்கள்**

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை - முதலாமிடம், வட இந்து மகளிர் கல்லூரி - இரண்டாமிடம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி - மூன்றாமிடம். (த-23)

## கொட்டடி விண்மீன் சம்பியன்

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய் யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 3 ஓட்டங்களால் வெற்றிபெற்று கொட்டடி விண்மீன் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

இறுதியாட்டத்தில் கொட்டடி விண்மீன் அணியும் கொழும்புத்துறை றொசாறியன் விளையாட் டுக்கழக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விண்மீன் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது.

களத்தடுப்பில் றொசாறியன் அணி வீரர்களான றொக்சன் 3 இலக்குகளையும் சுகிர்தன் 2 இலக்குகளை யும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றொசாறியன்அணிஅனைத்து இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. றொசான், மயூரன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

(த-135)


## கார் விற்பனைக்கு

**TOYOTA PRIUS** 2010ஆம் ஆண்டு **MODEL** கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய லண்டனிலிருந்து புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட நல்ல நிலையிலுள்ள வெள்ளை நிறக் கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-0774894018


## கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலையின் ஆசிரியர்
திரு. வி. உதயகுமாரன் அவர்களின்
அன்புத் தந்தை குருநாதர் விசுவலிங்கம்
அவர்கள் காலமானதையிட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர் கழகம்,*
*யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.*

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
19 ★ 03 ★ 1985



ஆண்டவன் மடியில்
11 ★ .02 ★ 2007

### செல்வன் பத்மகாந்தன் சஞ்ஸீத்

*(மாணவன், யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி, SSM பொறியியல் கல்லூரி, சேலம், இந்தியா)*

உள்ளத்தில் நிறைந்தவரே! எம் உதிரத்தில் கலந்தவரே!!
கள்ளமற்ற உன் அன்பால் களிப்புடனே வாழ்ந்திருந்தோம்
எள்ளளவும்இரக்கமின்றி இறைவன் உனை அழைத்ததென்ன?
உன் பிரிவால்,
துன்பத்தின் எல்லை கண்டோம் துவண்டு இங்கு வாடுகின்றோம்.
தாங்க எம்மால் முடியவில்லை. சஞ்சலம் தான் வாழ்வாச்சு!!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"புனிதவாசம்", மீசாலை கிழக்கு, மீசாலை. / 5-4/3, 42ஆவது லேன், கொழும்பு - 6

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### Dr.தியாகராசா சிவசுதன்

(B.S.M.S JAFFNA)

(வவுனியா மாவட்ட சிவபுரம் ஆயுள்வேத வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர்)

மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது சிவபுரம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட Dr.தியாகராசா சிவசுதன் கடந்த வியாழக்கிழமை (09.02.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா - இராஜேஸ்வரி தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சண்முகநாதன் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் Dr.சுமதியின் (வவுனியா மாவட்ட சிவபுரம் ஆயுள்வேத வைத்தியசாலை) பாசமிகு கணவரும் வேணுகா, தேனுகா (தரம் 8, 7 வவுனியா/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவிகள்) கோபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவமங்கை (யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), சிவாஜினி, சிவமூர்த்தி (முகாமையாளர், கொடிகாமம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்), சிவகுகன் (முகாமையாளர், Dialog Telecome, Pvt. Ltd, Jaffna), சிவானந்தன் (பொறியியலாளர்), சிவமதி (ஆசிரியை, யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), சிவசக்தி (கொழும்பு), சிவச்செல்வன் (கொழும்பு),சிவதீபம் (முகாமைத்துவ உதவியாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், யாழ்ப்பாணம்) சிவராஜா (மாணவன், உயர்தொழில்நுட்ப நிறுவனம் , HTI, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவராசா, குகன் (குகன் மில், கல்வயல்), விஜிதா (ஆசிரியை, யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை), கஜாசனா, ரவீனா, நந்தகுமார் (ஆசிரியர், யா/ மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்), தபேந்திரன் (மோகன் ஜிவல்லறி, கொழும்பு), யதுசன் (முகாமைத்துவ உதவியாளர் வடமாகாணக் கல்வித் திணைக்களம், மருதனார்மடம்), தேவகி விக்னேஸ்வரன் (கனடா), றாகினி சிறீதரன்(பிரான்ஸ்), றஜனி மாரிகுமார் (ஜேர்மனி), தயாளினி ஸ்ரீரூபன் (கோப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அகிம்ஷா, அஸ்வின், அபிஷரன், அபிநேகா, கிருஸ்திகா, தனுஷ், தர்சிகா, றஜீக்கா, கிருஷாந், சந்தியா, திவ்வியா, சோபிகா, பிரியதர்சினி, சதீஸ்குமார், தர்ஜன், கம்ஜன், சத்ஜன், பத்மஸ்ரீ, கோகுலஸ்ரீ, மதுஜன் ஆகியோரின் பெரியப்பாவும் மீரா, றேணுகா, சகிதா, சாருஜா, தாரணி, திருவேள், திருவிழி, சேந்தன், கார்த்திகன், சதுஷன், கனுஷன், கார்மீசன் ஆகியோரின் பெரிய மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (11.02.2012) சனிக்கிழமை மு.பகல் 10 மணிவரை வவுனியா மாவட்ட சிவபுரம் ஆயுள்வேத வைத்தியசாலை வைத்தியர் விடுதியில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகலளவில் மீசாலை வடக்கு, கொடிகாமத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று இலுவன் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

[illegible]த்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] வீதி,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில்

## 10ஆம் ஆண்டு 16ஆம் ஆண்டு

மலர்வு 27 ★ 04 ★ 1938



உதிர்வு 01 ★ 02 ★ 2002

அன்னை மடியில் 21 ★ 02 ★ 1977



அமரன் மடியில் 13 ★ 06 ★ 1996

**அமரர் வெ. வேலு**
(கந்தையா)
(ஓய்வுபெற்ற மின்கம்பி இணைப்பாளர்)

**செல்வன் வேலு சனகன்**
(முன்னாள் மாணவன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

**திதி: 11.02.2012**

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள்
இருவரினதும் நினைவுகளோடு கலந்து வாழும்

அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம் **குடும்பத்தினர்.**


# கணனி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான

ஓர் அரிய சந்தர்ப்பம் **Diploma in Computer Courses**

2012ம் ஆண்டு மாபெரும் கட்டணக்கழிவு

**Duration 3Months, 4months 1000/=**

Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail .

12.02.2012 Batch i - 9Am or 3Pm
15.02.2012 Batch ii - 9Am or 3Pm
17.02.2012 Batch iii- 9Am or 3Pm

புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.

வரையறையற்ற செய்முறைப்பயிற்சி, மாணவர்மீது தனிப்பட்ட கவனம், அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், நன்கு அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் தமிழ்மொழி விளக்கத்துடன் வகுப்புகள் நடாத்தப்படும்.

**Computer Express**
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444

**Certificate in Multi IT**
Duration - 1Week,1Month
Rs 3500 only Batch i - 11- 02
0774691673 Batch ii - 14 - 02


# மரண அறிவித்தல்



## திருமதி சீமான்பிள்ளை திவ்வியம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீமான்பிள்ளை திவ்வியம் நேற்று (10.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - முத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சவுரிமுத்து - அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சீமான்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பொன்னுத்துரை, சந்தனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொன்கிளி, காலஞ்சென்ற அனி மற்றும் லீலா, காலஞ்சென்றவர்களான சின்னக்கிளி, டொன் பொஸ்கோ மற்றும் சிசிலியாமணி, இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான ஐயாத் துரை, செல்லத்துரை, முத்துச்சாமி, யேசுரெட்ணம், ஜீவமலர், பற்றிக், ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்பு மாமியும், விமல் (பிரான்ஸ்), வனிதா (ஜேர்மனி), லலி, காலஞ்சென்ற அகிலா மற்றும் திலகா (பிரான்ஸ்), செல்வதி, பிரபாகரன் (பிரான்ஸ்), பாபு, சித்திரா, மாலா, மரினோ (பிரான்ஸ்), மேனகா (கனடா), மல்லிகா, ஜெமிந்தா (பிரான்ஸ்), றாஜி (லண்டன்), றஞ்சினி (லண்டன்), யூட் (பிரான்ஸ்), டீன், ஜெறின் (பிரான்ஸ்), டினேஸ் (மலேசியா), காலஞ்சென்ற வாணி மற்றும் சலுஜா,சைலஜா, பிறீடா (பிரான்ஸ்), சர்மி, கெமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி கிறீஸ்து அரசர் ஆலயத்தில் இன்று (11.02.2012) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26/3, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்.*

*தகவல்:*
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்



## திருமதி சின்னத்துரை தங்கம்மா

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை தங்கம்மா நேற்று (10.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான வயிரமுத்து - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னத்துரையின் மனைவியும் செல்வராசா, லலிதா, செல்வநாயகம் ஆகியோரின் தாயும், ரஞ்சினி, தவனேஸ்வரன், தயாநிதி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசையா, சின்னத்துரை, அம்மாகுட்டி, செல்லம்மா, கனகம் ஆகியோரின் சகோதரியும் கயனி, சுரேஸ்கரன் (கனடா), கோபிகிருஷ்ணா (லண்டன்), ஜனனி, துஷ்யந்தினி, தபேசன், தாட்சாயினி, செந்தூரன், கிரிஷாந்தினி, அஜந்தியா, ரபீசன், அனோஜன் ஆகியோரின் பேர்த்தியும், மதுஷாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2012) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

**தகவல்:**
**குடும்பத்தினர்**
*(தபேசன் விவசாய மாளிகை)*

# மரண அறிவித்தல்



## திருமதி வேலுப்பிள்ளை நாகம்மா

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதி விடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகம்மா 09.02.2012 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், வைரவநாதன் (ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான முத்தையா, மகேஸ்வரி மற்றும் தியாகராசா அருளம்மா, காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, இராசம்மா, இரத்தினம், சின்னத்தங்கச்சி, அன்னலட்சுமி மற்றும் பூமகள் (சுதுமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருளானந்தம் (லண்டன்), செல்வராணி (கொழும்பு), யோகராணி (ஊரெழு), பரமானந்தம் (ஆனந்தம், இணுவில்), உதயகுமார் (லண்டன்), விஜயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், கைலாயநாதன், கனகரட்ணம், சந்திரிக்கா, சண்முகாதேவி, சுகந்தி, கோதர்ஜனா ஆகியோரின் மாமியும், அருள்சந்திரன், ஆதவன், கவின், சுமேதா, பிரணவதாசன், சங்கீர்த்தனன், கானப்பிரியா, நந்தகோபன், அமிர்தகஜானன், செந்தூரன், அருள்ஜெனனி, கஜகுலன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் ஞாயிற்றுக்கிழமை (12.02.2012) காலை 8.30 மணிக்கு வைக்கப்பட்டு, 11.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பி.ப. 1.30 மணிக்கு பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## கார் விற்பனைக்கு

17-XXXX NISSAN SUNNY B13
Full Option, Ac உடன் விற்பனைக்கு.
**தொடர்பு:-**
**0776589580, மானிப்பாய்**

## தவறிவிட்டது

கற்பகப்பிள்ளையார் கோயிலடி உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை முகவரியாகக் கொண்ட குணரட்ணம் ஸ்ரீகாந்தா ஆகிய எனது இல (500903902V) தேசிய அடையாள அட்டை சுன்னாகத்துக்கும் இணுவில் சந்திக்குமிடையில் இரண்டு வாரங்களுக்கு முன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.

**தொடர்பு:-0775513765**

## வீடு வாடகைக்கு

கச்சேரி அருகில் 55 சோமசுந்தரம் வீதியில் சகலவசதிகளுடன் கூடிய 7அறை கொண்ட மாடிவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங் களுக்கு உகந்தது.
**தொடர்பு:-**
**0212226438,0776393742**

## பிரத்தியேக வகுப்புக்கள்

**தரம் 9-G.C.E [O/L]**

கணிதம், விஞ்ஞானம், (தமிழ்/ஆங்கிலம்) மொழிமூலம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தனிப்பட்ட ரீதியாகவோ குழுவாகவோ வீடுகளு க்கு வந்து கற்பிக்கப்படும்

**தொடர்பு:-0779226701**

## வீடு,காணி விற்பனைக்கு

சில்லாலை சென்.ஜேம்ஸ் ஆலயத்துக்கு அருகில் உள்ள ¾ பரப்பு வளவுடன் கூடிய [illegible]
தொடர்புகொள்ள வேண்டிய
தொலைபேசி எண்.077807129, 0779871783

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இசைக்கலைமணி, கலாவித்தகர்
**திருமதி கமலராணி ஜெயபாலசிங்கம்**

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் சங்கீத பாடசேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி 2012.02.01 அன்று முதல் அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற திருமதி கமலராணி ஜெயபாலசிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

*இசையாசிரியர் கழகம்,*
*யாழ். வலயம்.*

## 45ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்: 18 ★ 01 ★ 1958



மறைவு: 29 ★ 12 ★ 2011

**அமரர் பழனித்துரை புஸ்பநவக்குமார்**

கடந்த 29.12.2011ஆம் திகதி அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் பழனித்துரை புஸ்பநவக்குமார் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.02.2012) சனிக்கிழமை மு.ப 10.00 மணி அளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*109/8, சிவன் புதுவீதி,*
*நல்லூர்.*

குடும்பத்தினர், (நிஷாந்தன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவத்தின் ஆட்சியை வட – கிழக்கில் ஒழிக்குக

அறிக்கையில் காணப்படும் குறைபாடுகளையும் ஆணைக்குழு கண்டு கொள்ளாமல் விட்ட மிக முக்கிய விடயங்களையும் சுட்டிக்காட்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் அந்த அறிக்கை, ஆணைக் குழுவின் தாம் ஏற்றுக் கொண்ட பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்தும்படியும் அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

ஜெனிவாவில் இந்த மாத இறுதியில் இலங்கை அரசு மீது, சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பான பிரேரணை ஒன்று கொண்டு வரப்படவுள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அறிக்கை வெளியாகி உள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிக்கையை வெளியிட்டார். அதன் முழு விவரம் வருமாறு -

இலங்கையைப் பாதிப்புக்கு உள்ளாக்கிய போரைத் திரும்பிப் பார்ப்பதற்கும் நாட்டில் மீண்டும் சீர்நிலையையும் சமாதானத்தையும் கட்டியெழுப்பும் யுகம் ஒன்றை எதிர்நோக்குவதற்குமென நியமிக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு இடைக்கால அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது.

அதனைத் தொடர்ந்து அதன் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆணைக்குழுவின் பணிப்பாணையின் பிரதான பாகமாகிய இன்றியமையாத விடயங்களில் திட்டவட்டமானதும் உண்மையானதுமான ஆய்வின் முடிவுகள் எவையும் இல்லாதிருப்பதை நாம் ஆரம்பத்திலேயே பதிவுசெய்ய விரும்புகின்றோம்.

போர் நிறுத்த உடன்படிக்கை கருத்துருவில் தவறானது என்ற ஆணைக் குழுவின் முடிவு ஏற்கத்தக்கதல்ல. போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னணியை அல்லது அதன் செயற்பாடுகளைப் பற்றி நன்றாக அல்லது எதுவுமே அறிந்திராத ஜாவீட் யுசுப் என்பவராலும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுகளுக்கும் இணக்கப் பேச்சின் அடிப்படையிலான தீர்வுக்கும் முற்றாக எதிர்ப்புத் தெரிவித்த யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகள் அமைப்பிலும் தங்கியிருப்பதில் குறைபாடுகள் உள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கையின் தோல்வி தொடர்பாக ஆணைக்குழுவால் எடுக்கப்பட்ட முடிவு, 2005ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வின் தாக்கத்தையும் இந்தத் தேர்தலின் பின்னர் நேரடிப் பேச்சு நடத்தாமை சம்பந்தமாகவும் கருத்திற்கொள்ளவில்லை.

டோக்கியோ பிரகடனம் உட்பட 2005இல் ஐ.தே.கவால் சமர்ப்பிக்கப்பட்ட சமாதான செயல்முறைத் தொகுப்பு புலிகளினால் நிராகரிக்கப்பட்டமை ஆணைக்குழுவால் அதன் அறிக்கையில் கருத்தில் எடுக்கப்படவில்லை. மேலும் சமாதான செயல்முறையின் பின்னர் தீர்வொன்றைக் காண்பதற்கும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் சர்வதேசத்தின் கடப்பாட்டை ஆணைக்குழு கருத்திற் கொள்ளத் தவறிவிட்டது.

போர் நிறுத்த உடன்படிக்கை இலங்கையின் பொருளாதாரத்தின்மீது கொண்டிருந்த சாதகமான விளைவுகளையும் ஆணைக்குழு கருத்திற்கொள்ளவில்லை. 2001இல் ஒரு வீதமாகவிருந்த எதிர்மறையான மொத்த உள்ளூர் உற்பத்தி ஓராண்டிற்குள் 2002இல் 4 வீதமாக வளர்ந்தது. போர்நிறுத்த உடன்படிக்கையின் சமூக, பொருளாதார நன்மைகள் தொடர்பாகவும் ஆணைக்குழு மௌனம் சாதிக்கின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டுமே போர்க்களத்தால் சூழப்பட்டிருந்தன. இலங்கை அரசினதும் விடுதலைப் புலிகளினதும் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளால் பெருந்தொகையான பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். வடக்கிலும் கிழக்கிலும் உடனிணைந்த சேதங்களுள் பல இலட்சக்கணக்கான பொது மக்கள் இடப்பெயர்வும், அவர்களது வாழ்வாதாரங்களினதும் வாழ்க்கை நிலைமைகளினது பாதிப்பும் அடங்கும். தெற்கின் பல பகுதிகளிலும் ஆழமான வடுக்களை ஏற்படுத்திய இந்தப் போர், நாட்டின் எந்தவொரு பாகத்தையும் விட்டு வைக்கவில்லை.

இறப்புகளின் எண்ணிக்கையும் காயமடைந்து ஆதரவை நாடி நிற்கும் மக்களின் எண்ணிக்கையும் இன்னமும் சரியாகக் கணிப்பிடப்படவில்லை. முகாம்களில் முடங்கிக் கிடப்பவர்களினதும் போர் இடம்பெறாத வலயங்களில் சிக்கவைக்கப்பட்டிருப்பவர்களினதும் எண்ணிக்கையையும் அரசு சரியாக கணிப்பிடத் தவறியமைக்கான காரணங்கள் என்ன என்பதனையிட்டும் ஆணைக்குழு போதியளவில் விசாரித்தறியத் தவறிவிட்டது.

போரின் கடைசி வாரத்தில் போர் நடைபெறாத வலயத்திலிருந்து தப்பியோடிய குடிமக்களைக் குடியமர்த்துவதற்கு போதியளவு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. அத்தகைய விளைவொன்றுக்கு அரசின் தயார் நிலையையும் ஆணைக்குழு பரிசீலனை செய்யத் தவறிவிட்டது.

போர் இந்தப் பிரதேசங்களில் வாழும் மூன்று பிரதான சமூகத்தினரையும் பாதித்தது என்பதனை அரசு மிகவும் சரியாகவே ஒப்புக் கொண்டுள்ளது. மிக அவசரமான பிரச்சினைகளுள் ஒன்றாக இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றமும் அதனோடு தொடர்புடைய காணிச் சொத்துரிமை சார்ந்த பிரச்சினைகளுமாகும். ஆணைக்குழு இந்தப் பிரச்சினைக்கு முனைப்பாகக் கருத்தைச் செலுத்தவில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நன்கு பயிற்றப்பட்ட நிர்வாக அலுவலர்களில் தங்கியிருப்பதாகத் தோன்கின்றது.

நிலையான தீர்வொன்றைக் காணவேண்டுமாயின் விரிவான சட்டவாக்கம் தேவை. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகத்தாலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவாலும் நியமிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'இலங்கையின் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆள்களையும் அகதிகளையும் பாதிக்கும் ஆதனம் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய சட்டப் பகுப்பாய்வு' என்னும் தலைப்பிலான அதன் அறிக்கையில் இந்தப் பிரச்சினைகளுக்குக் கவனம் செலுத்தியுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றம் மேல் நீதிமன்ற விண்ணப்பம் 620/2011 இல் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட 'பிம் சவிய' என்னும் காணி உரித்துப் பதிவு பற்றிய நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் வழக்கைத் தடைசெய்யும் 'நிறுத்தற் கட்டளையையும்' வழங்கியுள்ளது.

இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் இல்லங்களிலிருந்து இடம்பெயர்ந்தமை, பெருந்தொகையான குடிமக்களின் இறப்புகள், தனியார் ஆதனங்களின் அழிவு, கிராமிய சமுதாயங்கள் ஒட்டுமொத்தமாகக் காணாமற்போனமை என்பன ஒரு தேசிய பேரதிர்ச்சியாகும். இது மிகவும் நீண்டகாலத்திற்கு எம்மத்தியில் நடமாடிக் கொண்டிருக்கும். அத்துடன் வரவிருக்கும் பல தலைமுறைகளுக்கு எம்மனதில், விசேடமாக தமிழ் மக்களின் மனதில் வேரூன்றியிருக்கும்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை கவனத்திற்கொள்ளப்படாமையையும் நாம் அவதானிக்கின்றோம். ஐ.நாவின் அறிக்கை வெளியிடப்பட்டமையின் விளைவாக ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளையே கையாளும் என்ற நிலைப்பாட்டையே அரசு கொண்டிருந்தது.

10,000 குடிமக்களின் இறப்புகள் ஒரு அத்தியாவசியமான பலி என்று நவின் திசநாயக்கவின் கூற்று மேலும் புலனாய்பு செய்யப்படுதல் வேண்டும். எனவே, யுத்தத்தின் கடைசிக் கட்டத்தின் மீதும் பதில் சொல்லும் பொறுப்பு பற்றிய பிரச்சினையின்மீதும் முடிவொன்றுக்கு வருவதற்கு முன்பு கிடைக்கக்கூடிய சான்றையிட்டு மேலும் ஆழமாக அவதானித்திருக்கவேண்டும்.

சம்பந்தப்பட்ட அமைச்சர் ஆணைக்குழுவின் முன்னிலைக்குக்கூட அழைக்கப்படவில்லை. துரதிஷ்டவசமாக அத்தகைய வெளிப்பாடொன்றின் விளைவாக இடம்பெற்றிருக்கக்கூடிய அழிவையும் சேதத்தையும் மட்டுப்படுத்துவதற்கு நியாயமான முயற்சி மேற்கொள்ளப்பட்டதா என்ற கேள்விக்கு ஆணைக்குழுவின் முடிவுகள் பதிலளிக்கவில்லை.

'சனல் - 4' வீடியோ சர்வதேச மனித உரிமைகள் மீதான முகவராண்மைகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சனல் - 4 வீடியோ ஒளிபரப்பிற்கு ஆணைக் குழு தனது கவனத்தைச் செலுத்தியுள்ளதுடன் விடியோ காட்சியிலிருந்து எழுகின்ற சார்த்துரைகள் உண்மையானவையா பொய்யானவையா என்பதனை நிலைநாட்டுவதற்கு இந்த விடயங்கள் தொடர்பில் சுயேச்சையான புலனாய்வை அரசு ஆரம்பிக்க வேண்டும் எனச் சரியாகவே விதப்புரை செய்தது.

சுயேச்சையான விசாரணைக்கான செயல்முறை அமைப்பு பாரபட்சமற்ற விசாரணையொன்றை நடத்தக்கூடிய ஆற்றல் கொண்டதாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அரசு மனித உரிமைகள் பதிவில் முன்னோக்கிச் செல்லக்கூடியதாக இந்த விடயத்தை முடிவுறுத்துவதற்கு மிகவும் அவசர தேவையுள்ளது.

தடுத்துவைக்கப்பட்ட[illegible] தொடர்பான விடயங்களையிட்டு விசாரணைகளின் முடிவொன்றை நாம் பலமாக விதந்துரைக்கின்றோம்.

இயைபான அதிகாரிகளுக்கு நம்பத்தகுந்த தகவலுடன் அறிக்கையிடப்பட்ட குடிமக்களின் இறப்புகளையும் காணாமற்போதலையும் புலனாய்வு செய்வதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆதலால் அறிக்கையின் 9ஆம் அத்தியாயத்தின் 9.37 (அ), 9.41, 9.50 ஆகிய பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய விடயங்களையிட்டு மேலும் புலனாய்வுகளை மேற்கொள்வதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவால் விதப்புரை செய்யப்பட்ட பல்வேறு சுயேச்சையான குழுக்களை அரசு மேலும் நியமித்தல் வேண்டும்.

இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் தங்கள் சொந்த இடத்துக்குத் திரும்பிச் சென்று தங்கள் வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிக்க இயல்பாகவே ஆர்வம் கொண்டுள்ளனர். அவர்கள் எந்த வாழ்க்கைத் தொழிலில் அனுபவமும் தேர்ச்சியும் கொண்டுள்ளனரோ அந்த வாழ்க்கைத் தொழிலில் அவர்கள் ஈடுபடுவதனை இயலச் செய்வதற்கு அவசியமான அனைத்து வசதிகளையும் அரசு அளிக்க வேண்டும். வடக்கிலும் கிழக்கிலும் அபிவிருத்திச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க முறையில் இடம் பெறுவதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

இந்நோக்கத்திற்கு அவசியமான நிதி வளங்களையும் அரசு கிடைக்கச் செய்தல் வேண்டும். ஜனநாயகக் கோட்பாடுகளின் சிதைவு, சட்டத்தை வலுப்படுத்துவதில் அரசியல் தலையீடு, பகிரங்கத்துறையை அரசியல்மயமாக்குதல், நல்லாட்சி காணப்படாமை, சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாமை என்பன அறிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தங்கள் குறைகளையிட்டு கவனம் செலுத்துவதற்கு அரசின் ஆற்றலிலும் விருப்பத்திலும் ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் நம்பிக்கை இழப்பதற்கும் இது பொறுப்புடையதாகும்.

ஜனநாயக நிவனங்களை அச்சுறுத்தும் பிரச்சினைகளையும் ஜனநாயகக் கோட்பாடுகளையும் நல்லாட்சியையும் மனித உரிமைகளையும் மேம்படுத்த வேண்டிய தேவைப்பாட்டையும் ஒப்புக்கொண்டமைக்கு ஆணைக்குழுவைப் பாராட்டாது விட்டால் ஐ.தே.க. அதன் கடமையில் தவறியதாக அமையும்.

நல்லிணக்கம் (பந்திகள் 9.167 - 9.285) மற்றும் குறிப்பாக மனித உரிமைகள் தொடர்பாக அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் வரவேற்கும் அதே வேளை இனத்துவ, மத அல்லது அரசியல் பாகுபாடுகள் கொண்ட பிரிவுகள் இல்லாது முழுமையாகச் செயற்படும் ஜனநாயகமே இந்தக் காலக்கட்டத்தின் தேவையாகும் என்பதை ஐ.தே.க. வலியுறுத்த விரும்புகின்றது. ஐ.தே.க. பின் வருவனவற்றை முன்மொழிகின்றது.

(I) அவசரகால ஒழுங்கு விதிகளின்கீழ் மக்களை கைதுசெய்தல், பொலிஸ் கட்டுக்காப்புக்குள் எடுத்தல் உட்பட ஆள்கடத்தல்கள், தன்னார்வமின்றி காணாமற்போதல் என்பன பற்றி புதிய சட்டவாக்க ஏற்பாடுகள்.

(II) சாட்சிகளின் பாதுகாப்பிற்கு பயனுறுதியுள்ள நிகழ்ச்சித்திட்டமொன்றின் அவசியம்.

(III) அண்மைக் காலத்திலும் இன்றும்கூட பத்திரிகையாளர்கள்மீதான தாக்குதல்களையிட்டுப் புலனாய்வு செய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று.

(IV) 2003இல் அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகவல் சுதந்திரம் மீதான அறிக்கையை விரைவாக சட்டவாக்கம் செய்தல்.

(V) நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிறைவேற்றுவதற்கும், வடக்கிலும் கிழக்கிலும் ஆயுதம் தாங்கிய குழுக்கள் அனைத்தையும் ஆயுதங்களைக் களையச் செய்வதற்கும் சட்டம் வலுவுக்கிடுதல் பற்றி அறிக்கையிடுவதற்கும், அரசாலும் எதிர்க்கட்சியாலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மேற்பார்வைக் குழுவொன்றின் நியமனம்.

(VI) 2001இல் ஐ.தே.கவால் செய்யப்பட்டது போன்று பொலிஸ் பிரிவுக்குப் புறம்பாக அமைச்சொன்று உடனடியாகத் தாபிக்கப்படல். தமிழ் பேசும் ஆளணியினரை பொலிஸ்படையில் சேர்ப்பதற்கும், தற்போதுள்ள ஆளணியினரை மும்மொழித் தேர்ச்சியுடையவர்களாக்குவதற்கும் திட்டவட்டமானதும் விரிவானதுமான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அரசு அறிவித்தல் வேண்டும்.

(VII) வடக்குப் பிரதேசம் இராணுவமயமாக்கப்படுவதை நிறுத்துதல். அத்துடன், வடக்கில் சிவில் நிர்வாகப் பணியை பகிரங்க சேவைக்கு மட்டுப்படுத்துதல்.

(VII) நாட்டின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் தேவையை தங்கள் மனதிற்கொண்டு இராணுவத்திற்குப் புதிய பணியை நிர்ணயித்தல். ஆள்புல ஒருமைப்பாட்டின் பாதுகாப்பில் இராணுவத்தின் பணி ஒப்புக்கொள்ளப்படுகின்றது. ஆனால், உயர்மட்ட ஆளணியினருக்கு சன்மானம் வழங்குவது மாத்திரம் போதாது. சேவையாற்றும் எல்லா பதவி வரிசைகளையும் சேர்ந்தவர்களின் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு ஒரு நிகழ்ச்சித்திட்டம் இருத்தல் வேண்டும்.

(VIII) பொதுமக்களின் குறைகளைக் கையாள்வதற்கு தாபிக்கப்படும் விசேட நிறுவனம் நாடாளுமன்றத்தில் இரு தரப்பு உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். இது சுயாதீன ஒரு நிறுவனமாகவும், சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவையும், சுயாதீன பகிரங்க சேவை ஆணைக்குழுவையும் போன்று அதே அந்தஸ்தையுடைதாகவும் இருத்தல் வேண்டும்.

(IX) பயனுறுதியுள்ள நல்லிணக்கத்தை எய்துவதற்கு நிச்சயமாக ஒரு தடையாக இருக்கும் அரசின் அரசியல் செயல்முறைகளில் ஈடுபாடு கொண்டவர்களான ஒரு காலத்தில் போராளிகளாக இருந்தவர்களையும் ஆயுதம் தாங்கிய அரசியல் குழுக்களையும் பயன்படுத்துவதில் காப்படைவு கொள்ளாமல் நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

(XI) அரசமைப்பின் 16 ஆம் உறுப்புரையை நீக்கம் செய்து ICCPR ஐ எமது சட்டத்தின் ஒரு பாகமாக சேர்ப்பதன்மூலம் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயம் வலுப்படுத்தப்படுதல் வேண்டும்.

அவசரகால ஒழுங்கு விதிகளின் சட்டவாக்கத்தை மீளாய்வு செய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(XII) சட்டவாக்கத்தை மீளாய்வுசெய்தல், அரசுக்கும், மாகாண சபைகளுக்கும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கும் இடையிலான பிணக்குகளைத் தீர்த்தல் என்பன உட்பட அரசமைப்புத் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கு அரசமைப்பு நீதிமன்றமொன்றைத் தாபித்து அடிப்படை உரிமைகளை நிலைநாட்டல். தற்பொழுது வலுவிலுள்ள சட்டவாக்கத்திற்குமுன்னர் மீளாய்வு செய்யும் முறைமை முற்றிலும் அவசியம் எனக் காணப்பட்டது. சட்டவாக்கத்தின் பின்னர் மீளாய்வுசெய்யும் நடைமுறையொன்றை நாம் பலமாக விதந்துரைக்கின்றோம்.

(13) பின்வரும் முகவராண்மைகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு புதிய செயல்முறை அமைப்பொன்றை நிறுவும் அரசமைப்புத் திருத்தமொன்று:

(அ) அரசமைப்பு நீதிமன்றம். (ஆ) தேர்தல் ஆணைக் குழு. (இ) பொலிஸ் ஆணைக்குழு. (ஈ)பகிரங்க சேவை ஆணைக்குழு. (உ) உயர் நீதிமன்றம். (ஊ)மேன்முறையீட்டு நீதிமன்றம். (எ) மேல் நீதிமன்றங்கள். (ஏ) பந்தி 9.218இல் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட நிறுவனங்கள். (ஐ) பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி. (ஒ)மனித உரிமைகள் ஆணைக்குழு. (ஓ) பணச் சபை. (ஔ). சட்டத்துறை தலைமையதிபதி .

நீதிச் சேவை ஆணைக் குழு பிரதம நீதியரசரையும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரையும் உயர்நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதிபதியையும் கொண்டிருத்தல்வேண்டும். இத்திருத்தம் அரசமைப்பிற்கான 18 ஆவது திருத்தத்தின் இயைபான உறுப்புரைகளையும் நீக்கம் செய்யும்.

(14) ஆணைக்குழுவால் அக்கறை கொள்ளப்பட்டவாறு அதிகாரப்பகிர்வு இனக் குழுக்களிடையே தீர்வொன்றைக் காண்பதற்குப் பிரதான காரணியொன்றாகும். அரசு முதற் சந்தர்ப்பத்திலேயே தற்போதுள்ள அரசமைப்பு சார்ந்த ஏற்பாடுகளையும் ஏற்கனவே இடம் பெற்றுவரும் பந்தி 8.224 என்பதிலுள்ள விதப்புரைகளையும் அடிப்படையாகக் கொண்ட உரையாடல்களுக்கான பிரேரணைகளை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

விதப்புரைகளை தெளிவாகக் குறிப்பிடப்பட்ட காலவரையறையுடன் விரிவான திட்டமொன்றை அறிவிப்பது அரசின் பொறுப்பாகும். ஆணைக்குழுவின் இடைக்கால விதப்புரைகளை அரசு நடைமுறைப்படுத்த தவறியுள்ளதையும் ஐ.தே.க. அவதானிக்கின்றது.

நாடாளுமன்றத்தில் தமது அவதானிப்புரைகளைச் சமர்ப்பித்துள்ள எதிர்க்கட்சிகளால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட எல்லா விதப்புரைகள்மீதும் உடனடி நடவடிக்கை எடுப்பதன்மூலம் அரசு அதன் நல்லெண்ணத்தை நிலைநாட்டுதல் வேண்டும். - என்றுள்ளது. (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

**சனி ஞாயிறு பிரிவு ஆரம்பம்**
**11-02-2012 சனிக்கிழமை**

| | |
|---|---|
| ராஜமாணிக்கம் மண்டபம் அருகில் **அச்சுவேலி** | காலை **8.00 - 9.00** |
| NSB அருகில், கொழகாமம் வீதி **நெல்லியடி** | காலை **9.00 - 10.00** |
| நகரசபை அருகில், ஸ்ரேசன் வீதி **சாவகச்சேரி** | காலை **11.30 - 12.30** |
| 182, ஸ்ரான்லி வீதி **யாழ்ப்பாணம்** | மாலை **3.00 - 4.00** |
| இலங்கை வங்கி மேல்மாடி **சங்கானை** | மாலை **5.00 - 6.00** |

**MyWay** 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

# ஒலுமடுவில் இராணுவம் – மக்களிடையே முறுகல்

முல்லைத்தீவு, பெப்.11

நெடுங்கேணி, ஒலுமடுப் பகுதியில் இராணுவத்தினரின் அடாவடித்தனமான தாக்குதல் சம்பவம் ஒன்றை அடுத்து அங்கு நேற்று மாலை பதற்றநிலை காணப்பட்டது.

நெடுங்கேணி வாசியான சாரதி ஒருவரைப் படையினர் தாக்கியதை அடுத்து அங்கு ஊர் மக்கள் கூடிவிட்டனர். அதை அடுத்து பொதுமக்கள் - இராணுவத்தினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு பரபரப்பான நிலைமை தோன்றியது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

வீதியில் சாரதிகள் இருவருக்கு இடையே போக்குவரத்துப் பிரச்சினையால் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. இருவரும் வெவ்வேறு வாகனங்களில் வந்த சமயமே இந்தத் தர்க்கம் வந்தது. அவர்களில் ஒருவர் ஊர்வாசி. மற்றவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்.

சம்பவ இடத்துக்கு அருகில் இராணுவ முகாம் உள்ளது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் ஓடோடிச் சென்று இராணுவத்தினரிடம் முறையிட்டார். அங்கிருந்து வந்த இராணுவத்தினர் கேட்டுக் கேள்வி ஏதுமின்றி ஊர்வாசியான தமிழரை இழுத்துப் பிடித்துத் தாக்கினார்.

இதனை அவதானித்த அப்பகுதியில் நின்ற மக்கள் ஒன்றாகத் திரண்டு இராணுவ முகாமுக்குச் சென்று இராணுவத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது. இராணுவ அதிகாரி ஒருவரின் தலையீட்டை அடுத்து அங்கு சிறிது நேரத்தின் பின்னர் வழமை நிலைமைக்குத் திரும்பியது. நெடுங்கேணி, கீரிசுட்டான் பகுதியைச் சேர்ந்த தியாகராஜா யாழேந்திரன் என்பவரே தாக்குதலுக்கு இலக்கானவர் ஆவார். (ஒ-323-435)

**காணி விற்பனைக்குண்டு**

**உடுப்பிட்டி சந்திக்கு அண்மையில் பேர்க்காலைவீதியில் 3பரப்புக் காணி 12அடி பாதையுடன் பயன்தரு மரங்களுடன் விற்பனைக்குண்டு.**
**தொடர்பு:-0777286008.**

**வீடும் காணியும் விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் வீடும், 3பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு:-0776258116**

**ஆஸ்திரேலியா குடும்பவிசா**
**அரிய வாய்ப்பொன்று இன்னும்**
**15 தினங்களில் கைநழுவப்போகின்றது.**

இதுவரை .....

★ 89 குடும்பங்கள் விசா ஆலோசனை செயற்றிட்டத்திற்காக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன.
★ 5 குடும்பங்கள் எமது ஆலோசனையின் பயனாக குடிபெயர்ந்துள்ளன.
★ ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனையின் இறுதி நாள் 25.02.2012

எல்லா விவரங்களையும் அலுவலக நேரங்களில் இலங்கையிலும் ஆஸ்திரேலியா கிளையிலும் பார்வையிடலாம்.
திசை காட்டி (பிறைவேற்) லிமிட்டெட்.
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.
தலைமைக் காரியாலயம்:
**57, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0212219016.**
கிளைகள்:
115 ஏ, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 0214914527.
www. thisaikaddi.lk.thisaikaddi@sltnet.lk.
மெல்போர்ண் ஆஸ்திரேலியா 0061412479209
இலங்கை நேரப்படி காலை 6 மணி - பி.ப. 4 மணிவரை தொடர்பு கொள்ளலாம்

**ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவையின்**
**முக்கிய அறிவித்தல்**

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் பொருள்களை 05.02.2012 வரை அனுப்பிய வாடிக்கையாளர் தயவு செய்து எதிர்வரும் 15.02.2012ஆம் திகதிக்கு முன்னதாக பொருள்களை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். நீங்கள் எடுத்துக் கொள்ளத் தவறும் பட்சத்தில் அதற்கான பொறுப்பாளி நாம் அல்ல என்பதனை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

குறிப்பு: கொழும்பு களஞ்சியத்திலும் யாழ்ப்பாண களஞ்சியத்திலும் உரிமை கோரப்படாத பொருள்கள் தேங்கிக் கிடப்பதனால் மேற்படி நடவடிக்கைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

- நிர்வாகி.

**ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேவை**
**69,115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**தேவை**

போன் சொப் ஒன்றிற்கு கைத்தொலைபேசி திருத்துனர்கள் தேவை.(Hardware,Software)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
**தொடர்பு:-0777107487**

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Quick Learning Course** 1 1/2 Months
(Spoken English with Grammar)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

Batch - 1: 11.02.2012 03.00 -05.00
Batch - 2: 14.02.2012 09.00 -12.00
Batch - 3: 14.02.2012 03.00 -05.00


**பதவி வெற்றிடம்**

கொழும்பையும், யாழ்ப்பாணத்தையும் தளமாகக் கொண்டு இயங்கும் போக்குவரத்து நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

01. முகாமையாளர் (ஓய்வுபெற்ற அரச அதிகாரி விரும்பத்தக்கது)
02. கணக்காளர்.
03. களஞ்சிய பொறுப்பாளர்
04. பொருள்கள் விநியோகிப்பவர்.
05. ஆசன பதிவு மேற்கொள்பவர் (பெண்கள்)
06. சாரதி/ நடத்துநர்.

சுயவிவரக் கோவையுடன் இன்று 11.02.2012 நேரில் வரவும்.

**முகாமையாளர் - ஈஸ்வரன் ரான்ஸ்போட்**
69,115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



PMC
**பிலதெல்பியா மிஷனறி சபையின்**
# நற்செய்தி பெருவிழா

11.02.2012 (சனி) மாலை 4.00 மணி
18.02.2012 (சனி) மாலை 4.00 மணி
12.02.2012 (ஞாயிறு) காலை 10.00 மணி
19.02.2012 (ஞாயிறு) காலை 10.00 மணி

கவலைகள், கஷ்டங்கள், வியாதிகள், வேதனைகள் மத்தியில் வாழும் உங்களுக்கு விடுதலையளிக்கும் அற்புத ஆராதனை

இடம்: **பிலதெல்பியா மிஷனறி சபை**
724, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

செய்தி
பாஸ்டர் ஆத்தர் செல்லராஜா

தொடர்புகளுக்கு
பாஸ்டர் மோகன் 0771542245 / சகோ. ஜீவராஜ் 0774358190 / பாஸ்டர் அகிலன் 0776450254

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பணக்காரனாக வேண்டுமென்று விரும்புகிறவன் கஞ்சனாக இருக்கிறான். நான் பணக்காரன் என்று நினைத்து செலவு செய்பவன் ஏழையாகின்றான்.
-ஷேக்ஸ்பியர்.



வார வசந்தம் 01

உதயன் | 11 பெப்ரவரி 2012 சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு

# குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்தப்படுவாரா ஜனாதிபதி மஹிந்த?



**சரணடைந்த விடுதலைப் புலிகளுக்கு நடந்த கொடுமைகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது. இதற்கிடையில் எப்படி இறுதிக் கட்டப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்க மாட்டார்கள் என்று சொல்ல முடியும்.**

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களான வே.பாலகுமார் மற்றும் யோ.யோகி ஆகியோர் இராணுவத்தின் இரகசியத் தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என ''சிறிலங்கா கார்டியன்' தகவல் வெளியிட்டுள்ளது. இவர்கள் இருவரும் போர் முனையில் கொல்லப்பட்டு விட்டனர் என அமைச்சர் டி.யூ. குணசேகர முன்னர் தகவல் வெளியிட்டிருந்த நிலையில், இவர்கள் தடுப்பில் இருக்கின்றனர் என்று இராணுவத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார் எனவும் அது செய்தி வெளியிட்டுள்ளது.

தெற்கிலுள்ள இரகசியத் தடுப்பு முகாம் ஒன்றில் இறுக்கமான இராணுவப் பாதுகாப்பின் கீழ் விடுதலைப் புலிகளின் ஏனைய மூத்த தலைவர்களுடன் இவர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளதாக கார்டியன் சுட்டிக் காட்டியுள்ளது.

போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த பாலகுமார், யோகி, லோறன்ஸ் திலகர், பாப்பா, புதுவை இரத்தினதுரை உள்ளிட்ட சுமார் 50 விடுதலைப் புலிகள் உடற்சோதனைகளின் பின்னர் பஸ் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டதைக் கண்டதாக நேரில் பார்த்தவர்கள் சாட்சியம் அளித்துள்ளனர். இவர்களின் நிலை தொடர்பாக அரசு எந்தத் தகவலையும் வழங்க மறுத்து வருகிறது. எனினும் பாலகுமார், யோகி ஆகியோர் கடுமையான முறைகளின் மூலம் விசாரிக்கப்பட்ட பின்னர் தற்போது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்று இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

கவிஞர் புதுவை இரத்தினதுரை மருத்துவக் கண்காணிப்பிலும் லோறன்ஸ் திலகர் மனக் குழப்பத்தால் தொடர் சிகிச்சை பெற வேண்டிய நிலையிலும் இருக்கின்றனர் எனவும் 'சிறிலங்கா கார்டியன்' தகவல் வெளியிட்டுள்ளது. பாலகுமார் பற்றி 'டெக்கான் குரோனிக்கல்' செய்தியாளர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் எழுப்பிய கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்காமல் தவிர்த்திருந்த நிலையில் தான் 'சிறிலங்கா கார்டியன்' இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிக்கையில், பாலகுமார் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அறியப்பட்ட பிரமுகர்களில் பெரும்பாலானோர் இறுதிப் போரில் கொல்லப்பட்டுவிட்டனர். சிலர் சரணடைந்தனர். அங்கே அனைத்துலக செஞ்சிலுவைக் குழு மற்றும் ஏனைய முகவரமைப்புகள் சரணடையும் நடவடிக்கைகளின் போது இருந்தன என்றும் டெக்கான் குரோனிக்கல் நாளேட்டின் செய்தியாளர் பகவான் சிங்கிற்கு கொழும்பில் அளித்த தனிப்பட்ட செவ்வி ஒன்றில் கோத்தபாய, பாலகுமார் குறித்து தெளிவாகப் பதிலளிக்காமல் மழுப்பியிருக்கின்றார்.

சரணடைந்த விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரித்த கோத்தபாய, உயிர் தப்பியோரையும் சரணடைந்த புலிகளையும் பொறுப்பேற்ற போர் வலயத்தில் பிரான்ஸின் எம்.எஸ்.எவ். மருத்துவக் குழுவினர், இந்திய மருத்துவக் குழுவினர் உள்ளிட்ட அனைத்துலக முகவரமைப்புகள் இருந்தன என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

சரணடைந்த விடுதலைப் புலிகள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப் பதை 'சிறிலங்கா கார்டியன்' வெளியிட்டுள்ள செய்தியில் இருந்து தெரிகின்றது.

விடுதலைப் புலிகள் தளபதி ரமேஷ் கடுமையான முறையில் சித்திரவதை செய்யப்பட்டு இறந்த நிலையில் அவரது உடல் வீசப்பட்டிருந்தது அம்பலமாகி இருந்தது.

இதேபோல் விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்களான நடேசன், புலித்தேவன் கடுமையான முறையில் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட காட்சிகளும் அம்பலத்துக்கு வந்தன. இப்படியாக சரணடைந்த விடுதலைப் புலிகளுக்கு நடந்த கொடுமைகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

இதற்கிடையில் எப்படி இறுதிக் கட்டப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்க மாட்டார்கள் என்று சொல்ல முடியும்.

சிறைக் கைதிகளை இராணுவத்தினர் நிர்வாணப்படுத்தி சோதனை செய்கின்ற னரா? என்பது பற்றி விசாரணை நடத்து மாறு கொழும்பு மேலதிக நீதிவான் இவோன் பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படும் ஆண் மற்றும் பெண் சிறைக்கைதிகள் இராணுவத்தினரால் நிர்வாணப்படுத்தப் பட்டு சோதனை இடம்பெறுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக் குமாறு நீதிவான் சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார். நாசிப் படைகள் கூட இவ்வாறான கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி குணரட்ண வன்னிநாயக்க தெரிவித்துள்ளார். கைதிகள் நிர் வாணப்படுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை மனித உரிமை மீறலா கவே கருத வேண்டும் என சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் இதுவரையில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமை கவலையளிக்கின்றது என நீதிவான் தெரிவித்தார். கொழும்பு வெலிக்கடை மற்றும் மகஸின் சிறைக் கைதிகளுக்கு நடக்கும் கொடுமைகள் ஏராளம் என்றால் மறைவிடங்களில் உள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களின் நிலை என்னவாக இருக்கும்? இதனால் தான் இறுதிக் கட்டப் போர் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம் என்பதே பிரிட்டனின் நிலைப்பாடு. அதில் மாற்றம் இல்லை என அந்த நாடு தெரிவித்துள்ளது.

உண்மையாக கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சில கேள்விகளுக்குப் பதில் இல்லை என்று பிரிட்டன் குற்றம் சாட்டியுள்ளது. ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையில் சில விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என இலங்கைக்கான பிரிட்டன் தூதர் ஜோன் ரான்ஜீன் தெரிவித்துள்ளார். பல கேள்விகளுக்குப் பதிலளிக்காமலேயே ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உண்மையாகக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பிரிட்டன் அமைச்சர் அலிஸ் டயர் பர்ட் ஏற்கனவே தமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணைகள் அவசியம் என்பதே பிரிட்டனின் நிலைப்பாடு எனவும் அதில்

**துன்னாலை செல்வம்**

மாற்றமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போரின்போது கணிசமான அளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில சம்பவங்கள் தொடர்பில் மேலதிக விசாரணை அவசியம் என்பதை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவே வலியுறுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய முறையில் அமுல்படுத்துவதே இலங்கை அரசு எதிர்நோக்கிவரும சவால் என்றும் அவர் மேலும் தெரிவித் தார்.

இதற்கிடையில் சர்வதேச குற்ற வியல் நீதிமன்றில் மகிந்த ராஜபக்ஷவை நிறுத்துவதற்கு அமெரிக்கா முனைப்புக் காட்டி வருகிறது. பிளேக் உள்ளிட்ட முக்கிய இரு இராஜதந்திரிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். எதிர்வரும் 27 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் நோக்கிலேயே அமெரிக்கா செயற்பட்டு வருகின்றது. மேலும் மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளிடம் இலங்கை அரசுக்கு எதிராகக் கையொப் பங்களைத் திரட்டும் பணிகளையும் அமெரிக்கா ஆரம்பித்துள்ளது.

இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதே அமெரிக்காவின் பிரதான இலக்கு. ஹேக்கில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஜனாதிபதியைக் குற்றவாளியாக முன்னிறுத்த முயற்சி எடுக்கப்படுகின்றது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (26)

## எண் 7 (கேது)

(தன்வழி நடப்பவர்கள்)

7ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 7, 16, 25 தேதிகளில் பிறந்தவர்களாவர். எந்தவொரு மாதமாக இருந்தாலும், மேற்கண்ட தேதிகளில் பிறந்தவர்கள் 7 என்னும் கேது ஆதிக்கத்தில் பிறந்தவர் ஆவார்கள். தீவிரமான மத நாட்டமும், கொள்கைப் பிடிவாதமும், நிகரற்ற சாஸ்திர நம்பிக்கையும் உடையவர்கள். தனக்கென்று தனி வழியை உருவாக்கி அதன்வழி நடப்பார்கள். தீவிரமான கடவுள் நம்பிக்கை உடையவர்கள். கடவுள் நாட்டமிருக்கும். தீவிர சாதனை செய்வார்கள். துறவிகள் ஆகவும் மனம் இடங்கொடாது. கேது ஆதிக்கத்தினா் அலங்காரமில்லாத தூய ஆடைகளையே அணிவார்கள். கண்ணியமானவர்கள். உயரமான தோற்றமும் ஒருவித வசீகரமும் இருக்கும். அவ்வப்போது மாறுபாட்டை ஏற்படுத்திக் கொண்டேயிருப்பார்கள். முன் கோபம், இனிய இல்லறத் துணை அமையாமை ,தீவிரவாத குணம், துன்பத்தை அதிகம் அனுபவித்தல், மாற்றுக் கருத்தை வெளியிடுதல், எதிர்வாதம் எப்போதும் செய்தல், எதிர் அணியின் பலத்தைக் கூட்டப் பாடுபடுதல் இவற்றையே பிறவிக்குணம் போலப் பெற்றிருப்பார்கள். சுதந்திரமும், தனித்துவமான பாதை இவர்களுடையது. ஒருவித சக்தியின் வியாபிப்பினால், மகான்களாக மாறுவார்கள்.சித்தர்கள் போல மற்றவர்கள் வாழ்க்கையைச் சிறப்படையச் செய்வார்கள். அலங்காரப் பிரியர்கள், கலகலப்பாகப் பழக மாட்டார்கள். வார்த்தைகளை நிதானமாகவே உபயோகிப்பார்கள். தன்னம்பிக்கை இல்லாத போது மௌனம் சாதிப்பார்கள். இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அபிப்பிராய பேதங்கள் இருந்து கொண்டேயிருக்கும். இதனால் நண்பர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள். இவர்களிடம் அதிகமாக மற்றவர்கள் நெருங்கப் பயப்படுவார்கள். இவர்களுக்கு உண்மையான நண்பர்களும், மனமொத்த மனைவியும் அமைவது கடினம். எதற்கும் சட்டென்று ஆத்திரப்படுவார்கள். ஒரு சிலர் பிறவியிலேயே கலை நாட்டத்துடன் அதில் தீவிரமாக ஈடுபட்டு வெற்றி பெறுவார்கள். ஒரு சிலர் கலைப்பற்று அறவே இல்லாமல் இருப்பார்கள். இந்தக் கேது ஆதிக்கத்தினருக்கு மனதிற்கு இசைந்த மனைவி அமைவது கடினம். எதிர்மறையான கொள்கை கொண்ட மனைவி அமைந்து விடும். குழந்தை பிறக்காமையாலும், பல்வேறு குடும்பக் கஷ்டத்தாலும் மிகவும் துன்பத்திற்கும் சோகம் சூழ்ந்த வாழ்க்கைக்கும் ஆளாவார்கள்.

மனம் நொந்து போன வாழ்வு அமைந்துவிடும். மிகவும் துரதிர்ஷ்டசாலிகள். இந்த எண் பெண்கள் தனது அந்தஸ்துக்கு மீறிய ஆணையே மணப்பார்கள். மிகவும் அழகாகவும், சிலர் அங்க வளர்ச்சி குறைவாகவும் அமைவார்கள். கேது ஆதிக்கத்தில் பிறந்த சிலர் 'விதி என்னைச் சதா சதி செய்கிறது' என்று புலம்புவார்கள். நயமாகப் பேசிப்பழகத் தெரியாது. ஆதலால் இவர்களிடம் நண்பர்கள் அதிகமாக ஒட்ட மாட்டார்கள். திருமணத் தடைகளால் மிகவும் வருத்தப்படுவார்கள். அப்படித் திருமணம் ஆனாலும் மனைவி சரியாக அமையாமல் துன்பப்படுவர். எதற்கும் இவர்கள் மற்றவர்களைப் பின்பற்ற மாட்டார்கள். எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் தனது முடிவின்படியே செயற்படுவார்கள். சலியாத உழைப்பினால் மேன்மை அடைவார்கள். இவர்களின் முயற்சிகள் முடிவை நெருங்கும் போது நின்று போகும். பிறந்த தேதி எண்கள் 7-2 ஆனது பெருத்த முன்னேற்றத்தையும், 7-5 ஆனது பெரு வெற்றி அடைவதாகவும், 7-7 ஆனது எதிர்பாராத வெற்றிகளைக் கொடுக்கக் கூடியதாகவும் அமையும். 7-9 மேன்மையான வாழ்க்கையாக முடியும்.

### கேது ஆதிக்கத்தினரின் தொழில்கள்

கலை சார்ந்த தொழில்கள், கணினி, கணிதம், விஞ் ஞானம், இரசாயனம், கதை, காவியம், நாட்டியம், நடனம், சங்கீதம், பாடல்கள், நடிப்பு, இயக்கம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குவார்கள்.



### கேது ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நாள்கள்

1, 10, 19, 28 ஆகிய தேதிகள் அதிர்ஷ்ட நாள்களாகும். 28ஆம் தேதி மட்டும் பரிபூரண அதிர்ஷ்டம் தருவதில்லை. சந்திரனும், சனியும் ஆக 2ம் 8ம் சேர்ந்திருப்பதால் முழுமையான வெற்றிகள் கிடைப்பதில்லை. எந்தவொரு மாதத்திலும் வரும் 1, 10,19, 2, 11, 20,25 தேதிகள் அதிஷ்ட தினங்களாகும். தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டிவரும் கூட்டு எண் 1 வரும் நாள்களும் அதிர்ஷ்ட தினங்கள் ஆகும். மேற்கண்ட நாள்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும். நீடித்து நிலைக்கக் கூடிய காரியங்களைக் கூட்டு எண் 1 வரும் நாள்களில் செய்து வர வேண்டும். அதே நேரத்தில் தேதி எண்ணும் சாதகமாக அமைய வேண்டும்.

### அதிர்ஷ்டமான நிறங்கள்

மஞ்சள், வெளிர்நீலம், வெளிர் பச்சை,வெள்ளை போன்ற வர்ணங்கள் கேது ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நிறங்களாகும்.

### அதிர்ஷ்ட ரத்தினம்

வைடூரியம், முத்து, சந்திரகாந்தக்கல், ஓபல், ஜேட், புலிக்கண்கல் போன்றவை அதிர்ஷ்ட ரத்தினங்களாகும். வலது கை மோதிர விரலில், தோலில் உரசும்படி அணிந்து கொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

### அதிர்ஷ்ட உலோகம்

வெள்ளி இவர்களின் அதிர்ஷ்ட உலோகமாகும். தங்கம், வெள்ளி கலந்தும் செய்து அணிந்து கொள்ளலாம். காப்பு, அட்சரங்கள் போன்றவற்றை அதிர்ஷ்ட உலோகங்களில் பதித்து அணிந்து வரலாம். அதிர்ஷ்ட ரத்தினங்களை வெள்ளி மோதிரத்தில் பதித்து அணிந்து கொள்ளலாம். அதிர்ஷ்டம் பன்மடங்கு விருத்தியாகும்.

### 7ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து

இவர்கள் பெயருக்கு அடுத்தபடியாக கையெழுத்தையும் வசீகரப்படுத்திக் கொண்டால் வளமான வாழ்வும், பெரும் பணம் புரளும். தொழிலும்,வியாபார விருத்தியும், திடீர் லாபம் சேர்க்கும் அமைப்பும், நிரந்தரமான உத்தியோகமும், மனக் குழப்பங்கள் நீங்கி தெளிவான வாழ்க்கையும் அமைந்து விடும். ஆரம்பம் வலப்புறமாகச் சுழித்துப் போட வேண்டும். முடிவெழுத்து மற்ற எழுத்துக்களை விடவும் உயரமாகப் போட வேண்டும். கோடுகள், புள்ளிகள் வைத்தால் காரியத் தடையை உண்டு பண்ணும்.

### கேது ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

#### 7ஆம் தேதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

சாந்தமான குணமுடையவர்கள். அன்பு பாசம் நிறைந்தவர்கள். அமைதியை விரும்புவார்கள். சுலபமாக மற்றவருக்கு விட்டுக் கொடுத்து, அடக்கமாக நடப்பார்கள். புத்தி சாதுர்யமும், இரசிக்கும் தன்மையும் இருக்கும். மற்றவருக்கு உதவும் குணமிருக்கும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அதிகமுடையவர்கள். குழந்தைச் சுபாவமுடையவர்கள். எப்போதும் குடும்ப வாழ்க்கையில் குழப்பங்கள் வந்து போகும். எதிலும் பிடிவாதமாகச் செயல்பட்டு வெற்றி பெறுவார்கள். வரட்டுப் பிடிவாதமிருக்கும்.

#### 16ஆம் தேதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

மற்றக் கேது ஆதிக்கத்தினரைக் காட்டிலும் வித்தியாசமான மனோசக்தி உடையவர்கள். இவர்கள் கலை ஆராய்ச்சிகளில் பிரகாசிப்பார்கள். சாமர்த்தியசாலிகள். குழந்தைப் பருவத்திலேயே பிரசித்தி அடைந்து விடுவார்கள். எதையும் பகுத்து ஆராயும் திறனுடையவர்கள். கேது ஆதிக்கத்தில் மிகவும் சக்தி வாய்ந்த எண்16. செய்கின்ற தொழிலில் முதன்மை அடைவார்கள்.

#### 25ஆம் தேதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

தீவிரமான மதப்பற்று உடையவர்கள். தான் வழிபடும் மதம் தான் சிறந்தது, உயர்ந்தது என்றும், தன்னுடைய கொள்கை தான் சிறந்தது என்றும் பகிரங்கமாகவே பறைசாற்றுவார்கள். பலர் போற்றும் மனிதராக இருப்பார்கள். மற்றவரை அதிகாரம் செலுத்தி ஆளக்கூடியவர்கள். குடும்ப வாழ்க்கை பற்றற்றுக் காணப்படும். எந்தத் துறையிலும் சாதிக்கக் கூடியவர்கள். பிறர் போற்றும் பிரகாசமான வாழ்க்கை வாழ்வார்கள்.

### பெயர் எண்களின் பலன்கள்

#### பெயர் எண் 7

பெரும் சக்தியை உள்ளடக்கிய கேது ஆதிக்கம் பெற்ற எண். தெய்விக சக்திகள் குடிகொண்டுள்ள எண். தெய்வத்தின் அருள் கிட்டும். பெரிய குறிக்கோளுடனும் வாழ்வார்கள். உயர்ந்த லட்சியத்தையும், மேன்மையான எண்ணங்களையும் குறிக்கும். எதிர்பாராத மாறுதலை உருவாக்கும். குடும்ப சுகம் அறவே அற்றுப்போகும்.

#### பெயர் எண் 16

கேது ஆதிக்கப் பெயரெண்ணான இவ்வெண் உடையவர்கள் தெய்விக அருள் கிடைக்கப் பெறுவார்கள். நாளுக்கு நாள் முன்னேற்றம் கூடிக் கொண்டேயிருக்கும். மிக வேகமான முன்னேற்றம் உண்டாகும். முன் கோபமும், தடுமாற்றமும், ஏமாற்றமும், மோசடிகளும் இவ்வெண்ணில் கலந்து காணப்படும். வளர்ச்சியைக் கொடுத்தாலும் வாழ்க்கைப் பாதையை மாற்றிவிடும்.

#### பெயர் எண் 25

ஆரம்ப வாழ்க்கை படுபயங்கரமானதாக இருக்கும். சோதனைகளும், போராட்டங்களுமே வாழ்க்கை என்பது போல வாழ்ந்து விடுவார்கள். முடிவில் சிறிது வெற்றி கிடைக்கும். குடும்ப வாழ்க்கையிலும், தொழில் துறையிலும் போராட்டமே தொடரும். குடும்ப வாழ்க்கையில் வாழ்க்கைத் துணையைப் பல்வேறு காரணம் கூறி துன்புறுத்துவார்கள். மனித சக்திகளைவிட தெய்வ சக்தியையே முழுதும் நம்பக்கூடியவர்கள். இரவு பகல் பார்க்காமல் உழைப்பார்கள். முடிவில் உழைப்பு மட்டுமே மிஞ்சும்.

(தொடரும்)

---

# கட்டி எழுப்புவதா...? தட்டிக்கழிப்பதா...?

என் மனதை உருக்கிய காட்சிகளை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். இவர்களைக் கட்டி எழுப்புவதா தட்டிக் கழிப்பதா? அது உங்களைப் பொறுத்தது.

வறுமையின் கொடுமையில் சிக்கித் தவிக்கிற உறவுகளின் நிலை இது. உடல் அங்கங்களை வாழும் போது இழந்து சுயதொழிலுக்கு வகை தேடுகிறார்கள். பிறப்பிலே வலுவிழந்து தம் எதிர்காலத்துக்கு யாராவது சுயதொழிலுக்கு உதவுவார்களா எனச் சிந்தித்து காத்திருக்கின்றனர்.

வலுவிழந்தோர் இல்லங்களுக்கு கூரை வசதி, கட்டட வசதியின்றி இன்றி எவ்வாறு மழையுடன் போராடுவது என்று திகைத்து நிற்கின்றனர். ஒரு வேளையாவது நல்ல உணவு சாப்பிட மாட்டோமா என்று பட்டினியுடன் வாடுகின்றனர்.

நம் மக்களின் மனித நேயம் என்ன? அவர்கள் வசதி என்ன? யாழ் மக்கள் வசதியுடனா? வசதியற்றா வாழ்கிறார்கள் என்று ஒரு கேள்வி பலரிடம் இருக்கிறது. என்ன ஒரே உதவி தேவை என்று வருகிறதே என்று சிந்திப்பவர்கள் பலர். அப்படியென்றால் யாழ். மக்கள் வசதியற்றவர்களா என்று நினைப்பார்கள்.

இங்கு நடைபெறும் நிகழ்வுகளை பார்த்தால் அவ்வாறு இல்லை. அன்று ஒரு திருமண விழாவிலே 02 கிடாரம் சோறு சமைத்து அரைக் கிடாரம் சோறு மிஞ்சியது என்று அதனை கிடங்கு வெட்டி புதைக்கிறார்கள். அதன் விலை என்ன?

சோறு மிஞ்சிவிட்டது என்று எறிகிறார்கள். ஆனால் அதில் ஒரு பங்கு கூட வராது ஏழை ஒருவருடைய மதிய நேர சாப்பாடு. அதனை ஒரு நாளுக்கு வாங்கி கொடுக்க என்றால் அவர்களுக்கு மனம் இடம் தராது.

ஏழை ஒருவருக்கு உணவு கொடுக்க கசக்குது. வீட்டில் வயிறு நிறைய சாப்பிட்டு வந்தவருக்கு விதம்விதமான உபசாரம். வசதி படைத்தவருக்குப் பகட்டு காட்ட நினைக்கிறார்கள்.

வழியில் பசியுடன் இருப்பவரை திரும்பிப் பார்க்க மறுக்கிறார்கள். எங்கு செல்கிறது எம் மக்கள் மனிதாபிமானம்.

புதிய கடை திறப்பு விழா. விதவிதமான சிற்றுண்டி வந்தோரை வரவேற்க பலவித பானங்கள். வாசலிலே பசியுடன் கையேந்தி நிற்கிறார் பசியின் கொடுமையுடன் ஒரு முதியவர். இப்போ இல்லை அப்புறம் வா. விரட்டுகின்றனர் முதியவரை.

வரவேற்று உபசரித்தவர் பலகாரத்தை கடித்துவிட்டு வயிற்றில் இடம் இல்லை என்று பாதியைத் தூக்கி வீசுகிறார். வாசலிலே பசியுடன் நிற்பவருக்கு ஒரு பலகாரம் கொடுக்க அவர் மனம் இடம் தரவில்லை. எப்படி இருக்கிறது எம்மவர் மனச்சாட்சி.

ஆலயத்தில் திருவிழா எவ்வாறு செய்வது என்று அடுக்கடுக்காய் செலவு விவரம். எத்தனை கூட்டம் மேளம் என்று எல்லாம் பட்டியல் இட்டு பல லட்சம் செலவழித்து மேளக்கச்சேரி. இசைக் கச்சேரி இதில் எத்தனை வகை. கரைகின்ற காசின் அளவு தெரியாது. அதில் ஓர் இரு ஆயிரங்களை ஏழை சிறுவர்களுக்கு வலுவிழந்தோருக்கு கொடுக்க இடம் தராது அவர்கள் மனம்.


சுபா - மானிப்பாய்

எப்படி கட்டியெழுப்புவது எம் நாட்டை வறுமையின்றி.

ஏழையின் வயிறு பசியில் துடிக்கிறது. வசதியுள்ளோன் வாழ்வு இசையை பார்த்து ரசிக்கிறது. இது எல்லாம் புதிய பணம் செய்யும் வேலை என்று ஊர் இவர்களைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் வெட்டியும் தங்க ஊசியும்...



(கடந்தவாரத் தொடர்ச்சி)

இதுவும் சரிதான் என்று நினைத்தார் மரம்வெட்டி. இதனால் இனி மரங்களை வெட்ட வேண்டாம் செடி கொடிகளை வெட்டுவோம் என்று முடிவெடுத்து தூரத்திலிருந்த செடியை நோக்கிச் சென்றார்.

ஆனால் அது செடி இல்லை. ஒரு தாவரம் கொடியாகப் படர்ந்திருந்தது. அதுவும் முரட்டுத் தனமாக படர்ந்திருந்தது. அதை மகிழ்ச்சியுடன் பார்த்தார். அப்போது அந்தக் கொடி, இரவில் கள்வர்கள் வழிதவறி வரும்போது என்மீது பட்டு கால் இடறி விழுந்து விடுவார்கள். இதனால் அப்பாவிகள் காப்பாற்றப்படுகிறார்கள். நீங்கள் என்னை வெட்டிவிட்டால் அப்பாவி ஜனங்கள் கஷ்டப் படுவார்கள்.

ஆகவே என்னை வெட்டாமல் விட்டுவிடுங்கள். அவர்களும் நானும் வாழ்நாள் முழுவதும் உங்களுக்குக் கடமைப்பட்டவர்களாவோம் என்றது. இனிமேல் எதை வெட்டிக் கொண்டு வீட்டுக்குச் செல்வது என்ற யோசனையில் நடந்தார் அந்த நல்ல மனிதர். அப்போது ஒரு மரம் கண்ணில் பட்டது. எப்படி இருந்தாலும் சரி! இந்த மரத்தை வெட்டிவிடுவோம் என்று எண்ணிய படியே அதனருகில் சென்றார். அவரைப் பார்த்தவுடன் பைன் மரம், நான் ரொம்பச் சின்னப் பையன். இப்போது தான் வளர்ந்து

வருகிறேன். நான் வளர்ந்த பிறகு என்னைப் பார்த்தாலே எல்லோரும் சந்தோஷப்படுவார்கள். ஆகவே என்னை நீங்கள் வெட்டினால் மற்றவர்களுடைய மகிழ்ச்சியைக் கெடுத்த மனிதர் என்ற அவப்பெயர் உங்களுக்குக் கிடைக்கும். அதனால் தயவுசெய்து அந்தப் பாவத்தை நீங்கள் செய்யாதீர்கள் என்று கூறியது. இதைக் கேட்ட மரம்வெட்டி, நான் பேசுகிற மரங்களைப் பார்த்ததே இல்லை. மரங்களும், செடிகளும் சொல்வது சரிதான்!



இதனால் எல்லோரும் சந்தோஷமாக இருக்கலாம்.

ஆனால் என் மனைவிக்கு நான் என்ன பதில் சொல்வது என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டே நடந்தார். அப்போது தாடி வைத்த வயதான மனிதர் ஒருவர் எதிரில் வந்தார். அவர் மரம்வெட்டியைப் பார்த்துச் சிரித்தார். உடனே மரம்வெட்டி, அந்தக் காட்டில் தனக்கு நடந்தவற்றை அவரிடம் கூறினார்.

இதைக் கேட்டவுடன் அந்தத் தாத்தாவுக்குச் சிரிப்பு வந்தது. கவலைப்படாதே... நான் உனக்கு நல்லது செய்கிறேன். ஆனால் உனக்குப் பேராசை மட்டும் ஏற்படக்கூடாது, சரியா? என்று சொல்லியபடி, ஒரு தங்க ஊசியை எடுத்து மரம்வெட்டியிடம் கொடுத்தார்.

(தொடரும்)

# உடல் நலம் பேணுவோம்

உடலில் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?
சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு; நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே
காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!
கூழையே நீ குடித்தாலும்,
குளித்த பிறகு குடியப்பா!
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா!
அருமை உடலில் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே
வருமுன் நோயைக் காப்பாயே
வையம் புகழ வாழ்வாயே

ச.விபூஷன்
புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை.

# ஒட்டகச் சிவிங்கி

காட்டில் திரியும் ஒட்டகச் சிவிங்கி ஆபிரிக்காவில் வசிக்கிறது. ரோம அரசரான ஜீலியஸ் சீசர்தான் ஒட்டகச் சிவிங்கியை ஐரோப்பாவுக்கு கொண்டு வந்தார். ரோம் நகர சர்க்களுக்காக கொண்டுவரப்பட்டதாகும். கி.பி.5 ஆம் நூற்றாண்டில் ரோமப் பேரரசு வீழ்ந்த பின் அங்கு ஓர் ஒட்டகச் சிவிங்கி கூட கொண்டு செல்லப்படவில்லை. 1827 ஆம் ஆண்டில் எகிப்திய அரசரிடம் இருந்து இங்கிலாந்து நாட்டுக்கும் பிரான்சுக்கும் பரிசுப் பொருளாக ஒட்டகச் சிவிங்கி வழங்கப்பட்டது. அதற்கு பிறகே ஒட்டகச் சிவிங்கிகள் உலகமெங்கும் உள்ள மிருகக் காட்சிச்சாலையில் வளர்க்கப்பட்டன.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

# பிறர் நலம் பேண சேவை செய்வோம்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்'' என்பது வள்ளுவர் வாக்காகும். இதற்கமைய நாம் பிறர் நலம் பேண சேவை செய்ய வேண்டும்.

காவியங்களை எடுத்துக் கொண்டால், சிபிச்சக்கரவர்த்தி புறாவுக்காக தன் உடலையே அர்ப்பணித்தார். மனுநீதி கண்ட சோழன் பசுவுக்காக தன் மகனை தேரை ஏற்றிக் கொல்லுமாறு கட்டைளையிடுகிறார்.

குமண வள்ளல் சீத்தலைச் சாத்தனாரின் வறுமையைப் போக்குவதற்கு உதவி புரிகிறார். தாபிகள் பெருமான் மகனுக்காக பிணை நிற்கிறார். இவை எல்லாம் ஓர் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது.

அன்னை தெரேசாவை எடுத்துக் கொண்டால் அவர் தன்னை இளம்வயதிலிருந்தே துறவியாக்கிக் கொண்டு ஏழைச் சிறார்களை ஆதரித்தார். பிறரால் வெறுத்தெடுக்கப்பட்ட தொழு நோயாளர்களை ஆதரித்தார் அன்பைக்காட்டினார்.

அப்பாக் குட்டித் தங்கம்மாவை எடுத்துக் கொண்டால் அவர் சிறுவர்களுக்கு சிறுவர் இல்லங்களை அமைத்து ஏழைச் சிறார்களை ஆதரித்தார். காந்தியடிகளை எடுத்துக் கொண்டால் அவர் பாரத தேசத்துக்கு கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் செய்யாது அஹிம்சை வழியில் விடுதலை பெற்றுக் கொடுத்தார்.

நாம் அனைவரும் பிறர் நலம் பேண சேவை செய்தால் என் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளல் சாலச் சிறந்ததாகும்.

ஜெ.மதுசாங்கன்
யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரி.

# உலகில் மிகப் பெரியது

01.கண்டம்-ஆசியா
02.பாலை வனம்-சகாரா
03.தீவு-கிறீன்லாந்து
04.தேவாலயம்-சென்பீற்றர்ஸ்தேவாலயம்
05.சமுத்திரம்-பசுபிக் சமுத்திரம்
06.அரண்மனை-வத்திக்கான்
06.சிலை-சுகந்திரசிலை
07.நீர் வீழ்ச்சி-வெனிசுலா




கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் இ.வாகீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

# சிந்தனைத் துளிகள்

வணங்கத்தக்கவர்கள் - தாய், தந்தை
வந்தால் போகாதது - புகழ், பழி
போனால் வராதது - இளமை, முதுமை
நம்முடன் வருவது - பாவம், புண்ணியம்
அடக்க முடியாதது - பசி, தாகம்
பிரிக்க முடியாதது - பந்தம், பாசம்
அழிவை தருவது - பொறாமை, கோபம்
சமமானது - பிறப்பு, இறப்பு
வருவதும் போவதும் - இன்பமும், துன்பமும்
மிக நல்ல நாள் - இன்று
மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
மிக வேண்டாதது - வெறுப்பு

[illegible]
டிறிபேர்க்கல்லூரி சாவகச்சேரி.



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் கால்கோள் விழா அண்மையில் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தரம் ஒன்று வகுப்புக்கு புதிதாக இணைந்து கொண்ட மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் மாறிப் போச்சு; கலியுகம் வந்தாச்சு



எங்கும் பரபரப்பு: எல்லாமே அவசரம்.
எதுதான் அமைதியாய் நடக்குது பாரும்
மங்காப் புகழுடன் வாழ்ந்த பரம்பரை
மாற்றான் தம்மையும் மதித்த பரம்பரை
பொங்கும் வீரம் காதல் என்று
போற்றி வாழ்ந்த தமிழர் பரம்பரை
இங்கு இன்று வாழும் வாழ்க்கை
எல்லாம் மாறிப் போச்சு இப்போ

தெருவில் ஒழுங்காய் போவதோ தொல்லை
தேடி வந்து மோதிடும் நம்மை
அருமை யான உயிரைக் கையில்
ஆன மட்டும் பிடித்துக் கொண்டு
தருணம் பார்த்துச் சென்றால் கூட
தட்டி மோதிவிடும் வாகனம் தானே
எருமை மாடுபோல் கிடக்கும் வாகனம்
ஏறுக்கு மாறாய் கிடக்குது தெருவிலே

குழந்தை குஞ்சு எல்லாம் வாகனம்
குறுக்கும் மறுக்குமாய் ஓடித் திரியுது
வழக்கமான சட்டம் தெரிந்தும்
வருவது போவதில் ஒழுங்கு இல்லையே
பழையன கழிதலும் புதியன புகுதலும்
பாதை எங்கும் நடக்குது தானே
மழை வெள்ளத்தால் தெருக்கள் எல்லாம்
வடிவாய் குளம்போல் மூடிக் கிடக்குது

மினிப்பஸ் அரசபஸ் போட்டியாய் ஓடுது
மிகுந்த ஏக்கமாய் பயணிகள் இருக்கினம்
மனித உயிர்கள் மலிவாய்ப் போச்சு
மனிதனை மனிதன் மதிப்பதே இல்லை
தினமும் போட்டி பொறாமையாலே
திசையே மாறிப் போச்சுது நாடு
இனியும் இதுதான் என்றும் தொடருமோ
இதற்கொரு சட்டம் ஒழுங்கு இல்லையோ

ஒருவருக் கொருவர் நம்பிக்கை யில்லை
ஒவ்வொரு செயலும் எதேச்சையாய் நடக்குது
குருவைத் தந்தை தாயை மதியார்
குணமே இன்று எங்கே இருக்குது
அருமையான வாழ்வை இழக்குது
அன்னை சொல்லை மகன் கேட்பதில்லை
தெருவில் ஆணும் பெண்ணும் சோடியாய்
திசையே மாறித் திரியினம் பாரும்

புத்தி சொன்னால் கேட்பார் இல்லை
புதிய உலகம் போகிற போக்கு
எத்தி வாழும் கூட்டம் சேருது
எவரும் பெரியார் ஆனார் இன்று
சத்திய மாகப் புத்தி சொல்பவர்
சரியான முட்டாள் ஆகிறார் இன்று
உத்தமனாக நடிக்கிறார் இன்று
உலகை ஏய்க்கிறார் அதுதான் நடக்குது

கணவன் சொல்லை மனைவி கேட்பதோ
கண்போல் மனைவி சொல்லும் சொல்லை
கணவன் கேட்பதோ இன்று இல்லை
கண்மணியான பிள்ளைகள் சொல்லை
உணரும் ஒருவர் கூட இல்லை
உண்மையில் பிள்ளைகள் எப்படி நடக்கிறார்
எண்ணிப் பார்க்க இதயமே வெடிக்கும்
இதுதான் இன்றைய நாட்டின் நடப்பு

-கவிஞர் வ.யோ

# ஆடற்கலையின் ஆரம்ப வரலாறு

அ.உமாமகேஸ்வரி,
மானிப்பாய்.



மனிதனின் வாழ்க்கையின் ஆரம்பம் முதலே ஆடலும், இசையும் அவர்களோடு பின்னிப் பிணைந்திருந்தமையை மானிடவியல் ஆய்வாளர்களின் ஆராய்ச்சியின் மூலம் தெரிந்து கொள்கிறோம். சாதாரணமாக ஒரு குழந்தை பிறக்கின்ற போது, அந்தக் குழந்தை அழுகின்ற ஓசை இசையாகவும், அந்த அழுகையின் போது அசையும் உடலின் நிலை நடனமாகவும், அந்தக் குழந்தை உருவமே ஓவியமாகவும் ஆகிப் பெற்ற தாய்க்குக் குழந்தை முக்கலைகளின் அம்சமாகத் தெரிகிறது. இது போன்றே மனிதனுடைய பிறப்பிலிருந்து, இறப்பு வரை கலைகள் மனித வாழ்வோடு இணைந்திருப்பதைக் காணலாம். ஆதிகால மக்கள் இயற்கையின் சீற்றங்களைக் கண்டு பயந்தனர். அதனை வழிபட்டு அதன் கோபத்தைக் குறைக்க எண்ணினர். சாதாரண

காலத்தில் உள்ள சூழல் நிலை
களை அவதானித்து அதன்ப
செய்யத் தொடங்கினர். வே
டைக்கு செல்லமுன் குறி
பிட்ட விலங்கு போன்
உருவை வரைந்
அதற்கு அம்பை விட்டு
கொன்றனர். பின்னர் நட
பதை முன்னரே செய்தன
வேளாண்மை குறைவடைந்
காலத்தில் நிறைந்த வேளாண்
உள்ள காலத்தில் நிகழ்ந்த சூழலிய
செயற்பாடுகளை செய்து வந்தன
இவை 'போலச் செய்தல்
'மீளச்செய்தல்' என்
கூறப் படுகிறது
நன்மையா
விடயங்களை செ
வதன் மூலம் தீமை
யான விடயங்கள
அகற்ற முடியும் என்
''நம்பிக்கை'' ''போல
செய்தல்'' என்
செயற்பாட்டினை உ
வாக்கியது. இதன் சடங்
களும் வழிபாடுகளும் தோற்ற
பெற்றன. இத்தகைய சடங்குகள்
வழிபாடுகளின் போது பாடல்களு
அவற்றோடிணைந்த ஆடல்களும் உருப்பெற்றன. இதனையே
நாட்டியக் கலையின் லௌகீக வரலாறு கூறுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் பரிபாஷைகளோ, வ
வடிவங்களோ இல்லாத நிலையில், தமது கருத்துப் பரிமாற்
ஊடகங்களாக கண், கை, தலை, கால் என்பவற்றையே பய
படுத்தினர். இத்தகைய கருத்துப் பரிமாற்றங்களில் மகிழ்ச்
யான சந்தர்ப்பங்களில் அவை சற்று அதிகமா
பயன்படுத்தப்பட்டன. அதாவது தமது வெற்றியையோ
மகிழ்ச்சியையோ வெளிப்படுத்தத் துள்ளிக் குதித்தும்
கூக்குரலிட்டும் வெளிப்படுத்தினர். எதுவித வரையறைகளு
கும் உட்படாத இந்தக் குதித்தாடும் கூத்து அவர்களின்
கற்பனைக்கும், கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்கி ஒ
சத்தத்தோடு வழிநடத்தப்பட்டு ஆடலும், இசையும் தோற்ற
பெற்றன. இதுவே மானிடவியலாளர்களின் ஆராய்ச்சிகள்
கூறும் ஆடல், இசை பற்றிய ஆரம்பநிலை என்றும் கூறலாம்
இவ்வாறாகத் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்ற ஆடல், இசை
என்பன வரலாற்றுக் காலத்தின் முன்னும், பின்னும் எத்தகைய
நிலைப் பாட்டில் இருந்தன என்பதற்கான சான்றுக ள்ளன

(தொடரும்)

# பயனற்ற படிப்பு

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இடம்பெறுவதற்காக இளைஞர்கள் அலையும் அலைச்சலைப் பார்க்கும் போது பரிதாபமாக இருக்கிறது.

அதைவிடப் பெற்றோர் துடிக்கும் துடிப்பு காணச் சகிக்க முடியாத கொடுமையாக இருக்கிறது.

படிப்புக்கே இந்த அலைச்சல்; படித்துப் பட்டமும் பெற்று விட்டால் வேலை தேடி இதைவிடக் கேவலமான அலைச்சல்! இதற்குப் பரிகாரம் தேட எந்த அரசும் முன்வந்ததாகத் தெரியவில்லை. பெருகி வரும் சனத்தொகையில் இன்றையப் படிப்பு எதற்கு உதவப்போகிறது?

இதற்கு ஏன் இவ்வளவு அடி தடி?

கலைக் கல்லூரிப் படிப்பு கால் காசுக்கும் உதவுவதில்லை.

அந்தக் கல்லூரிகள் லிகிதர்களைத் தான் உற்பத்தி செய்கின்றன – அதுவும் வேலைக்கு அலையும் லிகிதர்களை!

மருத்துவம், பொறியியல் இரண்டுக்கும் ஏதோ கொஞ்சம் மகத்துவம் இருந்து வருகிறது. இங்கில்லாவிட்டாலும் வேறு எங்காவது போய் பிழைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் தான் அந்த மகத்துவம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

அவற்றிலும் ஆண்டுக்கு ஆண்டு திண்டாட்டக்காரர்களே பெருகி வருகிறார்கள்.

இந்த நிலைக்குத் தீர்வுகாண ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் கூறுவது போல் கல்வி முறையை மாற்றியமைத்தாலொழியப் பயன் இல்லை.

முதலில் கலைக் கல்லூரிகளிலுள்ள பி.ஏ., எம்.ஏ., பட்டப் படிப்புகள் அனைத்தையும் ரத்து செய்துவிட வேண்டும். அதற்குப் பதிலாக வாழ வழி காட்டும் கல்விக்கு வழி செய்ய வேண்டும். உதாரணத்துக்கு பி.யு.சி. படித்து முடித்த பிறகு, அதே கல்லூரிகளில் மூன்றாண்டு மருத்துவப் படிப்பு ஒன்றைத் தொடங்க வேண்டும். மருத்துவப் படிப்பு என்றால், கூட ஒரு மருத்துவமனையும் வேண்டும் என்பது உண்மை தான். ஆனால், நான் சொல் வது முன்பிருந்த 'எல்.ஐ.எம்' அல்லது 'எல்.எம்.பி. போன்ற மருத்துவப் படிப்பு. (வளரும்)




[நன்றி: கண்ணதாசனின் கடைசிப்பக்கம்]

■ – ம

எம்முடன் யாத்திரையி
வைத்திய நிபுணர் பவான
தெரிகிறதே அது தான் 
என எம்க்குக் கூறி சிர
வணக்கினார். நாமும் 
வழிபட்டோம். அந்த 
ணின் தரிசனம் எமக்கு 
காட்சி தந்தது போன்
எண்ணத்தையும் எமது 
யது. நாம் இக்காட்சியை
யில் பார்த்ததினால் மிக
புனிதத்தன்மை கொண்
அருட்காட்சி கிடைத்த
கண்ணீர் சொரிந்து கி
கிடைத்ததையிட்டு அ
வியந்தோம்.

நாராயண பகவா
பிரார்த்தித்து மாலை ஸ்ரீ
புறபட்டோம். வழியில்
என்ற ஊரில் கோயில்
ஆஞ்சநேயரை வணங்கி
இங்குள்ள ஆஞ்சநேயர் 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்நான முறைமைகள்

அருணா தருமலிங்கம்,
வந்தாறுமூலை.

சூரியனின் நேரடிக் கதிர்வீச்சிற்குள்ளாகும் நாடுகளின் பட்டியலில் இந்து சமுத்திரத்தின் முத்தென அழைக் கப்படுகின்ற இலங்கைத் தீவும் அடங்குகின்றது.

இங்கு வாழும் மக்களின் ஸ்நானம் செய்வதென்பது அன்றாடக் கடமைகளிலொன்றெனவும் கொள்ளலாம்.

நம் நாட்டில் ஆறுகள் இல்லாத பிரதேசங்களில் அதன் மகவுகளான குளம், குட்டை, கேணி, ஏரி, தடாகம், சோலை, பொய்கை என்பவை பரிணமித்துள்ளன. அனேகமானோர் குளிர்மையைப் பெறுவதற்கு இந்த நீர் நிலைகளிலேதான் குளியலை மேற்கொண்டு வருகின்றனர் என்பது கண்கூடு.

மேற்குறிப்பிட்ட நீர் நிலைகள் ஓரளவு குன்றிய யாழ்-குடா நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் நிலத்தடி நீரை கிணறுகளின் வாயிலாகப் பெற்றுக்கொள்கின்றனர். குளியல் மேற்கொள்வதற்குக் கூட கிணறே கைகொடுத்து உதவுகின்றது எனலாம். யாழ்.மாவட்டத்தில் கிணறு இல்லாத வீடுகளே கிடையாது என்றும் கூறலாம். சில வீடுகளில் பங்குக் கிணற்றையாவது காணலாம். யாழ் குடாவிலுள்ள அனைத்துக் கிணறுகளினதும் அமைப்பானது பாதுகாப்பு அற்றதாகவே காணப்படுகின்றன. இதில் குளிப்பவர்கள் தவறுதலாகக் கிணற்றுக்குள் வீழ்ந்து மரணிப்பதுமுண்டு. வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ் பவர்களுக்கே இந்த விபரீதம் ஏற்படுகின்றது எனலாம்.

இனி உலகின் ஏனைய நாடுகளில் மேற்கொள்ளப் படுகின்ற ஸ்நான முறைகள் சிலவற்றைப் பற்றி விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும். பனிப்பிரதேசமான பொப்லாந்து நாட்டு பழங்குடியினர் மேற்கொள்ளும் குளியலை ''டொப்ஸ் பெஸ்ட்'' என்று அழைப்பார்கள். ஆண்டுக்கொருமுறையே இக்குளியல் வெகுவிமர்சையாக நடைபெறும். பொதுவாக ஜனவரி மாதத்தில் அங்கே பனி படிந்து இறுகியிருக்கும். பனிக்கட்டிப் படலத்தில் துளையொன்றைப் போடுவார்கள். ஆண், பெண் இருபாலாரும் அத்துளை யினுள் தோன்றவுள்ள தண்ணீரில் முழுகுவதற்கு வரிசை யாகக் காத்திருப்பார்கள். எல்லோரும் ஸ்நானம் மேற் கொண்டபின் அடுத்த ஆண்டு வரை இந்தத் தொல்லையே இல்லை என்ற நிம்மதியுடன் சூடான ஒரு காப்பி குடிப்பதற்கு வீடு நோக்கி விரைந்து செல்வார்கள்.

புராதன காலத்து ரஷ்யாவில் குளியல் நடைபெற்றது எப்படி என்பதைச் சற்று நோக்குவோம். கடும் குளிர்காலம் ஆரம்பமாகவுள்ள வேளையில் நீவா நதியைப் போர்த்துள்ள பனி துளையிடப்படும். அங்கே தென்படும் நீரை அரச நிர்வாகி மீது ஒரு சில துளிகளைச் சம்பிரதாய முறைப்படி தெளிப்பார்கள். அதன்பின் நடைபெறும் குளியல் அதி பயங்கரமான தொன்றாகும். பிறந்து ஒரு வாரம் கூட ஆகாத சிசுக்களை துவாரத்தினூடாக உள் நுழைத்துக் குளிப்பாட்டுவார்கள். இந்த அசாதாரண குளிப்பினால் அந்தக் குழந்தைகள் உயிருடன் மீளுவதென்பது சந்தேகம்தான். அதையும் மீறி சிசு பிழைத்துக் கொண்டால் அதற்கு ஆயுள் கெட்டி என்று கருதப்பட்டு அங்கு பெருவிழா நடைபெறும்.

இவ்வாறு முரட்டுத்தனமான குளியலை அரச நிர் வாகம் அனுமதித்தது ஏன்? என்பது புரியாத புதிராகவே உள்ளது.

உக்ரைன் நாட்டில் தொழில்நுட்ப யுக்தியைப் பயன் படுத்தி ஆட்டுக் கம்பளிகளைப் போர்த்தி தயாரிக்கப்பட்ட சிறு கூடாரங்களில் ஆவிக் குளியல் நடைபெறுவது முண்டு.

குடிலுக்குள் உலோகத்திலான தட்டு ஒன்றில் செந்தணல் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். ஆவிக்குளி யலுக்கு உட்ப்டுத்தப்படுபவர் உள் நுளைந்ததும் வாசனை மரங்களிலிருந்து பெறப்பட்ட பட்டைகளை அதன் மீது இடுவார்கள். பட்டைக்குப் பதிலாக மரத்தூளையும் போடுவார்கள். கமகம! என்று எழும் ஆவியில் குளியல் வெற்றிகரமாக நடைபெறும்.

மெக்ஸிக்கோ, அயர்லாந்து நாடுகளின் பழங்குடி யினர் நீராவிக் குளியல் மேற்கொள்ளுவதுமுண்டு. இதற்கு செங்கற்களினால் அமைக்கப்பட்ட சூளை பயன்படுத்தப்பட்டதாம். கிரேக்க நாட்டுப் பிரபுக்களை மரத்தொட்டியில் அமர்த்தி குளிர்ந்த நீரால் குளிப் பாட்டுவதற்கென்று விசேட பயிற்சிபெற்ற பணிப் பெண்கள் அரண்மனைகளில் எப்போதும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பார்கள். எகிப்தியர்கள் காலத்தில் குளியல் என்பது மிகவும் முக்கியமான சடங்காக ஏற்றுக்கொள் ளப்பட்டது.

*(வளரும்)*

## பற்று

-பாஷோவின் கரும்பலகை-

பாஷோ செருப்புக்கடை ஒன்றுக் குச் சென்றிருந்தார்.

அங்கே இரண்டு இளைஞர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

ஒருவன் வாடிக்கையாளர்களிடம் மிக அன்போடு நடந்து கொண்டி ருந்தான்.

ஒருவன் வாடிக்கையாளர்களிடம் அலட்சியமாக நடந்து கொண்டான்.

பாஷோ கடை முதலாளியிடம் விசாரித்தார் ''இருவரும் எப்படி வேலை செய்கிறார்கள்?''

''இருவரும் ஒரே அளவு படித்த வர்கள். இருவருக்கும் ஒரே அளவு சம்பளம். ஆனாலும் ஒருவன் ஒழுங்காக இருக்கிறான். ஒருவன் ஒழுங்காக இல்லை. எனது வாடிக்கை யாளர்களைக் குறைத்து விடுவானோ என்கிற பயத்தில் அவனுக்கு ஏதாவது தீங்கு செய்யலாம் என மனம் யோசிக்கிறது. வேறு ஆள் கிடைத் தால் அவனை இந்த வேலையி லிருந்து துரத்தி விடுவேன். இந்தக் கடை எனக்குச் சோறு போடுகிற இடமாயிற்றே.''

பாஷோ அறைக்கு வந்து தனது கரும்பலகையில் எழுதினார்.

சந்தோஷமாக இருப்பது வேலையைப் பொறுத்து அல்ல. அந்த வேலையை எடுத்துக் கொள்ளும் விதத்தில்.

பிடிக்காத வேலையைச் செய்யும் போது தேவையில்லாத எதிரிகளை உருவாக்கிக் கொள்கிறீர்கள்.

பிடித்த வேலை கிடைக்கும் வரை, பிடிக்காத வேலையைப் பிடித்த மாதிரி செய்யுங்கள்.



# அவனருள் இன்றி அவனடி தாழ்தல் அரிது

வாய்ந்தவர் என்று கூறினார்கள். ஸ்ரீஇரா மரின் பட்டாபிஷேகம் பூர்த்தியடைந்த பின்னர் அனுமான் இங்கு வந்து வசிக்கத் தொடங்கினராம். அப்பொழுது அவருக்கும் பாண்டவர்களுள் ஒருவரான வீமனுக்கு மிடையே சந்திப்பு ஒன்று இடம் பெற்றதாக வும் அதுபற்றி வழிகாட்டி, எமக்கு விவரமாகக் கூறினார்.

பாண்டவர்கள் தங்களுடைய வன வாசத்தை இப்பகுதியில் கழித்துக் கொண்டி ருந்தபோது ஒரு நாள் திரௌபதை தனக்கு செண்பகமலர் கொண்டு வந்து தரும்படி வீம னிடம் கேட்டாராம். வீம னும் அதற்குச் சம்ம தித்து கொடிய கானகத் தினூடாகச் சென்ற பொழுது வழியில் வயது முதிர்ந்த குரங்கு ஒன்று பாதையின் குறுக்கே படுத்திருந்ததாம். ''கிழட்டுக் குரங்கே நான் வருவது தெரியவில்லையா? பாதையை விட்டு ஓடு'' என்று வீமன் அதட்டினானாம். குரங்கு அதற்கு செவிசாய்க்கவில்லை. ''நீ ஏன் இங்கே வந்தாய். இந்தப் பாதையால் போவது உனக்கு நல்லது அல்ல. பசித்தால் இந்தப் பழங்களைச் சாப்பிட்டுவிட்டு திரும்பிப் போ'' என்று கூறியது. வீமனுக்கு 'சுர்' என்று கடுங்கோபம் ஏற்பட்டது. ''குரங்கே நீ எனக்கா வாலாட்டுகிறாய். நான் வாயு குமாரன் என்பது உனக்குத் தெரியுமா? எனக்கு எங்கு போவதற்கும் உரிமையும் வல்லமையும் உண்டு. உன்னைக் காட்டுக் குள் தூக்கி எறியவா?'' என்று வீமன் கேட் டாரம். உடனே குரங்கு ''என்னால் அசைய முடியாமல் இருக் கிறது. என்னை அந் தப் பக்கத்தில் தூக்கிக் கிடத்திப் விட்டு நீ உன் பாதையால் போ'' என்றது. வீமன் குரங் கின் வாலைத் தூக்க முயன்றான். அது முடியவில்லை. உடனே குரங்கு சிரித்தது. வீமன் வெட்கப்பட்டு சிரம் தாழ்த்தி ''நீ யார்?'' என்று கேட்டான். உடனே குரங்கு எழுந்து வீமனைத் தழுவிக் கொண்டது. ''நான் உன் சகோதரன் ஆஞ்சநேயன் என்று கூறி, இந்தப் பாதை ஆபத்தானது என்பதை உனக்குத் தெரியப்படுத்தவே குறுக்கே படுத்திருந்தேன். உனக்குத் தேவையான செண்பகமலர் அந்த ஆற்றங்கரையில் இருக்கின்றது. தேவையானவற்றை எடுத் துக் கொண்டு போ'' என்று கூறியது. இத னால் மிகவும் சந்தோஷம் அடைந்த வீமன் ஆஞ்சநேயரின் கால்களில் வீழ்ந்து வணங்கி, அவருடைய விசுவரூபத்தையும் தரிசித்து வணங்கினாம்.




அத்தகைய சிறப்புப் பெற்ற இடத்தி லுள்ள ஆஞ்சநேயரையே நாமும் தரிசித்து வணங்கி, வழியில் பாகேஸ்வரத்தில் பாகேஸ்வரரையும் தரிசித்து அலகநந்தா வுடன் பாகீரதிசங்கம மாகும் தேவப்பிரயாகை, மந்தாகினி சங்கமாகும் ருத்ரப் பிரயாகை, அல கநுந்தாவுடன் பிண்டர் நதி சங்கமமாகும் கர்ணப் பிரயாகை, நந்தாஜினி சங்கமமாகும் நந்தப்பிர யாகை, மற்றும் கருடகங்கா சங்கமாகும் விஷ் ணுப் பிரயாகை ஆகியவற்றையும் தரிசித்துக் கொண்டு ஹரித்துவார் வந்து அங்கிருந்து மதுரா நோக்கிப் புறப்பட்டோம்.

*[யாத்திரை தொடரும்]*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல்: "இளந்தளிர்"

அமரர்கள் க.கந்தையா, திருமதி க.கனகம்மா ஆகியோரின் நினைவாக ''கற்பதால் உயர்வோம் காலத்தை வெல்வோம்'' என்ற தொனிப் பொருளில் பல விடயங்களை உள்ளடக்கி இளந்தளிர் புத்தகம் வெளிவந்திருக்கிறது. ஒன்று தொடக்கம் 64 பக்கங்களும் வாசிப்புப் பழக்கத்தையும், எழுத்தாற்றல் பழக்கத்தையும் மாணவர்களிடையே தூண்டும் விதத்தில் மாணவர்களது ஆக்கங்களை உள்ளடக்கி இளந்தளிர் வெளிவந்திருக்கிறது. யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சே.சிவசண்முகராஜாவின் ''ஆலய வழிபாடு சிறுவர் களுக்குச் சில கருத்துக்கள்'' என்ற தலைப்பில் ஆலய சூழலையும், வழிபாடு முறையையும் விளக்கியுள்ளார். மகான் எழுதிய ''வாசிப்போம் வாருங்கள்'' என்ற தலைப்பில் வாசிப்பு பழக்கத்தை விவரணம் செய் கிறார், செல்வி லதா கோபாலசிங்கம் ''கற்பக தரு இயற்கையின் அருங்கொடை'' என்ற தலைப்பில் பனை மரத்தின் பயனைக் குறிப்பிடுகிறார். யாழ். பல்கலைக்கழக கைதடி 3 ஆம் வருட சித்த மருத்து வத்துறை மாணவன் சு.ரகுசாந் எழுதிய ''சித்த மருத்து வமும் இந்து சமயமும்'' என்ற கட்டுரையில் ஆலய மூலிகை மருந்துகளைப் பற்றி கணிப்பிடுகிறார். நாவற் குழி மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி பிரியதர்ஷினி அங்கயன் எழுதிய ''சமூக செயற்பாடுகளும் மனித செயற்பாடுகளும்'' என்ற தலைப்பில் சமூக அமைப்பில் சிறப்பைத் தீர்மா னிக்கும் குடும்பங் களின் பங்களிப்பை விளக்குகிறார். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் வன்னிய சிங்கம் கபிலன் ''மனித வாழ்வில் சமயம்'' என்ற தலைப் பில் ஆன்மீக விடு தலை எல்லாமே நாம் கடைப்பிடிக்கின்ற விழுமியங்களில் தங்கி இருக்கிறது என்று விவரிக்கிறார். தொடர்ந்து மாணவ, மாணவிகளின் கட்டுரைகளும், கவிதை களும், இவர்களின் நினைவாக மாணவர்களிடையே நடத்திய போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விவரத்துடனும் வெளிவந் திருக்கிறது. மேலும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி திருமதி தயாமதி கேரோசா எழுதிய ''ஓய்வூதிய அதிகாரியும் ஓய்வு பெற்ற ஆசிரியரும்'' என்ற தலைப்பில் அவர்களது நிதர்சனம் வெளியிடப் பட்டுள்ளது.





- குமார்.

## நூல்: எண்ணங்களும் வண்ணங்களும்

பல்சுவைக் கதம்பமாகப் பலர் மனதையும் ஈர்க்கும் மொழிநடையில் எழுதப்பட்ட எண்ணங்களும் வண் ணங்களும் என்றதோர் அருமையான நூல் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு அவர்களால் எழுதி வெளி யிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைகள் என்ற தலைப்பிட்டு பிரச்சினையை விளக்கி அது சார்ந்த அறிஞர்களின் எண்ணங்களையும் அரசியலில் பிரகாசித்த அரயசில் வாதிகளுடன் கல்வியியலா ளர்கள், தலைவர்கள் எழுத்தாளர்களின் கருத்துக் களையும் ஆய்வு ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் பயன் தரும் கட்டுரைகளாக்கி வாசகர்களை நூலின் உள்ளே கருத்தூன்ற வைத்துள்ளார். வரலாற்றுப் பதிவுகள் நிறைவான உண்மைகளை வெளிப்படுத் துகின்றன. தமிழரில் பாரம்பரியக் கலைகள் குறித்த சிந்தனைக்குள் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், காவியம், ஆதியாம் அழகியல் எண்ணங்களும் வண்ணங்களும் நூலுக்கு அழகு சேர்ப்பதோடு வாசகனின் மனதிற்கு மகிழ்வைத் தருகின்றன. கல்வியல் நோக்கில் ஆக்க விலக்கியமும் இந்து சமயமும் எனும் தலைப்பிட்ட கட்டுரையில் இந்து சமய ஒழுக்கங்களையும் விளக்கி அது தருகின்ற சிந்தனைகளுக்கு ஆதாரமான மொழி ஆக்கங்களுக்கும் முன்னுரிமை தந்துள்ளார். கல்விசார் பாடசாலைக் கலைத் திட்டங்களையும் கல்விச் சீர்திருத்தங்களையும் விளக்கிக் கூறியுள்ளதோடு விழுமியக் கல்வி பற்றிய அவரது கட்டுரையொன்றும் இடம்பெற்றுள்ளது. இரசனையுணர்வும் கவிதை இன்பமும் தமிழ்மொழி கற்றலும் கற்பித்தலும் ஆகியவை கல்விச் சமூகத்தின் தேவை நோக்குடன் எழுதப்பட்டு ஆசிரிய சமூகத்துக்கு வழிகாட்டுகின்றன.

சைவம் ஈழத்தில் விருத்தியுற்றுள்ளமையும் போரினாலும் வேறுபல காரணங்களாலும் சிதை வுற்ற நிலையில் அதன் வாழ் தல் பற்றியும் விபரித்துள் ளார். இவை தவிர ஆருத் திரா தரிசனம், ஐயனார் வழி பாடு விநாயகர், புத்தாண்டு அனுபவம் சினிமா திரைப் படக் கவிதைகள் எனவும் கட்டுரைகளாகப் பல விட யங்கள் நூலில் உள்ளடக் கப்பட்டுள்ளன. அவை நல்ல பல செய்திகளை வாசகனுக்குத் தருகின்றன. எழுத்துத்துறையில் ஈடுபாடு கொண்ட இலங்கையர்கோன், ஈழகேசரி பொன்னையா, டாக்டர் நந்தி, கலாநிதி சொக்கன், கவிஞர் தில்லைச்சிவன், கே.டானியல் போன்றோரின் நினைவுகளைத் தூண்டும் வகையில் தேர்ந்த கட்டுரை களும் கலைஞர்களான பெரியதம்பி சுப்பிரமணியம் பற்றியும் அவரின் சினிமாப்படக் 'கட்அவுட்'களால் ஆர்ட்டிஸ்ற் மணியம் எனப் புகழ் பெற்ற வரலாறும் பண்டிதர் சு.வேலுப்பிள்ளை, உடுமலை எனும் கவி மலை, உவமைக் கவிஞர் சுரதா, குன்னக்குடி வைத்திய நாதன், கானக்குயில் ஜிக்கி, மதுரக்குரல் பி.லீலா, கவிஞர் மு.செல்லையா ஆகியோரும் பண்டிதர் க.சச்சி தானந்தன் உள்ளிட்ட புகழ்பெற்ற திறன்வாய்ந்த கலைஞர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் குறித்து வரையப்பட்ட வாழ்க்கைச் சிறப்புக்களைக் கொண்ட ஆக்கங்கள் நூலை வண்ணமுறச் செய்கின்றன. எண்ணங்களுக்குச் செழுமையான வண்ணங்களைத் தரும் வகை தேர்ந்த கட்டுரைகளால் நூல் தரம் விரிந்து ஒளிர்கிறது எனலாம்.




- மகேஷ்.

## நூல்: "நங்கூரம்"

1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் 5 ஆம் திகதி முதலா வது நங்கூரம் இதழ் வெளியானதில் இருந்து 36 ஆவது இதழ் 1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5 ஆம் திகதி வெளியானது வரை மாதம் தப்பாமல் நங்கூரம் சமூக அறிவியல் ஏடு வெளிவந்தது. 1995 ஆம் ஆண்டின் பின் காற்கூறில் ஏற்பட்ட போர் இடப்பெயர்வில் நங்கூரம் வெளிவருவது தடைப்பட்டது. மீண்டும் புதுப்பொலி வுடன் 2012 இல் பெப்ரவரி 5 ஆம் திகதி வெளிவந் திருக்கிறது. தொப்புள் கொடி எதிர்கால மருத்துவத்தின் திறவுகோல் என்று குழந்தை பிரசவ அட்டைப் படத் துடனும், ஈர நிலங்கள் மீது ஈரம் காட்டுங்கள் பின் பக்க அட்டைப் படத்துடன் சிறப்பாக காணப்படுகிறது. உள்பக்கங்களைப் பார்ப்போம். புதிய கண்டு பிடிப்புகள் தொடங்கி மகேசன் கஜேந்திரனின் ''காதருகே கதிர் வீச்சு'', யோ.அன்ரனி யூட்டின் ''வாழ்வின் அர்த்தம்'', வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தாவின் ''மூலக் கலங் கள் எதிர்கால மருத்துவத்தின் திறவு கோல்'', த. வினோ ஜித்தின் ''பண்டாரவன்னியன் போரில் கொல்லப்பட வில்லை'', தாட்சாயணியின் ''அப்பாவின் ஆராய்ச்சிக் கூடம்'' சிறுகதையும், நடுப்பக்கத்தில் ''நாற்று'', தக வல் களஞ்சியம் பலதும் பத்தும், கலாநிதி ஏ.எஸ். சூசையுடனான நேர்காணல், பொ.ஐங்கரநேசனின் ''தெரியுமா? கேள்விகளினூடாக ஓர் அறிவியற் பயணம்'', செ.கிருஷ்ணராசாவின் ''கடன் நிமிர்த்திய யாழ்ப்பாணம்'', இனி அரிசியிலும் மிருதுமா, ம.சிவ குமாரனின் ''வெற் றிலை வெறும் இலை அல்ல'', தமிழ் நதியின் ''அதிசய மலர்'', கவி தையுடன் நங்கூரம் வெளிவந்திருக்கிறது. விஞ்ஞான அறிவை யும், சமூகவள பாது காப்பையும் மையப் படுத்தி நங்கூரம் இதழ் வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது. இயற்கையில் மரங் களை வளப்படுத்தி னால் மனிதன் வளமா வான் என்ற சிந்தனையை ஊட்டி நிற்கிறது. குறிப் பாகப் போருக்குப் பின்னர் ஈழத்தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அநாதரவு உளநிலையும், சமூக விழுமியங்களிலும் இளைய தலைமுறையின் பண்புகளிலும் ஏற்பட்டு வரும் திடீர் மாற்றங்களும் இயற்கைச் சூழல் மீதான தொடர் ஆக்கிரமிப்புகளும் வளமான எதிர்காலம் பற்றியதான கேள்விகளைத் தவிர்க்க முடியாமல் எழுப்பியுள்ளது. மீண்டும் புதிதாய் பிறந்திருக்கும் நங்கூரம் இக் காலப் பகுதியை மிகவும் பொறுப்போடு எதிர்கொள்ளும் என்பது உண்மை.




-. செல்வா




யாழ்.மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்தால் கடந்த வருடம் சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத் தெரிவு செய்யப்பட்ட மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்துக்கு வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் வழங்கிய விருதை யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரிடமிருந்து சங்கத் தலைவர் கே.தங்கராஜா பெற்றுக் கொள்கிறார்.

(ம-8)

## கல்விப் பணியிலே நிலைத்திருந்த தியாகராசா சிவபாலன்



வரலாற்றுச் சிறப்பும், ஆன்மீகச் சிறப்பும், அன்னை நாகபூஷணியின் அருட் சிறப்பும் பெற்று விளங்குவது நயினாதீவு. கடுகு சிறிய தெனினும் காரம் பெரியதென்ற முதுமொழிக்கிணங்க தொல் புகழால் தலை சிறந்த தீவாக விளங்குவதும் இத்தீவாகும்.

இத்தீவகத்திலே மூன்று கல்விக் கூடங்கள் கல்விப் பணியாற்றி வருகின்றன. இவை தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளாகும். அவற்றுள் ஒன்று தான் நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம். சகல துறைகளிலும் சிறந்து விளங்கும் இந்தப் பாடசாலையின் புகழ்பூத்த அதிபராக சிறப்புடன் கடமையாற்றி வந்த அதிபர் தியாகராசா சிவபாலன் 02.01.2012 அன்று ஓய்வு பெற்றார். 2009 முதல் 2012 வரையான காலப் பகுதியில் இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் தன்னாலியன்ற பங்களிப்பைச் செய்து மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் தனக் கெனத் தனியானதொரு இடத்தை ஏற்படுத்திக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.




இந்தப் பாடசாலை யின் முன்னாள் அதி பராகக் கடமையாற் றிய அமரர் தம்மையா தியாகராசாவின் சிரேஷ்ட புதல்வனாக 1952 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்ப கல்வியை நயினாதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தில் பயின்று உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்ததுடன் இரத்தினபுரி அரசினர் தமிழ்க் கலவன் பாட சாலையில் 1979 ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில் முதல் நியம னத்தைப் பெற்றுக் கொண்டார். இரண்டு வருட காலம் ஆசிரியராகக் கடமையாற்றிய பின் 1981 முதல் 1982 வரையும் கஹாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடமையாற்றினார். பின்னர் ஆசிரிய பயிற்சிக்காக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையால் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்து பயிற்றப்பட்ட கணித ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

தொடர்ந்து 1984 முதல் 1989 வரையும் புதுக்குடியிருப்பு மகாவித்தி யாலயத்தில் பணியை மேற்கொண்டார். பின்னர் அங்கிருந்து நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் கணித ஆசிரியராகப் பொறுப்பேற்றார். 1989 முதல் 1992 வரை மூன்று ஆண்டு கள் சேவை செய்தார். இக்காலப் பகுதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதப் பாடத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேறு களைப் பெற்றுக் கொண்டார்கள்.

அதிபர் தரம் 2 -1 இல் உள்வாங்கப்பட்ட இவர் 1992 முதல் 2007 வரையான பதினைந்து வருடங்கள் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி, கல்விப் பணியாற்றி, அந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து நன்மதிப்புக்களையும் பெற்றுக் கொண்டார்.

இவரது கல்விப் பணியைக் கருத்தில் கொண்ட கல்வித் திணைக் களம் இவரை நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகாவித்தியாலயத்தின் அதிபராக 03.05.2007 இல் நியமனம் செய்தது. அன்றிலிருந்து ஓய்வு பெறும்வரை [02.01.2012] அதிபராகக் கடமையாற்றினார். கல்விப் பணியே கடவு பணியாக, தந்தை வழியில் தனையனாகச் சிறப்புற்று ஆசிரியராக, அதிபராக 32 வருடங்கள் கல்விப் பணியாற்றிய தியாகராசா சிவபாலன் ஓய்வு பெற்றிருந்தாலும் அவரது எண்ணம், சிந்தனைகள் எல்லாம் கல்விப் பணியிலே நிலைத்திருக்கும். அவரது ஓய்வுக் காலம் சிறப்புடன் அமைய அன்னை நாகபூஷணியைப் பிரார்த்திப்போம்.

நயினை நா.க.குமாரசூரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசைக்கேற்ற பூ எது?

"ஐயா இருக்கிறாரா?"

ஐயா பூசையில் இருக்கிறார். அவர் பூசையில் உட்கார்ந்தால் இரண்டு மணி நேரமாவது ஆகும்"-இப்படிப்பட்ட புகழ்ச்சிகளைப் பலமுறை நீங்கள் கேட்டிருக்க வாய்ப்புண்டு. பூசை என்றால் என்ன அர்த்தம்?

"பூஜா" என்பது வடமொழிச் சொல். வழிபாட்டு முறைகள் அனைத்துக்கும் உண்டான ஒரு பொதுச்சொல். ஆனால் தீவிரத் தமிழ் அன்பர்கள் 'பூசை' என்பது தமிழ்ச் சொல் என்று சாதிப்பார்கள். 'பூ செய்' அதாவது பூவினால் செய்யப்படும் செயல் என்று பொருள் சொல்வார்கள். அப்படி அர்த்தம் செய்தால் பூ இல்லாமல் நடந்தால் அது பூசையே இல்லை என்றாகிவிடும். இது வீண்பிடிவாதமான அர்த்தம். தமிழில் வழிபாடு என்பது ஆயிரம் ஆயிரம் அர்த்தம் தருகிற அழகான சொல்.

ஆனால் பொதுவாகப் பூசையில் பூவுக்கு அதிக மரியாதை உண்டு. மலரால் நாமத்தைச் சொல்லி அர்ச்சிப்பது... மந்திரங்களைச் சொல்லிச் சமர்ப்பணம் செய்யும்போது மலர் தூவி வழிபாடு செய்வது.. மந்திர புஷ்பம் ஆகிறது. சங்க காலத்தில் கூட பூத்தூவி இறைவனை வணங்குவது வழக்கமான வழிபாட்டுமுறை.

தற்போதைய காலத்தைப் போன்ற தேங்காய், பழ அர்ச்சனை குளறுபடிகள் இல்லாத ஏழாம் நூற்றாண்டில் இறைவன் சந்நிதியில் பூவும் நீரும் இட்டு வணங்கும் பழக்கம் இருந்திருக்கிறது. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் பெருமான் "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" என்றும், "பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பவன்" என்றும் பாடுகிறார். இறைவனை மலர்தூவி வழிபட மக்கள் கையில் பூவும் நீரும் கொண்டு வரிசையாக நிற்கிறார்களாம். அவர்களில் சிலரது உள்ளீடு இல்லாத பொய் பக்தியைக் கண்டு சிவபெருமான் விலா நோகச் சிரிக்கிறாராம்... என்ன கற்பனை பார்த்தீர்களா?

இப்பொழுதும் காசி மாதிரி இடங்களில் பூவும் நீரும் இட்டு இறைவனை வணங்குவதே பழக்கமாக இருக்கிறது! ஆனால் ஏன் பூ இடுகிறோம் என்பது மட்டும் பலருக்குப் புரிவதே இல்லை.

நமது இதயம் தாமரை மொட்டு மாதிரி இளம் சிவப்பு நிறத்தில் இருக்கிறது. அந்த இதயத் தாமரையில் உயிராக இறைவன் உறைகிறார். அதை உணர்ந்து உள்ளத் தாமரையை இறைவனுக்கு அர்ச்சிக்கும் பாவனையைப் புறத்தில் செய்யவே தாமரை புஷ்பத்தால் இறைவன் திருவடித் தாமரையை அர்ச்சிக்கிறோம்.

சிவனுக்குக் கொன்றை, முருகனுக்குக் கடம்பு, அம்பாளுக்குத் தாழம்பூ, மகாலட்சுமிக்குத் தாமரை, சரஸ்வதிக்கு வெண்தாமரை என்றெல்லாம் நாம் வகுத்துக் கொண்டு பூசிப்பது இந்து மக்களின் கலையுணர்ச்சியின் வெளிப்பாடு. பலவித மலர்களின் இனம் அழியாதபடி செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடு.


அதிகாலை எழுந்து, முகை அவிழும் மலர்களைப் பறித்து, தொடுத்து அர்ச்சனை செய்வது உண்மையில் ஓர் ஆனந்தமான அனுபவம். பூக்களின் வண்ணம், மணம், ஒளி, புதுமை இவை நம்மை எங்கோ ஓர் ஆனந்த உலகத்துக்கு அழைத்துச் செல்லும். அதிலும் வண்டு தொடா மலரையே இறைவனுக்கு அர்ச்சிக்க வேண்டும் என்பது சாத்திரம். வண்டு தொடாத மலர் பறிப்பது என்றால் அதிகாலை எழுந்தால் தான் முடியும். அதிகாலையில் மலர் மணம் நுகர்வது ஓர் அற்புதமான அனுபவம்தான்.

ஆனால் செடியில் இருந்து உலக்கி, குலுக்கிப் பறித்தால்தான் பக்தி என்பது இல்லை. செடி கொடிகளிலேயே மலர்களை விட்டுவிட்டு, அந்த ரசனையிலே ஆஹா என்று இறை உணர்வு பெற்றும் பூசை செய்யமுடியும்.

பெர்னார்ட்ஷா அவர்கள் வீட்டு மேசையில் உள்ள பூங்கொத்து சாடியில் அதில் பூக்கள் இருக்காது.

"ஷா... உங்களுக்குப் பூக்கள் என்றால் பிடிக்காதோ... உங்கள் வீட்டு பூச்சாடிகள் பூங்கொத்துகள் காலியாகவே உள்ளனவே?" என்று ஒருவர் கேட்டார். ஷா கோபமாகச் சொன்னார்... "எனக்குக் குழந்தைகளைக் கூட மிகப்பிடிக்கும். அதற்காக அவர்களது தலைகளைக் கிள்ளி மேசை மீதா வைத்துக் கொள்ளமுடியும்? அவர்களிடமே தலைகளை விட்டுவிட்டுத் தானே ரசிக்கிறோம். நானும் அப்படித்தான், செடிகளிடமே பூக்கள் இருப்பதை ரசிக்கிறேன்" என்றார்.

இந்தக் கருத்தைத் தாயுமானவர் 'நான் பூப்பறித்துப் பூசிப்பதில்லை... ஆனால் பூசை செய்கிறேன்' என்ற பொருளில் பாடினார். அருச்சுனனுக்கு தான் பெரிய சிவபக்தன்; தன்னைப் போல பீமன் பூசை செய்வதில்லை என்று கர்வம் கூட உண்டு. ஒருமுறை அவர் கைலாசம் போனபோது வண்டிவண்டியாகப் பூக்களை ஓடிஓடிக் கொண்டு வந்து பூதகணங்கள் சிவபெருமான் காலடியில் மூச்சிறைக்கக் கொட்டின. இவ்வளவு பூக்களை வைத்து பூசிப்பது யார் என்று அர்ச்சுனன் ஆச்சரியமாகக் கேட்டான். 'பீமன்' என்று பதில் வந்தது. "அவர் சோம்பேறி. பூப்பறித்து பூசை செய்து நான் பார்த்ததே இல்லையே" என்றான் அர்ச்சுனன். சிவபெருமான் பூமியைக் காட்டினார்.



அங்கே வழியில் போய் கொண்டிருந்த பீமன், இருபக்கமும் பூத்திருக்கும் பல வண்ண மலர் களைப் பார்த்துப் பார்த்து வியந்தபடி, "ஆஹா... என்ன அழகு... என்ன அழகு.. இவையாவும் நம்மையாளும் அந்தச் சிவபெருமானுக்கே உரியவை... சிவார்ப்பணம்" என்று சிவபாவனையுடன் சொல்லிக் கும்பிட்டான். அவ்வளவு தான். பூதகணங்கள் காட்டு மலர்கள் அனைத்தையும் அள்ளி வந்து சிவனுக்கு அர்ப்பணித்தார்கள். பூசையில் பூ முக்கியம் அல்ல. பூசிப்பவனின் இதயப் பூ தான் முக்கியம்.

சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## கணக்காளர் சேவையை கேவலப்படுத்தாதீர்

01.02.2012அன்று வெளியான உதயன் பத்திரிகையில் கணக்காளர் சேவையில் ஆளுநர் செய்த ஊழல் என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. நான் எச்.என்.டி. ஏ பயின்று எழுதுவினைஞர் சார்ந்த தொழில் செய்து இளைப்பாறியவன் என்பதாலும் எனது சேவையைச் செய்தவர்களைக் கேவலப்படுத்தியதில் மன உளைச்சலுக்குள்ளாகியதனால் இவற்றை எழுதுகின்றேன். அத்தோடு எனது உறவினர் ஒருவர் கணக்காளர்(பதில்) நியமனம் பெற்றாலும் எனக்கு நன்கு தெரிந்த விடயத்தை தங்கள் முன்பு சமர்ப்பிக்கின்றேன்.

அரச, உள்ளூராட்சி சேவையின் பதில் கணக்காளர் நியமனம் எனக்குத் தெரிந்த வரையில் 35 வருடங்களுக்கு மேல் நடைமுறையில் உள்ளது. வெற்றிடம் இருந் தால் கணக்குப் பகுதியில் அனுபவமுள்ள கணக்கியல் தகைமை உள்ளவர்கள் பதில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் பின்பு அரச கணக்காளர் சேவைக்கான ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நிரந்தர கணக்காளர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள். அவர்களுக்கு பதில் நியமனம் பெற்று சேவையாற்றிய காலத்தையும் அவர்களின் சேவையில் சேர்க்கப்பட்டிருந்தன.

1981 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபை உருவாக்கிய போது, கணக்கி யல் பகுதித் தகைமை(H.N.D.A-2ஆம் வருடம்) உள்ள கணக்குப் பதிவாளர்கள் நாட்டின் சகல மாவட்டங்களிலும் பதில் கணக்காளர்களாக நியமனம் பெற்று பின்பு கணக்காளர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து நிரந்தர கணக்காளர்களாக இருந்தார்கள். இதே போல் யாழ்.மாநகர சபை, திருகோணமலை நகர சபை ஆகியவற்றிலும் பதில் கணக் காளர்கள் நியமனம் பெற்றார்கள். அதற்காக உள்ளூராட்சி கணக்காளர்கள் அவர்களை எதிர்க்கவுமில்லை. இழிவுபடுத்தியதுமில்லை.

அதுமட்டுமில்லாமல் கணக்காளர்கள் உயர் தகைமை கொண்டவர்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான தகைமையாக நிரந்தர பரீட்சைக்கு, பட்டதாரியாக இருக்கவேண்டும். H.N.D.A தகைமை பெற்றிருக்க வேண்டும். பட்டயக் கணக்காளர், இடைநிலை- C.I.M.A இடைநிலை மற்றது. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு 10 வருடங்கள் சேவை ஆற்றிய எழுதுவினைஞர்கள், 5 வருடங்கள் சேவையாற்றிய பகுதித் தகைமை கொண்ட ஏனையவர்கள். இவர்கள் விண்ணப்பிக்கலாம். மாறாக பட்டயக் கணக்காளராகவோ அல்லது முகாமைத்துவக் கணக்காளராகவோ இருக்க வேண்டும் என்பதில்லை.

தற்போதுள்ள எழுதுவினைஞர்கள், வர்த்தகம் சார்ந்த பட்டதாரிகளாக ஏராளம் பேர் உள்ளனர். நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் அனைவரும் பட்டதாரிகள். ஆளுநர், கணக்காளர் வெற்றிடங்கள் ஏற்பட்டபோது தென்பகுதியிலுள்ள பெரும்பான்மையின கணக்காளர்களை இங்கு சேவையாற்ற ஏற்பாடு செய்யவில்லை. வடக்கு மாகாண சபை மூலம் ஊழியர்களிடையே பதில் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் படியாக அறிவித்து, தகைமைகளாக கணக்குப் பகுதியில் சேவையாற்றியதுடன் கணக்கியல் தகைமைகளான H.N.D.A மற்றும் வர்த் தகம் சார்ந்த பட்டதாரிகளாக இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

விண்ணப்பங்களில் இருந்து கணக்குப் பகுதியில் கூடிய அனுபவமுள்ளவர்களையும் வர்த்தகம், கணக்கியல் சார்ந்த துறைகளில் தகைமை உள்ளவர்களையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து பலபேர் கொண்ட குழுவால் கேள்விகள் கேட்கப்படும் பதில் கணக்காளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். நான் இதுபற்றி விசாரித்தபோது நேர்முகப் பரீட்சையில் கேட்ட கேள்விக்குச் சரியாக பதில் சொல்லியிருந்தேன். ஆனால் எனக்கு கிடைக்குமென்று எதிர்பார்க்கவில்லை என்று தெரிவித்தார்.

இறுதியாக, தகுதியற்றவர்களான எழுதுவினைஞர்களையும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களையும் நியமித்தது கணக்காளர் சேவைக்கு அவமானம் எனக் குறிப்பிட்டு ஊழியர்களை கேவலப்படுத்தலாமா நிரந்தர கணக்காளர் நியமிக்கும்வரைதானே பதில் கணக்காளர் பதவி பின்பு விட்டுவிடுவார்கள்.

ச.க.சிவம்

## கருணாவும் அரைமந்திரி பதவியும்

கருணா மீள்குடியேற்ற அமைச்சின் அரைமந்திரியாகப்பட்டை கட்டப்பட்டவர். இப்பொழுது எம்முன் எழும் கேள்வி மீள்குடியேற்ற அமைச்சரா? மீள்குடியேற்றத்தைத் தடுக்கும் அமைச்சரா என்பதுதான். இவருக்கு மேல் உள்ள அமைச்சரும் இனவாதிகளான பௌத்த பிக்குகளும் தமிழர் பகுதியில் சிங்களவர் களைக் குடியிருத்துவதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

ஆனால் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த மண்ணில் தமிழர் குடியமரத் தடை. சம்பூரில் இருந்து புதுமாத்தளன் வரை நீண்டு செல்கிறது. வளமான தமிழ் மண்ணில் வசதி படைத்த சிங்களவர் குடியேற இங்கு வாழ்ந்து வந்த பூர்வீகக் குடியினர் மாத்தறையிலும் அம்பாந்தோட்டையிலும் குடியேற்றப்படுவார்களா? ஏனெனில் மாத் தறை, அம்பாந்தோட்டைப் பகுதியினரே இங்கு குடியமர்த்தப்படுபவர்கள். அவர்கள் விட்டு வந்த காணிகளில் இவர்கள் குடியமர்த் தப்படுவதுதான் ஜனாதிபதி கூறும் ஒரு நாடு ஓர் இனம் என்பதற்குப் பொருந்தும்.

இன நல்லிணக்கத்துக்கும் இது ஓர் எடுத்துக் காட்டாகும். இதைப் பட்டை கட்டிய கருணா இவரின் எஜமானருக்கும் எடுத்துக் கூறுவாரா?

முகவரி இல்லாமல் இருந்த கருணாவுக்கு முகவரி கொடுத்தவர்கள் தமிழ் மக்கள். இப்பொழுது தன் உயிரைத் தக்க வைத்துக் கொள்ளவும் சொகுசு வாழ்க்கைக்கும் விலைபோகும் இந்த வீணர்கள் இருப்பதிலும் இறப்பதுமேல்.

யே. தமிழ்குரல்

## சாவகச்சேரி வைத்தியசாலை கட்டட திறப்பு விழாவின் விசித்திரம்

ஒரு புதிய வீடு கட்டி முடிந்தால் ஆச்சாரியார் பொங்கிப் படைத்த பின்னர்தான் வீட்டு உரிமையாளர்கள் கொண்டாடுவார்கள். கடந்த 6 ஆம்திகதி சாவகச்சேரி வைத்தியசாலை கட்டடத் திறப்பு விழா. ஆனால் அக்கட்டடத்துக்கு நிதி வழங்கியவர்கள், வழங்க ஏற்பாடு செய்தவர்கள் பற்றி ஒரு வார்த்தை தன்னும் ' அங்கு பேசப்படவில்லை. 'அரசியல் விற்கப்பட்டது' தான் உண்மை நிகழ்வு.

சாவகச்சேரி வைத்தியசாலைக் கட்டடம் கட்ட துணை நின்றவர்களையும் நிதி வழங்கியவர்களையும் முறையாக அழைத்து உபசரித்து மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கும் விழாவாக நடத்தி இருந்தால் பாராட்டக் கூடியது.

ம.வேலாயுதம், நல்லூர்.

## தனியார் பஸ் சாரதிகள் திருந்துவார்களா?

அம்மை அப்பனே இது என்ன உலகம். போர் இடம்பெற்ற காலப்பகுதியில் ஹெலி, பொம்மர், கிபிர் ஆகிய குண்டு வீச்சு விமானங்களைக் கண்டு மக்கள் அஞ்சினார்கள் . ஆனால் இப்போ தனியார் பஸ் மற்றும் டிப்பர் போன்ற வாகனங்களைக் கண்டாலே வீதியை விட்டு விலகி நிற்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.


தனியார் பஸ் சாரதிகள் ஒருவரை யொருவர் முட்டி மோதுண்டு ஏட்டிக்குப் போட்டியாக ஓடுவதும், தமது பணப் பையிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். வீதி ஒழுங்கு பற்றியோ, மனித உயிர் பற்றியோ அக்கறை கொஞ்சம் கூட இல்லாமல் பணத்துக்காக போட்டா போட்டியில் வாகனத்தைச் செலுத்துகிறார்கள்.

தப்புச் செய்யும் சாரதிகளுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கவேண்டும்.

இ.ஸ்ரீதரக்குருக்கள், மடத்தடி வீதி, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகு சேர்க்கும் தேங்காய்



நமது சமையலில் முக்கிய இடம்பெறும் தேங்காய், நமது தேகத்தை அழகாக வைத்துக்கொள்ளவும் உதவுகிறது. தலை முதல் பாதம் வரை மென்மை, பளபளப்பை தாராளமாய் அள்ளித்தரும் தேங்காய், நம்மை தன்னம்பிக்கையுடன் நடைபோட வைக்கும் என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை.

* வழுக்கல் தேங்காயை நன்கு அரைத்து, அதனோடு சிறிதளவு இளநீர் கலந்து முகத்தில் கீழ் இருந்து மேல்நோக்கி பூசி, அது உலர்ந்ததும் நீர் கொண்டு சுத்தம் செய்துகொள்ள வேண்டும். தினமும் இப்படி செய்து வந்தால் மாசு மறுவின்றி முகம் மிளிரும். கரும் புள்ளிகள் இருந்தால் கூடிய விரைவில் அவை காணாமல் போய்விடும்.

* வெயில் காலங்களில் சூரியஒளி பட்டு முகம் கறுப்பாவது வழக்கம். பலருக்கு வெளியூர் சென்றால் கூட இதுபோன்ற நிலை ஏற்படும். முகம் கறுப்பாவதைத் தடுக்கவும் தேங்காய் உதவுகிறது. தேங்காய் பால் 2 ஸ்பூன், கடலை மாவு ஒரு ஸ்பூன் எடுத்து, இரண்டையும் கலந்து பசைபோல் ஆக்கிக்கொள்ள வேண்டும். இந்தப் பசையை முகத்தில் பூசிக்கொண்டு, உலர்ந்ததும் தண்ணீர் கொண்டு கழுவிவிட வேண்டும். வாரம் இருமுறை இப்படி செய்து வந்தால் முகம் பிரகாசமாகும்.

கேரளப் பெண்கள் கொள்ளை அழகுடன் ஜொலிப்பதற்கு தேங்காயும் ஒரு காரணமாம்.

# மணப்பெண்ணுக்கு செய்யவேண்டிய அலங்காரங்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

**சிகையலங்காரம்**

மணப்பெண்ணின் அழகுக்கு மெருகூட்டுவது சிகையலங்காரம். முன்புறம் முகத்தின் மேற்புறம் சிகையலங்காரம் செய்வதற்கு 'புரொண்ட் செட்' என்று பெயர். இதற்கு பொருந்தும் அளவில்தான் பின்புறம் தலையை அலங்கரிக்க வேண்டும். பின்னல் போட்டு ஜடை அலங்காரம் செய்து, பின்னலில் பூக்களை வைத்துக்கொள்ளலாம். அல்லது அதற்குப் பதிலாக ஜரிகை, முத்து, கற்களால் செய்யப்பட்ட மோடி பைப்கள், பைப் பின்னல், ஐந்துகால் பின்னல், மேலே கொண்டை கீழே பின்னல் போடுவது என்று பல வகைகள் உள்ளன.

கொண்டை போடும்போது மணப்பெண்ணின் உயரம், பருமன், கழுத்தின் உயரம் போன்றவற்றைக் கணக்கிட வேண்டும். குட்டையான பெண்களுக்கு சற்று தூக்கியவாறு கொண்டையும், நீளமான கழுத்துள்ளவர்களுக்கு கழுத்தை மறைக்கும் அளவில் கொண்டையை இறக்கியும் போட வேண்டும். முகம் நீளமாக உள்ளவர்களுக்கு காதுகளை மறைக்கும் விதத்தில் சிறிது முடியை எடுத்து சுருட்டி விடலாம். அகலமான முகத்தை உடையவர்கள் முடியைத் தூக்கிக் கட்ட வேண்டும். நடுவகிடு எடுத்து அதில் நெற்றிச்சுட்டியை அணியலாம். அல்லது காதின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு முடியை வாரி எடுத்துச் சென்று பின்குத்தி விட்டு, பின்னால் அழகாக கொண்டை போடலாம்.



**திருமணப் புடைவை**

திருமணப் புடைவை வாங்கும்போது, அவை குறைந்தது 2 ஆண்டுகளாவது அணிய வேண்டியிருப்பதால், தரமான புடைவையாக பார்த்து வாங்குங்கள். அவை நீங்கள் அணியும் நகைகளுக்கு பொருத்தமாக இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். உதாரணமாக, அரக்கு நிற ஜரிகை போடர் போட்ட பட்டுப்புடைவை கறுப்பாக சற்று குண்டான பெண்களுக்கு பொருத்தமாக இருக்காது. சிவந்த மேனியுடைய பெண்களுக்கு மிளகாய் பழ சிவப்பில் மெல்லிய ஜரிகை போடர் போட்ட பட்டுப்புடைவை எடுப்பாக இருக்கும்.

போட்டோவில் பளிச்சென்று தெரியக்கூடிய வகையில் உடைகளைத் தேர்வு செய்யுங்கள். வாடாமல்லி, மயில் கழுத்து நிறம், தேன் நிறம் போன்ற வண்ணங்கள் ரிசப்ஷனுக்கு ஏற்றவை. பட்டு சேலைக்கு 'ரா' சில்க், பருத்தி வகையில் உள்ள சோளிகள் அணியலாம். நவீன உடைகளை அணிய விரும்புபவர்கள் தங்களுக்கு பொருத்தமான காக்ரா சோளி அணியலாம்.

## தலைமுடி செழித்து வளர முருங்கை இலை சூப்

தினமும் முருங்கை இலை சூப் செய்து பருகினால் தலைமுடி நன்கு செழித்து வளர ஆரம்பிக்கும்.

நல்ல பலன் கிடைக்கும். தொடர்ந்து 3 மாதங்கள் சூப் செய்து பருகவேண்டும்.



**முருங்கை இலை சூப் செய்யும் முறை**

| | |
|---|---|
| முருங்கை இலை | - 2 கப் |
| வெண்ணெய் | - 1 தேக்கரண்டி |
| கோர்ன் பிளோர் | - 1 தேக்கரண்டி |

உப்புத்தூள், மிளகுத்தூள் - சிறிதளவு

முதலில் 2 டம்ளர் தண்ணீர் சேர்த்து சுத்தம் செய்து வைத்த இலையைப் போட்டு 7 நிமிடங்கள் வேக வைத்துகொள்ளவேண்டும். இலையில் உள்ள சத்து தண்ணீரில் இறங்கும் வரை.

அதை உடனே எடுத்து வடிகட்டி (இல்லையெனில் சத்துக்கள் திரும்பவும் கீரைக்கே சென்றுவிடும்), தேவைப்பட்டால் வெண்ணை சேர்க்கலாம் சூட்டி லேயே உருகிவிடும். தடிப்பாக வரவேண்டும் என்று நினைப்பவர்கள் கோர்ன் பிளோரை சிறிது தண்ணீரில் கரைத்து சேர்த்துக்கொள்ளலாம்.(வடிகட்டியபின் இதை சேர்த்து இரண்டு கொதி விட்டு இறக்கவும்) பின்பு மிளகுத்தூள், உப்புத்தூள் சேர்த்து பருகவேண்டும்.

# ஆண்களின் தலைமுடி அழகாக இருக்க



பெண்களைப் பொறுத்தவரை முன்பெல்லாம் நீண்ட தலைமுடியுடன் திகழ்வதையே அதிகம் விரும்புவார்கள். காலப் போக்கில் 'பொப்' உள்ளிட்ட பல்வேறு கட்டிங்குகள் வந்துவிட்டன.

பெண்கள்தான் தலையலங்காரத்திலும், தலை முடி பராமரிப்பிலும் அதிக ஆர்வம் காட்டுவார்கள் என்பது பொதுவான கருத்து. அதில் பாதி உணமையும் கூட. அதேசமயம், தற்போதைய இளைஞர்களும் கூட தலை முடியில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

அழகிய, ஸ்டைலான, சற்றே நீளமான தலை முடியை பல்வேறு ஆண்களும் கூட விரும்புகிறார்கள். அதாவது டோனி ஸ்டைலில் முடி வளர்ப்பதில் பலருக்கும் ஆர்வம் அதிகமாகவே உள்ளது.

தலைமுடிப் பராமரிப்பு, தலைமுடியை நன்றாக வைத்துக் கொள்வது குறித்து சில டிப்ஸ்கள்

* முதலில் நமது தலைமுடியின் தன்மையை அறிந்து கொள்ள வேண்டும். அதாவது நமது முடி அலை அலையாக இருக்கிறதா அல்லது சுருள் சுருளாக இருக்கிறதா அல்லது வளைந்து நெளிந்து இருக்கிறதா அல்லது கோரையாக இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அதற்கேற்றவாறு நாம் பராமரிப்பை மேற்கொள்ள முடியும்.

* இயற்கையான எண்ணெய் வகைகள் நமது தலைமுடியை வலுப்படுத்தும். எனவே அடிக்கடி நமது தலைமுடியை தண்ணீரால் கழுவக்கூடாது. அதற்கு பதிலாக நமது முடியின் மிருதுவான தன்மைக்கு ஏற்றவாறு நல்ல ஷம்புகளை பயன்படுத்தலாம். பின் தலையை நன்றாகக் காயவைக்க வேண்டும்.

* ஈரம் காய்வதற்கு முன்பாக தலை வாரினால் அதிகமாக முடிகொட்டிவிடும். எனவே தலை நன்றாக காய்ந்த பிறகுதான் தலை வாரவேண்டும். தலை முடியில் தூசு இருந்தால் விரல்களைக் கொண்டு மிருதுவாக எடுக்க வேண்டும்.

* ஒரு சில நேரங்களில் நமது தலைமுடி வரட்சியாகக் காணப்படும். அப்போது நல்ல சலூனுக்குச் சென்று ட்ரிம் செய்யலாம். அப்போது நமது முடி அழகாக மாறும்.

* நீளமான முடியை வளர்க்க விரும்பும் ஆண்கள் முறையான உணவுப் பழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். உணவில் நிறைய விற்றமின் சத்துக்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

* ஃப்ளானல் தலையணைகள் நமது தலை முடியை விரைவில் உலர்த்திவிடும். எனவே அவற்றை நாம் பயன்படுத்தக்கூடாது.

* குறிப்பிட்ட இடைவெளியில் ஹேர் ஸ்பா செய்ய வேண்டும். அது நமது தலைமுடியை மினுமினுப்பாக வைத்திருக்கும்.

பொதுவாக தலைமுடி 30 நாள்களுக்கு அரை இன்ச் அளவிற்குதான் வளரும். எனவே சலூன் போய் வந்தவுடன் முடி நீளமாக வளர்ந்துவிடும் என்று எதிர் பார்க்கக் கூடாது. மிகவும் பொறுமையாக, உரிய முறையில் தலைமுடியை பராமரித்து வந்தால் தலை முடி நன்றாக இருக்கும்.

# டென்ஷனைக் குறைத்தால் அழகாக இருக்கலாம்



எப்பொழுது பார்த்தாலும் சிரித்த முகத்துடன் எதையும் சாதாரணமாக எடுத்துக் கொள்பவர்கள் ஒரு ரகம். எதற்கெடுத்தாலும் டென்சன் ஆகி கத்தித் தீர்ப்பவர்கள் ஒரு ரகம். சாதாரண ரக ஆட்கள் என்றைக்கும் ஒரே மாதிரி இருப்பார்கள். அவர்களின் அழகு என்றைக்குமே மாறாது. உடல்நலத்திற்கும் எந்த தீங்கும் ஏற்படாது. காரணம் அவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் இருப்பதுதான். ஆனால் டென்சன் காரர்கள் அழுது வடிந்து கொண்டு, வயதான தோற்றத்திற்கு தள்ளப்பட்டுவிடுவார்கள். நோயும் எளிதில் தாக்கத் தொடங்கிவிடும். அதற்குக் காரணம் அவர்களின் ரென்சன்தான் என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்தது.

**பியூட்டி ப்ரெஸ் யாருக்கு?**

இயற்கையான அழகு யாருக்கு கிடைக்கும்? என்கிற கோணத்தில் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் ஓர் ஆய்வை மேற்கொண்டார்கள். 500 இற்கும் மேற்பட்ட இளம் ஆண்கள் மற்றும் பெண்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களிடம், தினமும் அவர்கள் மேற்கொள்ளும் செயல்களில் இருந்து கேள்விகள் கேட்கப்பட்டன.

ஆய்வின் முடிவில் அடிக்கடி டென்ஷனாக இருப்பவர்களைக் காட்டிலும் டென்ஷன் ஆகாமல் எதையும் சாதாரணமாக எடுத்துக்கொள்பவர்கள் 'ப்ரெஷ்' ஆகவும், அழகாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

**அழகிற்கும் மனதிற்கும் தொடர்பு**

அழகுக்கும் மனதிற்கும் நிறையவே தொடர்பு இருக்கிறது. அந்த மனதை இயற்கையாக அதாவது, டென்ஷன் இன்றி வைத்துக்கொண்டால் முகமும் அழகாக இருக்கும்; உடலும் ஆரோக்கியமாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதனால் நம் முன்னோர்கள் மனதை அமைதியாக வைத்துக்கொண்டால் முதுமை நம்மை அண்டாது என்று தெரிவித்துள்ளனர்.

என்ன டென்சன் காரர்களே நடப்பது நடந்துதான் தீரும். எனவே உங்கள் டென்சனை தூக்கிப்போடுங்கள் அழகாக மாறுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org